27 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416.282.8059
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
உங்கள் வாகன, வீட்டு (for your Home & Auto) காப்புறுதிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 27 | பாலம் 16 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 15, 2017

# இராணுவத் தீர்வு தயாராக உள்ளது!

வடகொரியாவைத் தாக்க இராணுவ ஆயுதங்கள் தயாராகக் குறி பார்த்தபடி உள்ளன (Locked and Loaded) என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் 2017 ஓகஸ்ட் 11இல் வடகொரியாவிற்குக் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடகொரியாவின் தலைவர் Kim Jong-un இன் அண்மைக்காலத் தொடர்ச்சியான ஏவுகணை மற்றும் சிறிதான (Miniaturization) அணு ஆயுத சோதனைகளையும் அமெரிக்காவின் பிரதேசமான Guamஇற்கு அருகில் நடத்த உள்ள பரீட்சார்த்தத் தாக்குதல் தொடர்பாக Kim Jong-un விடுத்த பயமுறுத்தல்களையும் தொடர்ந்தே அமெரிக்க அதிபர் மேற்கூறிய கடும் எச்சரிக்கையை விடுத்துள்ளார்.




வடகொரியா தவறான முடிவை எடுத்தால் அதன்மீது தாக்க அமெரிக்க இராணுவ ஆயுதங்கள் குறிபார்த்தபடி தயாராக இருக்கின்றன. Kim Jong -un சரியான முடிவை எடுத்து வேறு ஒரு பாதையில் செல்வார் என நம்புகிறேன் என அமெரிக்க அதிபர் தனது Tweetஇல் தெரிவித்தார்.

Bedminster, நியூஜேர்சியில் உள்ள Trump National Golf Club இல் வேலையுடன் கூடிய விடுமுறையைக் கழிக்கும் அமெரிக்க அதிபர் 2017 ஓகஸ்ட் 11 மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் "நான் என்ன சொன்னேன் என்று வடகொரியாவிற்கு புரியும் என்று நான் நம்புகிறேன். நான் என்ன சொன்னேனோ அதையே நான் கருதுகிறேன்" (what I said is what I mean) என்று கூறினார்.

இவ்வாறு தீவிரமான வீண்வார்த்தைகள் (fiery rhetoric) கூறுவது தற்போதைய நிலைமையைச் சீராக்க உதவமாட்டாது என்று கூறுகிறார்களே என ஊடகவியலாளர் கேட்டபோது அமெரிக்க அதிபர் "நான் இவ்வாறு கூறுவதால் தான் அவர்கள் அப்படிக் கூறுகிறார்கள். வேறு ஒருவர் இவ்வாறு கூறியிருந்தால் இது ஒரு மிகத்திறமையான வார்த்தை என்று அவர்கள் கூறியிருப்பார்கள்" என்றார்.

அமெரிக்க அதிபர் மேலும் தெரிவிக்கையில் வடகொரியாவின் தலைவரைக் குறித்து "அவர் பல வருடங்களாக இவ்வாறு பயமுறுத்தல்களை விடுத்து வருகிறார். அவர் Guam இற்கு எதிராகவோ அல்லது எந்த ஒரு அமெரிக்கச்சார்பு நாட்டுக்கு எதிராகவோ ஏதாவது செய்ய முற்பட்டால் அவர் உண்மையிலேயே வருத்தப்பட வேண்டி வரும் அதுவும் மிகவிரைவில் வருத் தப்பட வேண்டிவரும்" என்றார்.

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage

Lexus of Richmond Hill
LEXUS
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
Kumar Jegasothy
Sales Consultant
11552 Yonge Sreet
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY
SELL
INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
Realtor
416.888.7877
www.divhomes.com

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Buying~Leasing~Renting~Selling
A name you can trust
RUTH VIJENDRAN
Full-Time Sales Representative
416.300.5454
ruthvjhomes@gmail.com
ruthvjhomes.com
LISTING COMMISSION 1%
Home is where your story begins, let me help you get there!!!
HOMELIFE/FUTURE REALTY Inc. Brokerage

DENTAL OFFICE
இப்பொழுது 2 இடங்களில்
Dr.Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS(Glasg.)
DENTAL SURGEON
Wisdom Tooth Extraction.
Root Canal.
Gum Treatment.
Tooth Filling.
Dental Implant.
Dentures.
3150 Eglinton Ave. East, Unit #5
Markham & Eglinton
Tel: 416-264-3232
3351 Markham Road., #129
Markham & Steeles
Tel: 416-609-2022

JENA GULASINGHAM
Sales Representative
416.702.2030
jenahomelife@gmail.com
This Special Offer Valid Only This Year
Buy a Home with Me & Listing Commission FREE FREE FREE
HomeLife/Future Realty Inc., Brokerage


$499,000
Oshawa- Detached
Ritson & Taunton, BR:3, WR:3
$549,000
Ajax- Detached
Finished basement, BR:3, WR:4
FINANCING AVAILABLE
Brampton-Detached
Fin. Basement BR: 3+1, WR: 3
$599,999
Pickering-Detached, BR:3+1,
WR: 3 Fin,W/O Bsmt Sep. Entrance
$589,900
Scarborough-Detached
FULLY RENOVATED. BR: 3+1 WR: 3
$729,000
Scarborough-Detached
Fin. Basement BR: 3, WR: 3
$699,000
Scarborough-Detached.
BR: 4+1, WR:2, Fin. Basement
COMMERCIAL, RETAILS & INVESTMENT PROPERTIES ARE ALSO AVAILABLE
15 YEARS OF BUSINESS EXPERIENCE
NOT ENOUGH DOWN PAYMENTS?
CALL ME FIRST.
NO MORTGAGE BROKER FEE
FREE HOME STAGING
Up to $3000 Value, Including Furniture Rental
PROVIDED BY:
EMOH HOME & DESIGN
Sangeetha Kanesathas USC™
Certified UltimateStager™
416 388 4333
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd. Toronto, Ont.
www.remaxace.com
Not intented to solicit buyers/sellers under contract. All properties advertised herein may not be listed by Thas.


Unique HVAC Inc.
Heating & Cooling
Residential & Commericial HVAC Services
Maintenance, Service, Installation
Air Conditioning.
Furnace
Water Heater Tanks
Humidifier
Tankless Water Heaters
BBQ Gas Line
Natural Gas Dryer Install
Fire Place
Electrical Service
We Are Certified Is Your Contractor?
TSSA Certified
Refrigeration Licences
Electric License
Two Million Dollar Liability Insurance
Quality Product. Reasonable Rates. Excellent Craftmansip.
Promotions
Up To $2100 Rebate With a Brande New Install
0% Financing Option With Equalized Payments
HVAC Rentals Starting at $29.99
10 Year Parts + 10 Year Labor Warranty Available
Replace Your Existing Water Heater With Us
And Recieve Up To One Year Free in rental + Free Installation
Contact Us
Vino. (647) 989-4217
Kapilan (647) 981-5224
Thano. (416) 543-5125
www.uniquehvacinc.com
www.facebook.com/uniquehvacinc

# இராணுவத்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இதேவேளையில் தென்கொரியாவும் அமெரிக்காவும் சேர்ந்து ஒரு பெரிய அளவிலான இராணுவ ஒத்திகையை 2017 ஒகஸ்ட் 21 ஆம் திகதியில் இருந்து 31ஆம் திகதிவரை நடத்த உள்ளன. இந்த இராணுவ ஒத்திகையில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட இராணுவ, கடற்படை மற்றும் ஆகாயப்படை வீரர்கள் பங்குபற்ற உள்ளனர். இது வடகொரியாவின் ஆக்கிரமிப்புக்கு எதிரான ஒரு தடுப்பு நடவடிக்கையாக இருக்கும் என அமெரிக்காவும் தென்கொரியாவும் எதிர்பார்கிறது. இவ்வாறு அமெரிக்காவும் தென்கொரியாவும் கடந்த வருடம் நடத்திய ஒரு இராணுவ ஒத்திகையைத் தொடர்ந்தே வடகொரியா தனது ஐந்தாவது அணு ஆயுத சோதனையைச் செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

வடகொரியாவின் நண்பனும் அமெரிக்காவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியுமான சீனா, எல்லோரும் எச்சரிக்கையுடன் பேசவும் செயல்படவும் வேண்டும் எனக் கேட்டுள்ளது. வீணாக இரு பகுதியும் தமது பலங்களைக் காட்டி வீண்வார்த்தைகள் பேசாது, தற்போதைய சூழ்நிலையை எளிதாக்க உதவுவதற்கும், ஒருவர் மீது மற்றவர் நம்பிக்கை வைப்பதற்கும் ஏற்றவாறு பேசிச் செயல்பட வேண்டும் எனச் சீனாவின் வெளிநாட்டு அமைச்சு தனது இணையத்தளம் மூலம் கேட்டுள்ளது. வட கொரியாவின் தொடர்ச்சியான ஏவுகணைப் பரிசோதனைகளையும், அமெரிக்க- தென்கொரிய இராணுவ ஒத்திகையையும் சீனா கண்டித்து தனது விரக்தியையும் ஏமாற்றத்தையும் வெளியிட்டுள்ளது. ஜேர்மன் அதிபர் Angela Merkel மற்றும் றஷ்சிய வெளிநாட்டு அமைச்சர் Sergei Lavrov இருவரும் தனித்தனியே வடகொரியாவினதும், அமெரிக்காவினதும் தீவிரமான வீண்வார்த்தைப் பிரயோகங்களையிட்டு தமது கரிசனையை வெளியிட்டுள்ளனர்.




இதேவேளை வடகொரியா தனது அடுத்த ஏவுகணைப் பரிசோதனையாகத் தனது நடுத்தர ஏவுகணையான பல Hwasong -12களை ஜப்பானுக்கு மேலாக Guam ஐ நோக்கி செலுத்தி Guam இற்கு சொந்தமான 40கி.மீ கடல் எல்லைக்கு வெளியே Guam ஐ சுற்றிவர விழுமாறு செய்யப்போவதாகக் கூறியுள்ளது.

இந்த ஏவுகணைப் பரிசோதனைக்குரிய திட்டங்கள் தயாராக உள்ளன என வடகொரியா தெரிவித்துள்ளது. இவ்வாறு ஒரு ஏவுகணைப் பரிசோதனையை வடகொரியா செய்யுமானால் அது அமெரிக்காவின் பிரதேசத்திற்கோ, அமெரிக்காவின் சொத்துகளுக்கோ அல்லது அமெரிக்கப் பிரஜைகளுக்கோ எந்தவித தீங்கையும் விளைவிக்காது. ஆனால் இது வடகொரியாவின் அணு ஆயுத ஏவுகணைகளால் அமெரிக்க பிரதேசத்தையோ அல்லது அமெரிக்க இராணுவ நிலையையோ தாக்க முடியும் என்பதை நிரூபிக்கச் செய்யப்படும் பரிசோதனையாகவே இருக்கும். அத்துடன் இது அமெரிக்கப் பொதுமக்கள் மீது பயத்தை ஏற்படுத்தும் என்பதால் இவ்வாறான ஒரு பரிசோதனையின் வெற்றி வடகொரியாவிற்கு ஒரு உளவியல் போர் வெற்றியைக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Guam தீவு 210 சதுரமைல்களைக் கொண்டது. அதன் சனத்தொகை 162,742. அமெரிக்க இராணுவத்தளம் Guam இன் 30% பரப் பளவில் உள்ளது. Guam மக்கள் அமெரிக்கப் பிரஜாவுரிமையைக் கொண்டிருந்தாலும் அவர்கள் அமெரிக்க வருமான வரி கட்டுவதில்லை மற்றும் அவர்களுக்கு அமெரிக்க அதிபர் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையும் இல்லை. வடகொரியாவிற்கு மிகவும் கிட்டிய அமெரிக்கப் பிரதேசமாக Guam உள்ளது. வடகொரியாவில் இருந்து 3,400 கி.மீ தூரத்தில் Guam உள்ளது. 2017 மே மாதத்தில் வடகொரியா பரீட்சார்த்தமாக செலுத்திய வடகொரியாவின் நடுத்தர ஏவுகணையான Hwasong -12 4,000 கி.மீ தூரத்திற்கு மேல் செல்லும் வல்லமையுள்ளது.

இதைவிட வடகொரியாவின் Pukguksong -2 ஏவுகணை 2,000 கி.மீ வரை செல்லக்கூடியவை. திரவ எரிபொருளைக் கொண்டுள்ள Musudan ஏவுகணை 3,500 கி.மீ வரை செல்லக்கூடியவை.

Guam தீவிற்கு அருகில் அமெரிக்காவின் இன்னொரு பிரதேசமான Commonwealth of the Northern Marina தீவுகள் உள்ளது. இது 15 தீவுகளைக் கொண்ட கூட்டமாகும். இங்கு 53,467 பேர் வாழ்கின்றனர்.




வடகொரியா பல ஏவுகணைகளை இதுவரை பரிசோதித்திருந்தாலும் அது தனது இலக்கைத் துல்லியமாக அடையக்கூடிய திறமையை இதுவரை பெற்றிருக்கவில்லை. இதனால் வடகொரியாவின் Guam தீவை நோக்கிய ஏவுகணைப் பரிசோதனை அமெரிக்கப் பிரதேசமான Guam இற்குச் சொந்தமான 40 கி.மீ இற்குள் தவறுதலாக விழுமானால் வட-கொரியாவால் அமெரிக்காவின் பதில் தாக்குதலை சமாளிக்கவே முடியாது என ஊடகவியலாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.



# தமிழ்ச் சமூகத்தின் மதிப்பினை உயர்த்தும் தெரு விழா

**கனடா மூர்த்தி**

கனடியத் தமிழர் பேரவையினால் வருடாந்தம் கொண்டாடப்பட்டு வரும் தமிழர் தெரு விழா மூன்றாவது தடவையாக இந்த ஆண்டு மார்க்கம் வீதியில் ஓகஸ்ட் 26ஆம் 27ஆம் திகதிகளான சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறவுள்ளது. தமிழர் தெருவிழா இந்தியத் துணைக்கண்டத்திற்கு வெளியே நடக்கும் வீதித் திருவிழாக்களுள் மிகப் பெரியது. கடந்த ஆண்டு 175,000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இவ்வாண்டு இன்னும் அதிகம்பேர் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மார்க்கம் வீதியில் மக்னிக்கல் அவெனியூ விற்கும் பாஸ்மோர் அவெனியூவிற்கும் இடைப்பட்ட பகுதியில் வீதிப் போக்கு வரத்துகள் நிறுத்தப்பட்டு தமிழ் மக்கள் இந்த இரண்டு தினங்களும் திறந்த வெளியில் கொண்டாடவிருக்கிறார்கள். குறிப்பாக முதல்நாள் இரவு 12 மணி வரைக்கும் கொண்டாட்டங்கள் இருக்கப் போகின்றன. வீதியின் இருமருங்கும் உணவுப் பொருட்களை தரும் அங்காடிகள் அமைந்திருக்கும். பெரும் நிறுவனங்கள் தம் வர்த்தக அங்காடிகளையும் அங்கு அமைக்கவுள்ளார்கள். வீதியிலும் மேடையிலும் பாரம்பரிய கலைநிகழ்வுகள், நடனங்கள், இசை எனப் பல்வேறு பொழுது போக்குகளோடு குழந்தைகளுக்கான விளையாட்டுக்களும் அங்கிருக்கும். சுருக்கமாகச் சொன்னால், தாயகத்தை நினைவுறுத்தும் இந்த வீதிக் கொண்டாட்டத்தின்போது, பலத்த உற்சாகத்தில் தமிழ் மக்கள் திளைக்கப் போகிறார்கள். தமிழர் தெரு விழாவில் அதிக மக்கள் கூடுவது அமைப் பாளர்களுக்கு உற்சாகத்தைத் தருகிறது.



மறுபுறம் அதிக அளவில் மக்கள் கூடும் போது எதிர்கொள்ளவிருக்கும் கழிவுப் பொருட்கள் பிரச்சனைகள், வாகன நிறுத்துமிட பிரச்சனைகள் எனப் பல்வேறு பிரச்சினைகளையும் சமாளிக்க வேண்டிய



பொறுப்பும் அமைப்பாளருக்கே உண்டு.

குறிப்பாக தமிழ் மக்களின் இந்தக் கொண் டாட்டத்தால் மார்க்கம் வீதியானது பொதுப் போக்குவரத்திற்கு மூடப்படுவதால், மாற்றுப் வீதிப் பாதைகளை ரொறொன்ரோ மற்றும் மார்க்கம் நகரசபைகள் ஒழுங்கு செய்கின் றன. வீதிப்போக்குவரத்து அதிகாரிகளும், போலீஸ் பிரிவினரும் இதற்குக் கடுமையாக திட்டமிட்டு உதவி வருகின்றனர். மாநில மத்திய அரசாங்கங்களும் இக்கொண்டாட்டத்தை அங்கீகரித்து ஆதரவு அளிப்பதால் விழா அமைப்பாளர்களின் பொறுப்புக்கள் இன்னும் அதிகமாகியிருக்கின்றன.

இவ்விரு தினங்களும் தெருவிழாவில் பங்கு பற்ற வருகின்ற அனைவரும், வீதிப் போக் குவரத்து நெறிமுறைகளையும், வாகனத் தரிப்பு விதிகளையும் மதித்து நடக்க வேண்டும். குறிப்பாகக் கண்டபடி குப்பை




போடுதல் தவிர்க்கப்பட வேண்டும்.
தமிழ்க் கனடியர்களாக நாம் அனைத்துக் கனடியர்களுக்கும் பெருமையுடன் நடத்திக் காட்டும் தெருவிழா 2017 சிறப்பாக நடைபெறுவது "நம் சமூகத்தின் மதிப்பினைப் பிற சமூகத்தினரிடையே உயர்த்திவைக்கும்" என்பதை மனதில் நிறுத்துவோம்.






அம்மா
நகை அடைவு மாடம்



AMMA PAWN BROKER
வர்த்தகத்துறையில் நீண்டகால முன்னோடிகளான அம்மா நகைமாடத்தின் சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டியுடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்

2425 Eglinton Ave. E
Scarborough, ON
(சங்கர அன் கோவுக்கு அருகில்)
416-757-0034
416-994-3861
Downtown: 416-921-0034
ammapawnbroker@gmail.com

1.5%
முதல்
2%
$1000ற்கு
மாதம்
$20 மட்டுமே
(Month)

- நம்பிக்கை
- நாணயம்
- உத்தரவாதம்

அம்மாவுக்கு நிகரான சேவை
அம்மா நகை அடைவுமாடமே

உங்கள் பழைய நகைகளை
நியாயமான விலையில்
வாங்கலாம்/விற்கலாம்

அரச அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவு சேவை

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



## மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

WIN UP TO
$100,000*
Everyone Who Funds
A Mortgage With US
Ask How !
*See contest rules at
www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.



**வோக் இன்**

**சனி 9.00 - 5.00 மணிவரை**

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**

**ஜெ(Jey) இராசதுரை** MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4　Toll Free : 1-877-366-3487　Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC　Office Phone : 416-391-3232

# ‘ஆவா’ குழு யாரால் எதற்காக உருவாக்கப்பட்டது?

**-விகிர்தன்**

போர் முடிவுற்று எட்டு வருடங்களாகி விட்ட தன் பின்னர், மீண்டும் ஒரு போர் நடவடி க்கை போன்று யாழ். குடாநாடு படையின ரின் சுற்றி வளைப்புக்களால் பதற்ற நிலை க்குள்ளாகியுள்ளது. குடாநாட்டின் பல பகுதி களில் பொலிஸாரும் விசேட அதிரடிப்படை யினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கை களில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக வடமராட்சி - துன்னாலையில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு காட்சிகள் போர்க்காலத்தை நினைவு படுத்துவதாகவே அமைந்தது. ஆனால், ஒரு வித்தியாசம் என்னவெனில், ஊடகவியலாளர்கள் இதன்போது, அப்பகுதி களில் அனுமதிக்கப்பட்டனர். இது ஓரள விற்கு ஜனநாயகத் தன்மையை வெளிப் படுத்தினாலும், இதன் பின்னணியில் வெளி யிடப்பட்டு வரும் கருத்துக்கள் மக்களை அச்சடையச் செய்துள்ளன.

யாழ். குடாநாட்டில் வாள்வெட்டு சம்பவங் கள் கடந்த சில வருடங்களாகவே நடை-பெற்று வருகின்றன. சில இளைஞர் குழுக் களால் இவை மேற்கொள்ளப்பட்டு வருகின் றமை கண்டறியப்பட்டுள்ளது. முழுக்க முழு க்க கொள்ளைச் சம்பவங்களையொட்டியே இந்த வாள்வெட்டு சம்பவங்கள் நடைபெறு வதாகக் கூற முடியாது. சில சம்பவங்கள் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டதாக இருக்கலாம். ஆனால், பல சம்பவங் கள் எதற்காக நடைபெறுகின்றன என்பதை அறிந்து கொள்ளமுடியாமலேயே உள்ளது.

தற்போது, இந்த வாள்வெட்டு நடவடிக்கை யில் ஈடுபட்டுவரும் பிரதான குழுவாக அடையாளம் காணப்பட்டுள்ள ஆவா எனப் படும் குழு தொடர்பில் ஊகங்களாக பல தகவல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. முன்னாள் போராளிகள் இதில் சம்பந்தப் பட்டுள்ளதாக பாதுகாப்புத் தரப்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் தலைவராக முன்னாள் விடுதலைப்புலிப் போராளி ஒருவர் இயங்குவதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதனால், புனர்வாழ்வளிக்கப்பட்டு பொது வாழ்க்கையில் இணைந்துள்ள முன்னாள் போராளிகள் கலக்கமடைந்துள்ளனர். அவர் களின் குடும்பத்தினரும் என்ன நடக்குமோ என அச்சமடைந்துள்ளனர். 12 ஆயிரத்திற் கும் அதிகமான விடுதலைப்புலி உறுப்பினர் கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளதாக இலங்கை அரசாங் கம் கூறி வருகின்ற போதும் அவர்களுக் கான நலத் திட்டங்கள் எவையும் முழுமை யாக மேற்கொள்ளப்படவில்லை. அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை கொண்டு நடத்து வதற்கே முடியாத நிலையிலுள்ளனர்.

கடந்த மஹிந்த அரசாங்கத்தின் போது அவர்கள் தீவிரமாக அச்சுறுத்தப்பட்டு வந்துள்ளனர். அடிக்கடி அவர்கள் படையி-னரால் அழைத்துச் செல்லப்படும் நிலை மைகளும் ஏற்பட்டிருந்தன.அதுமட்டுமன்றி, விடுதலைப்புலிகளை மீளுருவாக்கம் செய் யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவ தாக கூறப்பட்டு அவர்கள் மீதான கண் காணிப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட் டிருந்தன. முன்னாள் போராளிகளின் வீடுக ளுக்கு செல்லும் புலனாய்வாளர்களால் குறித்த முன்னாள் போராளிகள் மட்டு மல்லாது அவர்களின் குடும்பத்தினர்- சிறு பிள்ளைகள் கூட உளவியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு ஆளாக நேர்ந்தது.

தற்போது ‘நல்லாட்சி’ என்ற மகுடத்தின் கீழ் ஆட்சி நடத்தும் அரசாங்கத்திலும் சிக்க லான நிலைமைகள் இவர்களுக்கு ஏற்படுத் தப்பட்டுள்ளன. விடயங்களை தீர ஆராயா மல் தெரிவிக்கப்படும் கருத்துக்களால் ஏற் படும் பாதிப்புக்கள் குறித்து பொறுப்பானவர் கள் கவனத்தில் எடுக்க வேண்டும். ஆவா குழுவில் முன்னாள் விடுதலைப்புலி உறுப் பினர்களுக்கும் தொடர்புகள் இருப்பதாக பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்துள்ள அதேவேளையில், யாழ்ப்பாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாய க்க அதனை மறுக்கும் விதமாக கருத்து தெரிவித்துள்ளார். யாழ். குடாநாட்டில் இடம் பெறும் குற்றச்செயல்கள் அனைத்தினோ டும் முன்னாள் போராளிகளை சம்பந்தப் படுத்தவது தவறானது என்ற பொருள்பட அவர் தென்னிலங்கையில் வைத்து கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஆவா குழுவின் தலைவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பாதுகாப்புத் தரப்பினர் அது தொடர்பான தகவல்களையும் வெளியிட்டு வருகின்றனர். யாழ். குடாநாட்டில் நடைபெற்ற தேடுதல் நடவடிக்கைகளின் போது, குற்றவாளிகள் தென்னிலங்கைக்கு தப்பிச் செல்வதாக கிடைக்கப்பெற்ற தகவல்களைத் தொடர்ந்து தெற்கில் சில பகுதிகளிலும் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. கொழும்பின் சில இடங்களில் வைத்து சில இளைஞர்கள் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.இதனடிப்படை யில், 2014 முதல் பல்வேறு குற்றச் செயல் களுடன் தொடர்புள்ளமை மற்றும் பொலி ஸார் மீது வாள்வெட்டு நடத்தியமை தொடர்பில் தகவல்கள் வெளிப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஆறு சந்தேக நபர்களி டம் ஆவா குழுவின் பின்னணி, அதற்காக நிதிப் பங்களிப்பை வழங்குவோர் குறித்து விரிவாக விசாரணை செய்யப்படுவதாகவும், அக்குழுவின் நோக்கம் குறித்தும் இதன் போது விசேட அவதானம் செலுத்தப்பட்டுள் ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.




2016ம் ஆண்டு நடத்தப்பட்ட விசாரணை களில், புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் ஆவா குழுவின் பின்னணி யில் இருப்பதும், அவர்கள் அரசாங்கத்தை அசௌகரியத்துக்கு உட்படுத்தும் விதமா கவே இவ்வாறான வாள்வெட்டுக்களை முன் னெடுப்பதும் தெரியவந்ததாகவும், தொலை பேசி வலையமைப்பு தகவல்கள், புலனாய் வுத் தகவல்கள் உள்ளிட்டவற்றை வைத்து தீவிர விசாரணைகள் இடம்பெற்றுள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கில், யாழ். குடாநாட்டில் மட்டுமே ஆவா எனப்படும் வாள்வெட்டுக் குழுவினர் செயற்பட்டு வருகின்றனர். வன்னியில் அவர்களின் நடவடிக்கைகள் எவையும் பதி வாகவில்லை. அத்துடன் இந்தக் குழுவி னரின் பிரதான நோக்கம் என்னவென்பதும் இதுவரை புரியாமலேயே உள்ளது. முழுவ துமாக கொள்ளைக்காரர்களாக இவர்கள் செயற்படவில்லை. மோட்டார் சைக்கிள்க ளில் வந்து ஒரு சாகச நிகழ்வை நடத்து வது போன்றே இவர்கள் வாள்வெட்டு நட வடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவர்க ளின் நோக்கம் என்னவென்பது யாருக்கும் தெரியாது. ஆனால், இவர்கள் வடக்கில் மக்களின் இயல்பு வாழ்க்கையை குழப்பு வதற்காக திட்டமிட்டு எவராலும் உருவாக் கப்பட்டவர்களா? என்பதே முக்கியமாக ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

அமைச்சர் ராஜித சேனாநாயக்க சில மாதங்களுக்கு முன்னர் ஊடகவியலாளர் கள் சந்திப்பில் தெரிவித்த ஒரு தகவலை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகவி ருக்கும். முன்னைய அரசாங்கத்தில் பாது காப்பு செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஸவே இந்த ஆவா குழுவை உரு வாக்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். குறி த்த குழுவில் முன்னாள் புலி உறுப்பினர் கள் இல்லை எனவும் ராஜித சேனாரத்ன அப்போது தெரிவித்தார். “ஆவா குழுவை யார் உருவாக்கினார்கள்-ஊக்குவித்தார்கள் என்ற விடயம் எமக்குத் தெரியும். கொடூர மான நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களுக்குத் தேவையான சகல வசதி கள் மற்றும் ஆயுதங்களை வழங்கி, முன் னாள் பாதுகாப்புச் செயலாளரின் வழிகாட்ட லின் கீழ் எனது நண்பரான இராணுவ அதிகாரி ஒருவரே குறித்த குழுவை உரு வாக்கினார். அவர்களின் கீழ்தான் குறித்த குழு இன்றும் இயங்குகின்றது. அன்று குறித்த குழு தமிழ் செயற்பாட்டாளர்களை முடக்குவதற்காக இயங்கியிருக்கலாம். ஆனால், இன்று செயற்படுவதற்கான கார ணம் என்ன? இவர்கள் தற்போது இந்த அரசை கவிழ்க்க முயல்கின்றனர். இது குறித்து இரகசிய புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்ய வேண்டும். குறித்த குழுவில் முன்னாள் புலி உறுப்பினர்கள் இல்லை. புலம்பெயர் தமிழர் களுக்கும் தொடர்பில்லை. முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் இராணுவ அதிகாரி கள் இதன் பின்னணியில் செயற்படுவது சட்டரீதியாக நிரூபிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்” என அவர் மேலும் தெரிவித்தார்.

ஆவா குழு குறித்த விசாரணைகளை தற் போது, இந்தக் கோணத்தில் முன்னெடுக்க வேண்டியதே முக்கியமானது. யாழ். குடா நாட்டில் அச்சுறுத்தல்களை மேற்கொண்டு, பொதுமக்களின் இயல்பு வாழ்வை சீர்குலை க்கும் குழுக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பது அனைவரி னதும் பொதுக் கருத்தாகவுள்ளது. ஆனால், ஆதாரமின்றி முன்னாள் போராளிகளை இதனுடன் இணைப்பதென்பது பாரதூரமான - பாதிப்பை ஏற்படுத்தும் காரியமாகும்.

படைத்தரப்பு கூறுவதைப் போல், முன்னாள் போராளிகளில் ஓரிருவர் இதில் சம்பந்தப் பட்டிருக்கலாம் அதற்காக அனைவரையும் சந்தேகக் கண்ணோடு நோக்குவது தவறா னது. இன்று தென்னிலங்கையில் பாரிய குற்றங்களைப் புரிந்து வரும் பாதாள உலகக் குழுவில் படையிலிருந்து தப்பிச் சென்றவர்கள் இருப்பது கண்டறிப்பட்டுள் ளது. அதற்காகப் படையினர் அனைவரை யும் சந்தேகத்துடன் பார்க்க முடியாது. எனவே, இன்று நடைபெற்றுக் கொண்டிருக் கும், சுற்றிவளைப்புக்கள், கைதுகள், விசார ணைகள் மற்றும் குற்றம் செய்தவர் களுக்கான தண்டனை என்பனவற்றிற்கு அப்பால், இந்தக் குழுவின் உருவாக்கத் தின் பின்னணி மற்றும் நோக்கம் என்பன பற்றி பிரதானமாக ஆராயப்பட்டு உண்மை கண்டறியப்பட வேண்டும்.


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT

“ VERY CLEAN LAUNDRY” Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb

Commercial

. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry

. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc

STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm

Sat. & Sun 7 Am – 11 pm

(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 7

## கனடாவின் 150ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கட்டுரை.



குரு அரவிந்தன்

'நாங்கள் பரம்பரை பரம்பரையாக இந்த மண்ணில் வாழ்கின்றோம். இதுபோன்ற காட்டுத் தீ எங்களுக்குப் புதுமையான தல்ல, எனவே எங்கள் பாரம்பரிய மண்ணைவிட்டு எழும்ப மாட்டோம்' என்று வில்லியம்ஸ் லேக் என்ற பகுதியில் பரம் பரையாக வாழ்ந்த முதற்குடி மக்களின் தலைவரான ஜோ அல்போன்ஸி ஆர்சி எம்பி பொலீஸ் ( RCMP) உத்தியோகத்தர் களுக்குக் குறிப்பிட்டு, அந்த இடத்தை விட்டு நகர மறுத்திருந்தார்.

சுமார் 1000 முதற்குடி மக்கள் இப்பகுதி யில் வாழ்ந்தாலும், மண் மீது கொண்ட பற்றுக் காரணமாக சுமார் 300 குடிமக்களே குடிபெயராது அங்கு எஞ்சியிருந்தனர். அவர்கள்தான், உயிர் ஆபத்தையும் பொருட்படுத்தாது வருவதுவரட்டும் நாங் கள் இடம் பெயரமாட்டோம் என்று பிடிவாத மாக இடம்பெயர மறுத்தனர். சமீபத்தில் றொக்கிமலை சார்ந்த பிரிட்டிஷ் கொலம் பியா பகுதிகளில் இது போன்ற சுமார் 200 இடங்களில் காட்டுத்தீ ஏற்பட்டதில் சுமார் 14,000 முதற்குடி மக்கள் இடம் பெயந் திருந்தனர். ஆனால் சிலர் இடம் பெயர மறுப்புத் தெரிவித்திருந்தனர். இப்படியான நேரங்களில் சட்டப்படி முதற்குடி மக்களின் தலைவரின் ஒப்புதலுடன்தான் மக்களை வெளியேற்ற முடியும். அதனால்தான் அவர் களின் உயிர் பாதுகாப்புக் கருதிப் பொலி ஸார் முதற்குடி மக்களின் தலைவரிடம் நிலைமையை விரிவாக எடுத்துச் சொன்-னார்கள்.

காம்ப்லூப் (KAMLOOPS) என்ற இடத்தில் நாங்கள் தங்கி நின்றபோது, வில்லியம்ஸ் ஏரிப்பகுதியில் காட்டுத்தீ பரவியதாகச் செய்திகள் வந்தன. காம்ப்லூப் என்ற இந்த இடம் வில்லியம்ஸ் லேக் பகுதிக்குத் தென்கிழக்கே சுமார் 300 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்றது. அப்பகுதிக-ளின் கட்டுப்பாட்டு நிலையம் காம்லூப்பில் தான் இருந்தது. தீ பரவும் பகுதியை விட்டு வெளியேறுபவர்கள் பெரும்தெரு 97 ஐ எடுத்து தெற்கு நோக்கி வந்து பெருந் தெரு 24 ஐ எடுக்க வேண்டும். அங்கிரு ந்து பெரும்தெரு 5 ஐ எடுத்துப் பதிவு செய்ய வேண்டிய இடத்தை அடையும்படி பொலிஸார் விபரம் வெளியிட்டிருந்தனர். அப்பகுதியில் வாழ்ந்தவர்களைப் பாதுகாப் பாக வெளியேற்றவே இங்கிருந்த உத்தி-யோகஸ்தர்கள் அங்கு சென்றிருந்தனர். ஆனாலும் அந்த இடத்தை விட்டுச் சென்றால் திரும்பவும் அந்தப் பாரம்பரிய நிலம் தங்களுக்குக் கிடைக்காமல் போக லாம் என்ற பயம் முதற்குடி மக்களிடையே இருந்தது தான் இதற்குக் காரணம்.



பிரிட்டிஷ் கொலம்பியா பகுதியில் காட்டுத்தீ பரவிய காரணத்தால் இதுவரை முதற்குடி மக்களின் சுமார் 300 வீடுகள் வரை எரி ந்து சாம்பலாகி விட்டதாகத் தெரிகின்றது. சுமார் 840 இடங்களில் இந்தக் காட்டுத்தீ பரவியிருந்தது. இதற்காக இதுவரை சுமார் 188 மில்லியன் டொலர்கள் செலவாகியிரு ந்தன. தற்சமயம் எட்மண்டன் தீயணை ப்புப் படையினர் தீயணைக்கும் முயற்சியில் அங்கே ஈடுபட்டிருக்கின்றனர். மேற்கொண்டு காட்டுதீ பரவுவதைத் தடுப்பதற்காக மெக் ஸிகோ நாட்டில் இருந்து சுமார் 100 பயிற் றப்பட்ட தீ அணைக்கும் படையினர் வர இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின் றன. இதே நிலைதான் போர் நடந்த கால ங்களில் ஈழத் தமிழர்களுக்கும் ஏற்பட்டது. இடம் பெயர்ந்த மக்களின் காணிகள் எல்லாம் இன்னமும் திரும்பக் கிடைக்க வில்லை. அதிபாதுகாப்பு வலையம் என்று இப்பொழுதும் தங்கள் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்கின்றார்கள். பரம்பரையாக வாழ்ந்த வீடு வாசலை இழந்து தவிக்கும் தமிழர்களின் எண்ணிக்கையோ அதிகம். முதற்குடி மக்கள் கனடாவில் எப்படித் தங் கள் பரம்பரை இடங்களை விட்டுச் செல் லத் தயங்குகிறார்களோ அதே நிலைதான் ஈழத் தமிழர்களுக்கும் ஏற்பட்டது. பரம் பரைச் சொத்துக்களை, நிலத்தை இழந்து விடுவோமோ என்ற பயம்தான் இரு பகுதி யினருக்கும் இருந்தது. ஆனாலும் ஈழத் தமிழர்கள் கட்டாயத்தின் பெயரில் இடம் பெயரவேண்டி வந்தது. சொந்த மண் மீண் டும் கிடைக்குமா இல்லையா என்பதைக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

பான்வ் (Banff) என்ற அந்தச் சிறிய நகர த்தில் முதற்குடி மக்களோடு தொடர்பு டைய மூன்று அருங்காட்சியகங்கள் இருக் கின்றன. ஒன்று கேவ் அன்ட் பேசின் (Cave and Basin National Historic Site) என்ற பெயரைக் கொண்ட காட்சியகம், மற் றது பான்வ் பூங்கா அருங்காட்சியகம் (Banff Park Museum) என்ற பெயரைக் கொண்ட காட்சியகமாகும். இதைவிட பபலோ நேஷன் அருங்காட்சியகம் (Buf-falo Nations Luxton Museum) என்று ஒன் றும் இதற்கு அருகே இருக்கிறது. இது முதற்குடி மக்களைப் பற்றிய காட்சியக மாக இருந்தாலும், இதற்குக் கட்டணம் செலுத்தித்தான் பார்க்க வேண்டும். இதற்கு அருகே முதற்குடி மக்களின் பாவனைப் பொருட்கள் விற்பனை நிலையமும் இருக் கிறது. முதற்குடி மக்கள் அணியும் ஆடை வகைகள், முகமூடிகள் போன்ற நினைவுப் பொருட்கள் இங்கே விற்பனைக்கு இருக் கின்றன. அதன் வாசலில் முதற்குடி மகன் ஒருவரின் மரத்தினால் செய்யப்பட்ட உரு வச் சிலையும் வைக்கப்பட்டிருக்கின்றது.

1895 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பான்வ் பூங்கா அருங்காட்சியகத்தில், இப் பகுதியில் வாழ்ந்த முதற்குடி மக்கள் பற்றி யும், இப்பகுதியில் உள்ள தாவரங்கள், இயற்கை வளங்கள், பற்றிய தகவல்க ளையும் அறிய முடிகின்றது. மழை தூறிக் கொண்டிருந்ததால் காட்சியகம் திறக்கும் வரை பலர் வெளியே காத்திருந்தனர். எங்களைப் போலவே முதற்குடி மக்களைப் பற்றி அறிவதில் பலரும் ஆர்வமாக இருந்



தனர். சுமார் 5000 காட்சிப் பொருட்கள் வரை இங்கே இருக்கின்றன. இப்பகுதியில் வாழ்ந்த முதற்குடி மக்களின் வாழ்க்கை வரலாறு, புகைப்படக் காலத்தில் வாழ்ந்த வர்கள் சிலரின் புகைப்படங்கள், மிருகங்க ளின் தோலால் செய்யப்பட்ட மிருகங்களின் உருவங்கள் போன்றவற்றைக் காணமுடிந் தது. இப்பகுதியில் இயற்கைச் சூழலில் வாழும் மிருகங்கள், பறவைகள் போன்ற வற்றின் மாதிரி உருவங்களும் இங்கே காட்சிக்கு வைக்கப் பட்டிருக்கின்றன. முதற்குடி மக்கள் பற்றிய சிறிய நூலகம் ஒன்றும் உள்ளே இருக்கின்றது. 1905 ஆம் ஆண்டு தொடக்கம் 1937 ஆம் ஆண்டு வரை இங்கே சிறிய விலங்குக் காட்சிச் சாலை ஒன்றும் இருந்ததாம். 1937 ஆம் ஆண்டு இந்த விலங்குக் காட்சிச்சாலை மூடப்பட்ட போது இங்கிருந்த ஓநாய், காட்டுப்பூனை, போலாகரடி போன்ற விலங் குகள் கல்காரி விலங்குக் காட்சிச் சாலை க்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டன. இந்த நகரத்தில் உள்ள வீதிகளின் பெயர் களைப் பார்த்து நான் ஆச்சரியப் பட்டேன், காரணம் அப்பகுதியில் வாழ்கின்ற மிருகங் களின் பெயர்களையே வீதிகளுக்கு வைத் திருக்கின்றார்கள். காலாகாலமாய் இந்த மிருகங்களுடன்தான் முதற்குடி மக்கள் வாழ்ந்திருந்தார்கள்.

LOANS & MORTGAGES.... that meets your needs
$5,000...$35,000...$50,000...$100,000...1Million...
MORTGAGE ALLIANCE
Office: 1585 Markham Road, Unit 110
Scarborough ON. M1B 2W1
Tel: 647.350.7050
Corporate Office: 2005 Sheppard Ave E. Suite 200, Toronto ON M2J 5B4 Toll Free: 1-877-366-3487
- Commercial Mortgages.
- 2nd Mortgages.
- Construction Mortgages.
- Secured Credit line.
- Unsecured Loans.
SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
647-922-5704
Twitter @OK_Mortgages





- ஆதித்தன் -

# முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு வடக்கின் முதல்வர் பதிலளிப்பாரா?

வட மாகாணசபையின் ஆயுள்காலம் இன்னும் ஒன்றரை வருடங்களே உள்ளது. சிலசமயம் அதற்கிடையில் சபை கலைக்கப்பட்டு தேர்தல் ஒன்று நடத்தப்படக்கூடிய நிலைமை உள்ளதாகவும் பேசப்படுகின்றது.

வட மாகாணசபை இதுவரை காலமும் மக்கள் எதிர்பார்த்த அளவு எதனையும் சாதிக்கவில்லை என்பதே உண்மை. இது குறித்து வெளியே இருந்து விமர்சிப்பவர்களை விடவும் உள்ளிருந்து விமர்சிப்பவர்களே அதிகம். அதுவும், வட மாகாணசபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களை விடவும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் அதிகம் விமர்சிக்கின்றனர்.

வட மாகாண முதலமைச்சர் கடும் விமர்சனங்களுக்கு தற்போது ஆளாகியுள்ளார். ஏனெனில், வட மாகாணசபையின் நிர்வாகத்திற்கும் அமைச்சுக்களின் செயற்பாடுகளுக்கும் பொறுப்புக் கூறுபவராக இருப்பவர் அவரே. அது மட்டுமன்றி, கடந்த மூன்றரை வருடங்களாக முரண்பாடுகளுடனேயே வட மாகாணசபை இயங்கி வந்துள்ளது. அதன் உச்சக் கட்டமாக கடந்த மாதம் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஆளும் கட்சியினாலேயே கொண்டுவரப்பட்டு ஆளுநரிடம் மனு கையளிக்கப்பட்டு பின்னர் அது மீளப்பெறப்பட்டது.

தற்போதும் வட மாகாணசபையில் சிக்கல் நிலையே தொடர்கின்றது. சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். அவர் தனது பதவி விலகல் தொடர்பில் நடத்திய ஊடக சந்திப்பில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீதே குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளார். எல்லா குழப்பங்களுக்கும் முதலமைச்சரின் செயற்பாடே காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.



வட மாகாணசபையின் உறுப்பினர்களில் ஒருவரான ப.அரியரத்தினமும் வட மாகாணசபை வடக்கு மக்களின் எதிர்பார்ப்புக்களில் எதனையும் நிறைவேற்றவில்லை என்று அண்மையில் கிளிநொச்சியில் அவர் நடத்திய ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார். போரின் பின்னர் அமைக்கப்பட்ட வட மாகாணசபை போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறான நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்கிற ஒரு திட்டத்தை வரைந்து நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு எவ்விதத் திட்டங்களும் வட மாகாண சபையில் இல்லை என்றும் அவர் கூறியிருக்கின்றார். அத்துடன் நியதிச் சட்டங்களைக் கூட சரியாக உருவாக்கவில்லை என்பதையும் அவர் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

அது மட்டுமல்லாமல் மாகாணசபைக்கு வந்த பணத்தைக் கூட செலவிடத் தெரியாமல் அது திரும்பிச் சென்றதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். வட மாகாண சபையின் 99வது விசேட அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா சபையின் இயலாமை குறித்து பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

வட மாகாண சபையின் ஆயுள் காலத்திற்கு இன்னும் பதினைந்து மாதங்களே இருக்கின்ற நிலையில் கடந்த கடந்த மூன்று வருடம் 9 மாதத்தில் ஒட்டு மொத்த வட மாகாண சபையின் செயற்பாடுகளை மீளாய்வு செய்யும் வகையில் அவரது நீண்ட உரை அமைந்திருந்தது. அரசு தருகின்ற நிதிக்கு மேலதிகமாக எமது பிரதேசத்தின், எம் மக்களின் பொருளாதார வளத்தை, வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்த வட மாகாணசபை எதனைச் செய்திருக்கின்றது எனவும், வடமாகாண சபையின் நிறைவேற்றுத்துறை மற்றும் நிர்வாக செயற்பாடுகள், நிதி முகாமைத்துவம் என்பவை வினைத்திறனாக நடைபெற்றிருக்கின்றதா? எனவும் அவர் கேள்வியெழுப்பியிருக்கின்றார்.

"இரணைமடுத் திட்டத்திற்குக் கிடைக்கவிருந்த நிதியான ரூ. 25,000 மில்லியன். ஐந்து வருடத்திற்கு மாகாணசபைக்குக் கிடைக்கும் நிதியை விட அதிகமானது. அதனை வேண்டாமென்று உதறித் தள்ளினீர்கள். மாற்றுத்திட்டமாவது இதுவரை கொடுத்திருக்கின்றீர்களா?" என்றும் முதலமைச்சரிடம் அவர் வினா தொடுத்துள்ளார்.

"அன்றைய கால கட்டத்தில் (மஹிந்தவின் காலத்தில்) நான் எதைப் பேசினாலும் ஆளுநர் எதனையும் செய்யவிடுகிறார் இல்லை, பிரதம செயலாளர் ஆளுநருடன் சேர்ந்து தடையாக இருக்கின்றார் என்று கூறினீர்கள். அந்த ஆளுநர் மாற்றப்பட்டு சிறந்த நிர்வாகி ஒருவர் ஆளுநராக இருந்தார், நீங்கள் கோரியது போல் பிரதம செயலாளர் மாற்றப்பட்டார், ஆனால் நீங்கள் சாதித்தது என்ன? ஆடத் தெரியாதவள் மேடை கோணல் என்று கூறியதைப் போல்தான் தங்கள் கூற்று அமைந்திருக்கின்றது" என்றும் அவர் முதலமைச்சரைப் பார்த்துக் கூறினார்.

"சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நிதித் தேவைகள் மதிப்பீடு தொடர்பாகத் தாங்கள் ஓர் ஆலோசகரைப் பெயர் குறிப்பிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதிக்கு சிபாரிசு செய்ததன் விளைவாகத் தங்களிற்கும், ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளிற்குமிடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் விளைவு, எமக்குக் கிடைக்கவிருந்த சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நிதி அவர்களினால் வேறு வழியில் திசை திருப்பப்பட்டது" என்பதையும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"ஒட்டுச்சுட்டானில் இந்திய அரசின் உதவியுடன் நிறுவப்படவிருந்த தொழிற்பயிற்சி நிலையம், தங்கள் அமைச்சினதும், அதிகாரிகளினதும் அசமந்தப் போக்குக் காரணமாக இன்று கைவிடப்பட்டுள்ளது. நான் இதனைவிட்டு சபையில் கேள்வியெழுப்பிய போது தங்களிற்கு அது தொடர்பாக எதுவும் தெரியாது எனக் கூறியிருந்தீர்கள். ஆனால் தங்கள் அதிகாரிகள் சென்று காணியைக் கூடப் பார்த்திருக்கின்றார்கள். இது கூடத் தங்களிற்குத் தெரியாதா?"

இவ்வாறு பல்வேறு குற்றச்சாட்டுக்களை எதிர்க்கட்சித் தலைவர் ஆதாரங்கள், ஆவணங்களுடன் முன்வைத்து சபையில் நீண்ட உரையினை நிகழ்த்தினார். இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு முதலமைச்சரால் சரியான விளக்கம் வழங்கப்படவில்லை.

எதிர்கட்சித் தலைவரின் நீண்ட உரையும் அதன் காணொளி வடிவமும் ஊடகங்களில் வெளிவந்து அதிர்ச்சியினையும் பெரும் நம்பிக்கையீனத்தையும், வட மாகாணசபை மீதும் குறிப்பாக முதலமைச்சர் மீதும் ஏற்படுத்தியுள்ளது.

வட மாகாணசபையின் வினைத்திறனற்ற செயற்பாடுகளுக்கு மட்டுமல்லாமல் மத்திய அரசாங்கத்திற்கும் வட மாகாண சபைக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடுகள், சர்வதேச அமைப்புக்களுடனான முரண்பாடுகள் போன்றனவற்றிற்கும் முதலமைச்சரே காரணமாக இருந்துள்ளதான குற்றச்சாட்டை அவர் எவ்விதம் மறுத்துரைக்கப் போகின்றார் என்பதுதான் இப்போது எழுந்துள்ள பிரதானமான கேள்வி.

வட மாகாணசபையில் உறுப்பினர்கள், அமைச்சர்கள் மத்தியில் எழுந்த பல்வேறு முரண்பாடுகளையும் தலைமைப் பொறுப்பிலிருக்கும் முதலமைச்சரே முகாமை செய்து தீர்த்து வைக்க வேண்டிய நிலையில் அவரே முரண்பாடுகளை வளர்த்து வந்துள்ளார் என்ற குற்றச்சாட்டும் அவர் மீது முன்வைக்கப்படுகின்றது.

எதிர்க்கட்சியினராக இருந்தாலும் சரி, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி முதலமைச்சர் மீது முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு அவர் சரியான விளக்கத்தை வழங்க வேண்டும். அது குற்றம் சுமத்து பவர்களுக்கு வழங்கப்படும் பதிலாக மட்டும் இருக்கப்போவதில்லை. அதிர்ச்சியும் அவநம்பிக்கையும் கொண்டுள்ள வட மாகாண மக்களுக்கான தெளிவுபடுத்தலாகவும் அமையும். முதலமைச்சர் பதிலளிப்பாரா?

27 வது ஆண்டில் கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™

| | |
|---|---|
| பதிப்பாளர்: | ராஜா மகேந்திரன் |
| பத்திரிகை ஆசிரியர்: | சத்தியா மகேந்திரன் |
| பத்திரிகை முகாமையாளர்: | கமல் செல்லையா |
| ஊடகப்பொறுப்பாளர்: | விஜய் செல்லையா |
| தட்டச்சு: | கலா விஜயபாலன் |
| அலுவலக பொறுப்பாளர்: | தாரணி இந்திரராஜ் |
| | பிரசாந்தி அருள்தாசன் |

பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.
பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

கனேடியச் செய்திகளுக்கான முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

# வாகனக் காப்புறுதியில் வினாக்களும் விடைகளும்

## கனடிய தகவல் தொடர் 272



**சிவ. பஞ்சலிங்கம்**, B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999

**காப்புறுதியில்லாது வாகனம் செலுத்திப் பிடிபட்டால் என்ன நடக்கும்?**

• வாகனம் அந்த இடத்தில் வைத்துப் பறிமுதல் செய்யப்பட்டு ஆகக் கூடுதலாக மூன்று மாதம்வரை வைத்திருப்பார்கள். அதனைக் கட்டி இழுத்துச் சென்ற செலவு (Towing Charges) மற்றும் பாதுகாப்பாக வைத்திருந்த செலவு (Storage Charges) எனச் சகல கட்டணங்களும் செலுத்தியே வாகனத்தினை மீளப்பெற வேண்டும்.

• $5,000 - $50,000 டொலர்வரை பணத் தண்டனை வழங்கப்படும். தங்களின் வாகனமாக இல்லாவிட்டாலும், தண்டனை தங்களுக்கே கிடைக்கும்.

• சாரதி அனுமதிப் பத்திரம் சுமார் ஒரு வருடம்வரை இரத்துச் செய்யப்படலாம்.

மீண்டும் கட்டணம் செலுத்தியே மீளப்பெற வேண்டும். சில நேரங்களில் வீதிப் பரீட்சைக்குத் தோற்றியே அனுமதிப் பத்திரம் மீளப்பெற வேண்டிய நிலைமை ஏற்படலாம்.

• ஒரு விபத்து ஏற்பட்டால் அதில் தங்கள் பக்கம் தவறு என்பது இல்லாமல் இருந்தாலும் எதுவிதமான நட்டஈடும் பெறமுடியாது. உடல்காயம் ஏற்பட்டாலும் நட்டஈடு பெறமுடியாது.

• ஒரு விபத்து உருவாகி அதில் இன்னொருவரின் உடலுக்கோ அல்லது உடமைக்கோ பாதிப்பு ஏற்பட்டால் காப்புறுதியில்லாது வாகனம் செலுத்திய நபரே செலுத்த வேண்டும். இல்லையேல் தங்களின் சொத்துக்கள், வருமானங்களில் நீதித்துறை கை வைக்கும்.

• பிடிபட்டதன் பின்பு இது ஒரு குற்றமாகப் பதிவில் போடும்போது, தொடர்ந்து வாகனம் செலுத்த ஆரம்பிக்கும் போது காப்புறுதி விலை என்பது மிக அதிகமாகவே நிர்ணயிக்கப்படும்.

**ஒன்ராறியோ மாகாணத்தில் கண்டிப்பாக, சட்டரீதியாக வைத்திருக்க வேண்டிய வாகனக் காப்புறுதி பிரிவுகள் யாவை?**

அடிப்படையில் பின்வரும் நான்கு காப்புறுதிப் பிரிவுகளும் முக்கியமானவை. ஒவ்வொரு வகையான இழப்புகளுக்கும், இப்பிரிவுகளிலிருந்து நட்டஈடுகள் வழங்கப்படுகின்றது.

• இன்னொரு நபருக்கு விபத்துக்களில் அவரது உடலுக்கு அல்லது உயிருக்கு மற்றும் உடமைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு வழங்கும் நட்டஈட்டு பிரிவு. (Third Party Liability Coverage)

• சரி, பிழை என்பது எந்தப் பக்கமிருந்தாலும், விபத்தில் வாகனம் செலுத்திய தங்களுக்கு ஏற்படும் உடல் காயங்களுக்கு வழங்கும் நட்டஈட்டு பிரிவு.
(Statutory Accident Benefits)

• காப்புறுதியில்லாத இன்னொரு வாகன சாரதியினால் தங்களுடைய வாகனத்தின் பாதிப்புக்கு வழங்கும் நட்டஈட்டு பிரிவு. (Uninsured Coverage)

• தங்களில் தவறு இல்லாத நிலையில் விபத்தின் போது தங்களின் வாகனத்தின் பாதிப்புக்கு வழங்கும் நட்டஈட்டு பிரிவு.
(Direct Compensation Property Damage or No Fault Coverage)

**விரும்பினால் மேலதிகமாகப் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் வாகனக் காப்புறுதியின் ஏனைய நட்டஈட்டுப் பிரிவுகள் எவை?**

• வாகன விபத்துக்களில் தங்களின் தவறினால் தங்கள் வாகனத்திற்கு ஏற்படும் இழப்புகள். இது மோதிவிட்டு தலைமறைவாகியவர்களால் தங்களின் வாகனத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்கள், சுவர்கள், மதில்கள், மின் கம்பங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.
(Collision Coverage)

• வாகனம் செலுத்தும்போது எதிர்கொள்ளும் விபத்துக்களின் பாதிப்புக்கள் தவிர வேறு வழிகளினால் தங்களின் வாகனங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்.

• தீயினால், வெள்ளங்களினால், மிருகங்களினால் ஏற்படும் பாதிப்புக்கள், திருட்டுகளுக்காகக் கண்ணாடிகள் உடைத்தல், ஏதாவது பாரங்கள் விழுந்து நொறுங்கிய பாதிப்புகள், திருட்டு போதல் போன்றவற்றினைப் பொதுவாக இங்கு இப்பிரிவின் கீழ் குறிப்பிடலாம். Comprehensive coverage)

• விபத்து ஒன்றில் தங்களில் தப்பு என்பது எவையுமில்லாது, உடல் காயம் என்பது அதிமோசமாக இருக்குமானால் மேலதிகமாக நட்டஈடு பெறும் பிரிவு. OPCF 44R என்ற குடும்ப பாதுகாப்பு விரிவாகும்.

உதாரணமாகக் காப்புறுதியில்லாத வாகனங்களுடன் மோதல் அல்லது மோதிய வாகனங்கள் தப்பியோடி விட்டால் இந்தக் குறிப்பிட்ட நட்டஈட்டுப்பிரிவு கைகொடுக்கும். (OPCF 44 R family protection coverage)

(தொடர்ச்சி 36 ஆம் பக்கம்...)

பிரியாஸ்
புதிய முகவரியில் புதுப் பொலிவுடன்
1661 Denison Street (Kennedy & Denison) இல்
அமைந்திருந்த எமது நிறுவனம் தற்பொழுது வாடிக்கையாளரின்
நலன் கருதி புதிய முகவரியில் (Denison & Mccowan)
7380 McCowan Road, Unit #3, MARKHAM, ON L3S 3H8
அனைத்து வகையான இலங்கை இந்திய குறோசறி மற்றும்
மரக்கறி வகைகளை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
905.944.1229

# தமிழ் நாட்டு அரசியலில் மாற்றம்

## நடிகர் விஜய் தந்தை இயக்குநர் எஸ். ஏ. சந்திரசேகர்

**நேர்காணல்: சிவதாணு**

“பல பெரிய இயக்குநர்களே கேட்டும் தனது வாழ்க்கை கதையை திரைப்பட மாக்க அனுமதி தராத டிராபிக் ராமசாமி, நான் அவரது கதாபாத்திரமாக நடிக்கிறேன் என்றதும் அனுமதி கொடுத்ததை, எனக்கு கிடைத்த பெரிய மரியாதையாக நினைக் கிறேன்” என்று நெகிழ்ச்சியுடன் பேசத் தொடங்கினார் இயக்குநர் எஸ். ஏ. சந்திர சேகர். தமிழ்நாட்டில் சமூக அவலங்கள், சட்ட மீறல்களுக்கு எதிராக தனி மனித னாக சட்டப் போராட்டம் நடத்தி வருபவர் டிராபிக் ராமசாமி. இவரது வாழ்க்கை திரை ப்படமாகிறது. விஜய் விக்ரம் இயக்கும் இந் தப் படத்தில் டிராஃபிக் ராமசாமியாக நடிக் கிறார் இயக்குநர் எஸ். ஏ. சந்திரசேகர்.

இயக்குநர் எஸ். ஏ. சந்திரசேகரை சந்தி த்து பேசினோம்;

திரைப்படத் துறையில் இயக்குநர், தயாரிப் பாளராக இருந்த நீங்கள் இப்போது நடிகராகவும் வெளிப்பட்டுள்ளீர்கள் எப்படி உணர்கிறீர்கள்?

திரைப்படத்துறை என் காதலி. நான் பல திரைப்படங்கள் பார்த்து, குறிப்பாக இயக்கு நர் ஸ்ரீதரின் படங்களைப் பார்த்து இயக்கு நர் ஆகவேண்டும் என்கிற ஆசையில் இந்த துறைக்குள் வந்தவன். யாரை நாம் உண்மையாக நேசிக்கிறோமோ அவர்கள் நம்மை கைவிட மாட்டார்கள். அதுமாதிரி திரைப்படத்துறையை நான் உண்மையா நேசித்தேன். கலை காதலியும் என்னை இயக்குநராக ஏற்றுக்கொண்டாள். 1980-இல் இயக்குநராகிறேன். 84-இல் கலை காதலி எனக்குத் தயாரிப்பாளர் என்ற உயர்வை கொடுக்கிறாள். அதன்பிறகு விநியோகஸ்தர் ஆகிறேன். ரஜினிகாந்த், சிரஞ்சீவி எனப் பெரிய நட்சத்திரங்களுடன் பணியாற்றியிருக் கிறேன். 1990 வரை 52 படங்களை எடுத்து விட்டேன். நான் நிறைய கஷ்டப்பட்டு வந்த வன். பாண்டி பஜார் நடைபாதையில் படுத் துக்கிடந்தவனுக்கு ஒரு கட்டத்தில் சென் னையில் முக்கியப் பகுதியில் 8 ஆயிரம் சதுர அடியில் பெரிய பங்களா இருக்கிறது. ஓரளவு சம்பாதிச்சிட்டேன். திரைப்படம் போதுமென்று தோன்றியது. அப்போதுதான் என் மகன் விஜய் மூலமாகக் கலை காதலி மறுபடியும் என்னைத் திரைப்படத்துறைக் குள் அழைக்கிறாள்.

விஜய்க்கு அப்போதே நடிப்பில் ஆர்வம் இருந்ததா?

ஆமாம். அவர்தான், “அப்பா எனக்கு படிப்பு சரியாக வரவில்லை. ஏதோ ஒரு துறைக்குத்தானே போகப்போகிறேன். ஏன் அது திரைப்படத்துறையாக இருக்கக் கூடாது. நான் நடிக்கிறேன்” என்று என் முன்னாடி வந்து நின்றார். அப்போது என க்கு திரைப்படம் மீதான் ஆர்வம் போய் விட்டது. எனவே, இனி நான் இயக்குவதாக இல்லை என்று சொல்லிட்டு பெரிய பெரிய இயக்குநர்களிடம் விஜய்யை அழைத்துச் சென்றேன். “என் மகன் நடிக்கணும்கிறான். நான் ஃபைனான்ஸ் பண்றேன், அவனை வெச்சு படம் பண்ணுங்கள்” என்று கேட்கி றேன். அப்போது விஜய் ஒல்லியா இருப் பார். அவர் மேல யாருக்கும் நம்பிக்கை வரவில்லை. என் மனைவிதான், “மத்தவங்க கிட்ட ஏன் கெஞ்சிட்டு இருக்கீங்க. நீங்களே களத்தில் இறங்குங்கள்”ன்னு சொன்னதால், மறுபடியும் இயக்குநராகிறேன். “சந்திரசேக ரிடம் பணம் இருக்கறதாலதான் அவர் மகனை வெச்சு படமெடுக்கிறார்” என என் காதுபடவே பேசினார்கள். விஜய் நடித்த படத்துக்கு எதிர்மறையான விமர்சனங்க ளும் வந்தன. ஆனால், இன்று விஜய்யின் தீவிரமான உழைப்பு அவரை உயர்ந்த இடத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது.

இப்போது நீங்களும் நடிகராகிட்டீங்க. விஜய் என்ன சொல்கிறார்?

“எதற்கு அப்பா நீங்க இன்னமும் உழைச் சிட்டு இருக்கீங்க. ரிலாக்ஸா ரெஸ்ட் எடுக்கலாமே?”ன்னு கேட்பார். “இல்லேப்பா என் வயசு வரும்போதுதான் உனக்கு இதுபற்றி தெரியும். திரைப்படத்தில் ரிட்டை டுமெண்ட் கிடையாது. இது கிரியேட்டிவ் ஜாப். நமக்குள் எனர்ஜி இருக்கும்வரை, எண்ணங்கள் ஊறும்வரை பண்ணிட்டே இருக்கலாம்”னு சொல்லிக்கொண்டே இருப் பேன். அந்த சமயம்தான் ‘கொடி’ படத்தில் நடிக்க வாய்ப்பு வருகிறது. அதுக்கு முன் னாடி என்னுடைய படங்களில் ஒருசில காட்சிகளில் நடித்திருந்தாலும் மற்றவர்க ளின் இயக்கத்தில் நடிக்கவேண்டுமா என்ற தயக்கம் இருந்தது. என் மனைவிக்கு தனு ஷோட நடிப்பு நிறையப் பிடிக்கும். அவர் கள்தான், “நல்ல வாய்ப்பு நடிங்க” என்று சொன்னார்கள். சரியென்று ஒப்புக்கொண்டு நடிக்க ஆரம்பித்தவன், ‘டூரிங் டாக்கீஸ்’, ‘நையப்புடை’, இப்போது ‘டிராபிக் ராமசாமி’ன்னு நடிப்பு வாய்ப்புகள் வந்துகொண்டே இருக்கிறது.



‘டிராபிக் ராமசாமி’ எப்படியான படம்?

என்னிடம் உதவி இயக்குநராக இருந்தவர் விஜய் விக்ரம். மிகவும் தீவிரமான திறமை யான பையன். ஒருநாள் டிராபிக் ராமசாமி யின் வாழ்க்கை வரலாறு புத்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார். அதற்கு முன் எதற்கெடுத்தாலும் நீதிமன்றத்தில் வழக்கு போடுகிற ஒரு ஆளாகத்தான் டிரா பிக் ராமசாமி பற்றி நான் தெரிந்து வைத் திருந்தேன். ஆனால், அவரது வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும்போதுதான் அவர் எப்படிப்பட்ட மனிதர், பொதுநலத்திற்காக அவர் இழந்த உறவுகள், உறக்கம் இல்லாத இரவுகள், இரக்கம் இல்லாத மனிதர்களிடம் அவர்பட்ட துன்பங்கள் என்று வலி நிறைந்த அவரது வாழ்க் கையை அறிய முடிந்தது. அந்தக் கதையை என்னை வைத்துப் படமாக்க விஜய் விக்ரம் முடிவு செய்து, டிராபிக் ராம சாமியைப் போய் சந்தித்தோம். என்னை அறிமுகப்படுத்திக் கொண்டபோது, “உங்க ளைப் பற்றிதான் எனக்கு நல்லா தெரியுமே. உங்கள் படங்களில் சமூக அக்கறை இருக்கும். நீங்க என் பாத்திரத்தில் நடித் தால் சரியாக இருக்கும். இதற்கு முன்னாடி சில இயக்குநர்கள் என் கதையை பட மாக்க அனுமதி கேட்டார்கள்” என்று ஒரு நாட்காட்டியை எடுத்துக்காட்டினார், அவர் காட்டிய பட்டியலில் பெரிய இயக்குநர் களெல்லாம் இருந்தார்கள். அவரிடம் பேசிக் கொண்டிருக்கும்போதே, “தெரு விளக்கு எரியவில்லை, தண்ணீர் வரவில்லை, டிரைனேஜ் லீக் ஆகுகிறது” என்று பொது மக்களிடம் இருந்து ஏகப்பட்ட அழைப்புகள். எல்லாவற்றுக்கும் சம்பந்தப்பட்ட அதிகா ரிகளுக்குப் போனை போட்டுப் பேசுகிறார். சுயநலமற்ற ஒரு மனிதரை அரசியல்வா திகள் இருட்டடிப்பு செய்து விட்டார்கள். அது ஏன் என்ற கேள்வியும் எழுப்பும் படமாக ‘டிராபிக் ராமசாமி’ இருக்கும்.

பத்து வருடங்களுக்கு முன்பு விஜய்யின் ரசிகர் மன்றம், புதிய கொடியுடன் நற்பணி இயக்கமாக மாற்றப்பட்டது. பிறகு, அது மக்கள் இயக்கமானது. ஜெயலலிதா மறைவு, கருணாநிதி உடல்நலக் குறைவு என்ற இன்றைய அரசியல் சூழ்நிலையில் விஜய்யின் மக்கள் இயக்கம் வேறு ரூபத்துக்கு மாறுமா?

இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டியவர் விஜய். ஏனெனில், அவர் குழந்தை இல்லை, பக்குவப்பட்ட நடிகர், சமுதாயத்தின் மீது அக்கறைகொண்ட ஒரு மனிதர், தமிழன். அதனால், அவர்தான் இதற்கு பதில் சொல்லவேண்டும். மருத்து வருக்கு படித்தவர் அரசியலுக்கு வரலாம், வழக்கறிஞர் அரசியலுக்கு வரலாம் என் றால், ஏன் ஒரு நடிகன் அரசியலுக்கு வரக் கூடாது? விஜய்யின் ரசிகர்கள் தங்கள் கை காசை போட்டு ஏழைகளுக்கு உதவி செய்துகொண்டு இருந்தார்கள். அவர்கள் பணியைப் பார்த்து, தமிழ்நாட்டில் மாற்றம் உண்டாகவேண்டும் என்பதற்காக நற்பணி இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி- னோம். ஆனால், தமிழ்நாட்டில் இப் போதைய அரசியல் சூழ்நிலையை பார்க் கும்போது மாற்றம் இல்லை, ஏமாற்றம்தான் இருக்கிறது.

விஜய்க்காகப் பேசவில்லை பொதுவாக ஒரு கருத்தைச் சொல்கிறேன். ஒரு நடிகன் நடித்துக்கொண்டே சமூகப் பொறுப்புக்கு வரவேண்டும் என்று நினைப்பதில் தவ றில்லை. வாக்குரிமை பெற்று வாக்களித்த அன்றே ஒவ்வொருவரும் அரசியலுக்கு வந்துவிட்டார்கள். மந்திரியைக் கேள்வி கேட்கும் உரிமை வாக்களித்தவனுக்கு உண்டு. அவர்கள் ஒன்றும் மன்னர் கால த்து மந்திரிகள் இல்லை, மக்களின் சேவக ர்கள்தான். நடிகன் மட்டும் கேள்வி கேட் டால் அதனை பெரிதுபடுத்துவது ஏன்? நடிகனுக்கு நாட்டின் மீது அக்கறை இருக் கக்கூடாதா? அவனும் தமிழன்தானே?

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். படித்த அதிகாரிகள் கையில்தான் அரசு நிர்வாகம் இருக்கிறது. அவர்களெல்லாம் சரியாக நிர்வாகம் செய் கிறார்களா என்று சூப்பர்வைசிங் பண்றதுக் குதான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் வேண்டும். அதிகாரிகள் சரியாக நிர்வாகம் செய்கிறார்களா என்று கவனித்து அதற்கான நிதியை ஒதுக்க வேண்டுமே தவிர அதில் திருடக்கூடாது.

ஆனால், இன்று கமல்ஹாசனுக்குப் பதில் கூறும் அமைச்சர்கள், “அரசியலைக் கற் றுக்கொண்ட பிறகுதான் நடிகர்கள் அரசிய லுக்கு வரவேண்டும்” என்கிறார்களே?

நடிகர்கள் எளிதாக தங்கள் இடத்தைக் கைப்பற்றி விடுவார்கள் என்ற பயம்தான் அதற்குக் காரணம். ஒரு மருத்துவர் திடீரெ ன்று அரசியலுக்கு வந்தால், அவர் யார், என்ன ஏதுன்னு சொல்லிக்கொண்டு இருக் கவேண்டும். அதேசமயம் ரஜினியோ கமலோ வரும்போது அவர்களைப் பற்றிய அறிமுகமோ விளக்கமோ சொல்ல வேண்டி யதில்லை. அதனால்தான், கேள்வி கேட்கும் நடிகர்களின் படங்களுக்கு பிரச்சினை ஏற்படுத்துகிறார்கள். “அய்யயோ இந்த நாயகனை வெச்சு படம் பண்ணினால் ரிலீஸ் செய்வதில் சிக்கல் வரும்” என்று பயந்துபோய் தயாரிப்பாளர்கள் ஒதுங்கு வார்கள் என்பது அவர்கள் திட்டம். அதற்குப் பயந்துதான் ஒரு சில நடிகர்கள் ஒதுங்கிப் போகிறார்கள்.


LAW OFFICE

STEFANO FORTINI

B.A., LL.B., Barrister & Solicitor

3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4

Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# நாமும் நமது இல்லமும் - 493

## சட்டத்தரணியின் காசோலை திரும்பியது (Bounced)


**ராஜா மகேந்திரன்**, P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969




ஏப்ரல் 2017 இல் அரசினால் நடைமுறைப் படுத்தப்பட்ட வெளிநாட்டவர்கள் மீதான 15% ஆதன வரி ஆதன வியாபாரத்தில் எதிர்பாராத நிலைமையை ஏற்படுத்தியதனை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன் மத்திய வங்கியின் 1/4% வட்டி அதிகரிப்பும் இதற்கு மேலும் வலுச் சேர்த்ததாகக் கொள்ளலாம். ஒக்ரோபரில் மேலும் 1/4% வட்டி அதிகரிப்பு ஏற்படலாம்(?) என்பதனைப்பற்றிய ஆய்வாளர்களின் கருத்து ஆதனக் கொள்வனவாளர்களை மேலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வைத்துள்ளது. ரொறன்ரோ பெரும்பாகத்தில், குறிப்பாக இந்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்து தனி வீடுகளின் (Detached) விலை எதிர்பாராதளவிற்கு அதிகரித்து வந்துள்ளதனை நாம் அறிவோம். ஆனால் ஏப்ரல் பிற்பகுதியிலிருந்து இன்று வரை நிலைமை மாறிவிட்டது. முன்பு வாங்கிய பல வீடுகளின் முறையான விற்பனை (Closing Transaction) நடைபெறாமல் போகின்றது. இதற்கு ஆதனத்தின் இன்றைய பெறுமதி வாங்கிய காலத்தில் இருந்த விலையை விடக் குறைவாகக் காணப்படுகின்றது (Appraisal Value). இதுவரை ஆகக்கூடியதாக $260,000 வரை குறைவான விலையில் ஒரு வீட்டின் மதிப்பீட்டின் பெறுமதி (Appraisal Value) வந்துள்ளது. அத்துடன் அடமானக்கடன் பெறுவதில் மிகவும் இறுக்கமான நிலைமை காணப்படுகின்றது.



ஆதனம் சம்பந்தப்பட்ட வியா பாரத்துடன் தொடர்புடையவர்களின் இன்றைய கால அனுபவத்தில் அதிகளவான வீடுகளின் முறையான விற்பனை நடைபெறாமலே போகின்றது. இந்நிலைமை எவ்வளவு காலம் தொடரும் என்பதனை இன்றுவரை எதிர்வுகூறமுடியாமல் இருக்கின்றது. இன்றைய நிலைமையால் பலர் தமது ஆரம்ப முதலீடுகளை (Deposit) கைவிடு வதனையும் காணக்கூடியதாக உள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறு ஆதனக் கொள்வனவை முற்றாக நிறைவேற்றாமல் தவிர்ப்பவர்கள் (Completion of deal) பல நெருக்கடிகளை சந்திக்கலாம்.(?)இன்று தனி வீடுகளை விட மற்றைய ஆதனங்களே அதிகமாக நிர்மாணம் செய்யப்படுகின்றன. இதற்கு தனி வீடுகளின் அதிக விலை வாங்குபவர்களிற்குக் கட்டுபடியாகாமல் போகின்றது. அத்துடன் நகரசபை, பிரதேச சபைகளும் தனிவீட்டைத் தவிர்த்து மற்றைய விதமான ஆதனத்தையே கட்டுவதனை ஊக்குவிக்கின்றது.

ரொறன்ரோ பெரும்பாகத்தில் யூலை 2017 இன் ஆதன வியாபாரம் யூலை 2016 உடன் ஒப்பிடும் போது 40% குறைவாகக் காணப்படுகின்றது. அத்துடன் ஏப்ரல் 2017 இல் ஆதனத்தின் சராசரி விலையிலிருந்து 19% குறைவாகக் காணப்படுகின்றது. ஆனால் அண்மைக்கால புள்ளிவிபரங்களை ஆராயும் போது 2000 ஆம் ஆண்டிலிருந்து சராசரி வீட்டு விலை ஏறக்குறைய மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. ஆனால் புதிதாக நிர்மாணம் செய்யும் அடுக்குமாடி ஆதனத்தின் விலை அதன் அரைவாசியே அதிகரித்துள்ளது. இதனால் அண்மைக்காலங்களில் அடுக்குமாடி மனை வாங்குவதனை மக்கள் நாடுகின்றனர். இவ்வாறே இன்றைய நிலைமை காணப்படுகின்றது. இன்றைய நிலைமை எவ்வளவு காலம் தொடரும் என்பதனை யாவரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்கள்.

முதன்முறையாக எமது வியாபார நிறுவனத்திற்கு ஒரு சட்டவல்லுனரினால் தரப்பட்ட காசோலை (Cheque) போதிய பணம் குறிப்பிட்ட சட்டத்தரணியின் வங்கிக் கணக்கில் இல்லாமையால் குறிப்பிட்ட காசோலையை

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...)


NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

KABIS
KABIS & ASSOCIATES INC.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.
• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.
Does your current life insurance policy need a tune up please call me.



**Nimal Subramaniam**
Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com

La Capitale Financial Group | INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Assumption Life

•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA



# அத்தனைக்கும் ஆசைப்படு

## சத்குரு வாசுதேவ்

மனிதராகப் பிறந்தவர் எவருமே தவறுகளுக்கு அப்பாற்பட்டவர் அல்ல. தவறு என்று உணர்ந்த பின், அந்தத் தவறை ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறீர்களா என்பதுதான், உங்களை மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்படுத்தும். செய்தது தவறா, தவறில்லையா என்பது கூடப் பிரச்சினை அல்ல. அதை ஒப்புக்கொள்வதாவது என்கிற அகங்கார நினைப்புத்தான் பிரச்சினை! குழந்தையாக இருந்தபோது எவ்வளவு வளைந்து கொடுத்தீர்கள்? உங்களை அடித்தவரிடமே கூட எந்த வன்மமும் இல்லாமல் மறுபடி செல்வீர்களே.... அப்போது அந்தச் சந்தோஷம் எப்படி இருந்தது.

வளர வளர, உடல் அளவிலும் மனதளவிலும் இறுகி விட்டீர்கள். சமூகத்தில் உங்களுக்கென்று ஓர் அடையாளத்தை உருவாக்கிக் கொண்டீர்கள். அந்த அடையாளத்தின் கௌரவத்தை நிலைநிறுத்தும் முயற்சியில், உங்கள் நேர்மையையே பலி கொடுக்கத் தயாராகிவிட்டீர்கள். அதனால்தான், தவறுகளை ஏற்றுக்கொள்ளும் அடிப்படை குணத்தைக்கூட இழந்து விட்டீர்கள்.

'மன்னித்துவிடு! தெரியாமல் நடந்துவிட்டது! அறியாமல் செய்துவிட்டேன்! அடுத்த தடவை திருத்திக்கொள்கிறேன்' என்று பணிந்து சொல்வதால், என்ன குறைந்து விடுவீர்கள்? தவறை உணர்ந்த பின்னும், வெளிப்படையாக ஏற்கத் துணிவில்லாமல், அதை நியாயப்படுத்திக்கொண்டே இருப்பதுதான் மாபெரும் தவறு!

ஒருமுறை சங்கரன்பிள்ளை, இன்னொருவர் தோட்டத்தில் கனிந்த பழங்கள் தொங்குவதைக் கண்டார். ஒரு கோணிப்பை எடுத்து வந்தார். வேலி தாண்டிக் குதித்தார். மரத்திலிருந்து பழங்களைப் பறித்தார். கோணியில் நிரப்பித் தோளில் போட்டுக்கொண்டார். வேலி தாண்டி வெளியேறப் பார்த்தபோது தோட்டத்தின் சொந்தக்காரன் கையில் சிக்கினார்.

'யார் அனுமதியுடன் இவற்றைப் பறித்தாய்?' 'நான் பறிக்கவில்லையே! பெரும் காற்று வீசியது. காற்றில் இவை கீழே உதிர்ந்தன!' என்றார் சங்கரன்பிள்ளை. 'அப்படியானால், இந்தக் கோணியை எதற்காக எடுத்து வந்தாய்?' 'ஓ..இதுவா? இதுவும் காற்றில் எங்கிருந்தோ பறந்து வந்தது!'

'காற்றிலேயே பழங்கள் உதிர்ந்திருக்கட்டும். கோணியும் பறந்து வந்திருக்கட்டும்! பழங்களைக் கோணியில் நிரப்பியது யார்? என்று சொந்தக்காரன் உறுமினான்.

சங்கரன்பிள்ளை கலங்காமல், அப்பாவி போல் முகத்தை வைத்துக்கொண்டு, 'அதுதான் எனக்கும் ஆச்சரிமாக இருக்கிறது!' என்றார்.

தவறு செய்பவர்கள் பலரும் சங்கரன்பிள்ளை போல்தான்...கையும் களவுமாகப் பிடிபட்டாலும், தவறை ஒப்புக்கொள்ளாமல், அதை நியாயப்படுத்த மேலும் மேலும் வார்த்தைகளை அடுக்கிக்கொண்டே போவார்கள். இந்த மனப்பான்மை மிகவும் அபாயகரமானது!.

நண்பர்களிடம், சக ஊழியர்களிடம், மேலதிகாரிகளிடம், உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்களிடம், முன்பின் அறிமுகம் இல்லாதவரிடம் என்று பாகுபாடு பார்க்காதீர்கள். என்ன தவறு செய்தாலும், அதை நேர்மையாக ஒப்புக்கொள்ளுங்கள். அது உங்களைப் பற்றிய நன்மதிப்பைத்தான் கூட்டும். தவறு என்றே உணராமல், சிலர் வார்த்தைகளாலும் செயல்களாலும் அடுத்தவரைக் காயப்படுத்திவிடுவார்கள். அதைச்சுட்டிக் காட்டினால், 'உனக்கு வேதனை ஏற்படுத்த வேண்டும் என்பது என் நோக்கமல்ல' என்பார்கள்.

பழைய ஜோக் ஒன்று நினைவுக்கு வருகிறது. பஸ்ஸில் ஒருவன், தன் பக்கத்தில் நின்றவனின் காலை அழுத்தமாக மிதித்து விட்டான். பின்பு, 'கவனிக்கலே! என்று சொல்லி, காலை எடுத்துக்கொண்டான். மிதிபட்டவன் குனிந்து தன் காலைப் பார்த்து 'ஏ...காலே! அவர்தான் காரணத்தைச் சொல்லிவிட்டாரே! இன்னும் ஏன் வலிக்கிறாய்? என்று அதட்டினான்.

வேண்டுமென்றே மிதித்தாலும், தெரியாமல் மிதித்தாலும் வலி, வலிதானே? மன்னிப்புக் கேட்பதை விடுத்து, 'வேண்டுமென்றா மிதித்தேன்?' என்று விவாதிப்பது எப்படி நியாயமாகும்?

கவனமற்று இருப்பதே ஒரு தவறு என்று புரிந்துகொள்ள மறுக்கலாமா? கவனிக்காதவரை, அதே வேதனையை இன்னும் பல நூறு நபர்களுக்குக் கொடுக்க நேரலாம் அல்லவா? கவனமில்லாமல் ஒருமுறை தவறு செய்யலாம். ஆனால் தவறு பற்றிய கவனமில்லாமல்தான் தொடர்ந்து இயங்குவேன் என்பது வளர்ச்சிக்கு எதிரானது.

சிலர் உங்கள் தவறைப் பூதக் கண்ணாடியால் பார்க்கக்கூடும். பார்த்துவிட்டுப் போகட்டுமே. நீங்கள் மன்னிப்புக் கேட்டால், யுத்தம் அங்கேயே முடிந்து, குற்றம் சுமத்தியவர் அல்லவா குற்ற உணர்வைச் சுமப்பார்?

புரிந்து கொள்ளுங்கள்... இது விட்டுக் கொடுப்பதோ, தோற்றுப் போவதோ அல்ல. உங்கள் மனம் பக்குவப்பட்டிருக்கிறது என்பதன் அடையாளம்.


Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org


வியாபாரம் செய்தாலும், விளையாட்டில் ஈடுபட்டாலும் உங்கள் தவறுகளை ஏற்றுக்கொள்வதைப் பொறுத்துத்தான் வாழ்க்கையில் உங்கள் வெற்றி அமைகிறது.

தவறை ஒப்புக்கொள்ளாதவரை, மனதுக்குள் சிலுவைபோல் குற்ற உணர்வைத் தேவையின்றிச் சுமக்க நேரிடும். தவறுகளை ஒப்புக்கொள்வது என்பது, எதிரிகளையும் நண்பர்களாக்கித் தரும் பலம். எதிர்த்து வீழ்த்த முடியாத பலம். வாழ்க்கையில் உங்களை அடுத்த உயரத்துக்கு அழைத்துச் செல்லும் பலம்!

### குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

'அடுத்தவருக்குப் பணிந்து போவது பலவீனமல்லவா?'

'பணிவு என்பது தலைக்குனிவு அல்ல.. மேன்மையான கௌரவம். கோவைச் சிறையில் நான் வகுப்பு எடுத்தபோது, ஒரு கொலைக் குற்றவாளியை காட்டினார்கள். 'சிறையில் அவன்தான் தாதா. மற்றவர்கள் உணவைப் பறித்துத் தின்பான். எதிர்ப்பவர்களின் கையைக் காலை முறிப்பான்' என்றெல்லாம் சொன்னார்கள். விரும்பமில்லாமல் தான் வகுப்புக்கு வந்தான். ஆனால், ஒரு வாரத்துக்குள் அவன் முற்றிலும் கரைந்து விட்டான்.

அதன்பின் சிறையில் ஒருமுறை கைகலப்பு நடந்தது. அவன் தன் பலத்தைப் பிரயோகித்திருக்கக்கூடிய சந்தர்ப்பத்திலும் அமைதியாக இருந்தான். உடலில் சில காயங்களுடன் என் எதிரில் வந்து நின்றான்.

'இத்தனை நாட்கள் எதிர்ப்பவரை எல்லாம் அடித்துத் துவம்சம் செய்திருக்கிறேன். அப்போதெல்லாம் என்னை விடப் பலசாலி வந்துவிடுவானோ என்ற அச்சம் இருந்தது. இன்றைக்கு எதிர்ப்புக் காட்டாமல் நின்றபோது, முன்னெப்போதையும்விட மிகச் சக்தி வாய்ந்தவனாக உணர்ந்தேன்!' என்றான்.

பணிவு ஒரு போதும் பலவீனம் அல்ல.. அதுதான் பலம்! உங்கள் பலத்தைக் காட்ட நினைப்பதுதான் பலவீனம்!'






## நாமும்...

11 ஆம் பக்கத்தொடர்ச்சி

நிதி நிறுவனம் திரும்பி அனுப்பியுள்ளது (Bounced). இது மிகவும் கவலைக்குரிய விடயம். இதற்கு சில காரணங்கள் இருக்கலாம். ஆனால் எது வானாலும் நல்லதல்ல. அண்மையில் ஒரு ஆதன வியாபார நிலையத்தின் வியாபார அனுமதியை Realestate Council Of Ontario (RECO) திரும்பப் பெற்றுள்ளது. வியாபாரத்தை நடத்தியதில் ஏற்படுத்திய குளறுபடியே இதற்குக் காரணம். இன்றைய ஆதன வியாபாரத்தில் வாங்குபவர்கள், விற்பவர்கள், முதலீடு செய்பவர்கள் தரமான, தகுந்த நல்ல பெயருள்ள அனுபவமிக்க, நியாயமானவர்களுடன் வியாபாரம் செய்வதால் எதிர்காலப் பிரச்சனைகளிலிருந்து தப்பிக்க வழி சமைக்கலாம். இதற்கு வியாபார முகவர்கள் மட்டுமல்ல பொறுப்பு.

வியாபார முகவர் நிலையங்கள் (Realestate Brokerage Companies), ஆதன அடமானக் கடன் பெற்றுக் கொடுக்கும் முகவர்கள் (Mortgage Brokers), ஒரு சில சட்டத் தரணிகள் போன்றவர்களும் காரணமாகக்



கொள்ளலாம்(?). ஆதனம் வாங்குபவர்கள் விற்பவர்கள் இவற்றைக் கவனத்தில் கொண்டு தகுந்தவர்களை தெரிவு செய்வது சிறந்தது.

# தேயிலை பிறந்த கதை



சுந்தரம் இந்திரராஜா

## Birth Story of Tea

ஏழாம் அறிவுத் தமிழ்த் திரைப்படத்தில் சூர்யா இரட்டை வேடத்தில் நடித்து 2011 இல் வெளியானது போதி தர்மா வரலாறு பற்றிய ஓர் அறிவியல் புனைவுக் கதையாகும். போதி தர்மா வரலாறு பற்றி சிறிது சிறிது வித்தியாசமான கதைகள் உண்டு.

தேநீரை போதி தர்மா கண்டுபிடித்தார் என்பது ஒரு தொன்மக் கதையாக ஜென் (Zen) புத்த மத வட்டாரத்தில் சொல்லப்பட்டு வருகிறது. போதி தர்மா இரவும் பகலும் தொடர்ந்து தியானம் செய்து வந்தார். அப்படி இருக்கையில் அடிக்கடி சொக்கிக் கொண்டு தூக்கம் வந்தது. தியான நிலையில் இருந்து நழுவித் தூக்கத்தில் மனம் விழுவதை எண்ணி அவருக்குத் தன் மீதே கோபம் வந்தது. ஒரு நாள் அவர் தன் இமைகளைப் பிய்த்து தரையில் வீசியெறிந்தார். அவை விழுந்த இடத்தில் தாவரம் ஒன்று முளைத்தது.

அவர் தியானம் செய்து கொண்டிருந்த மலையின் பெயர் 'டாய்'. எனவே அந்தத் தாவரமூலிகை சீன மொழியில் 'டே' (Teh) என்று அழைக்கப்பட்டது. அதன் இலைகளைக் கொதிநீரில் போட்டு கசாயம் வைத்துக் குடித்தபோது சோம்பலை நீக்கிப் புத்துணர்ச்சி ஏற்படுவதை அறிந்தார்கள். அப்போதிலிருந்து கசாயம் (சாயம்-தேநீர்) அருந்துவது ஜென் நெறியிலும் சீனக் கலாச்சாரத்திலும் ஒரு முக்கியமான நிகழ்வாகவும், தியான முறையின் ஓர் அங்கமாகவும் இருந்து வருகிறது.

Teh என்பதுதான் அந்த மூலிகையின் பெயர். அதை ஆங்கிலத்தில் எழுதும் போது Tea என்று எழுதினார்கள். அதிலிருந்து அது ரீ-யாக உச்சரிக்கப்பட்டுவிட்டது. ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளாகச் சீனாவில் டீ (Green Tea) பழக்கத்தில் இருப்பதாகச் சொல்வார்கள். சோம்பலை நீக்கி, புத்துணர்ச்சியையும் குளிர்ச்சியையும் ஏற்படுத்தும் பானமாகவும், சிறுநீரைப் பெருகச் செய்து, உடலின் கழிவுப் பொருள்களை விரைவாக அகற்ற உதவும் மூலிகையாகவும் சீனர்கள் அதைப் பயன்படுத்தினார்கள்.

* திபெத்தில் (Tibet) ஆட்டுப்பால், பசும் வெண்ணெய், உப்புடன் தேயிலையைக் கலந்து கடவுளுக்குப் படைக்கும் வழக்கம் உள்ளது.

* கண்களுக்குக் கீழே வீக்கமிருந்தால் அரைத்துப் பூசி குணப்படுத்தத் தேயிலை உதவுகிறது.

* காய்ச்சல், பார்வைக்குறைவு, தலைவலி, வயிற்றுவலி, மூட்டுவலி, வாத நோய்களுக்கு நாட்டு மருந்தாகவும் தேயிலை பயன்படுகிறது.

அரியமூலிகை தேயிலையின் தாயகம் சீனா. புத்தமதத் துறவிகள் மூலமாக கி.மு 800 களில் தேயிலை ஜப்பானுக்குப் பரவியது. ஜப்பானிலிருந்து டச்சுக்காரர்கள் வழியாக இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளில் தேயிலை அறிமுகம் ஆனது. நாம் அறிந்தவரையில் தேயிலையை ஆங்கிலேயர்கள் இலங்கை இந்தியா நாடுகளுக்கு கொண்டு வந்தார்கள். அவர்களே இலங்கையில் தேயிலை எஸ்ட்டேட்டுகளை ஏற்படுத்தினார்கள். 1840-1850களில் இந்தியாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் வரவழைக்கப்பட்ட தேயிலை இலங்கையில் சோதனை முயற்சியாக பயிரிடப்பட்டது. அதன் பிறகு தென்கிழக்காசியா மற்றும் ஆபிரிக்கா போன்ற நாடுகளுக்கு தேயிலை பரவியது. கமெலியா சினென்சிஸ் (Camellia sinensis) எனப்படும் செடியிலிருந்து கிடைப்பது தான் தேயிலை. இதன் பதனிடும் அளவைக் கொண்டு பெயர்கள் மாறுபடும். பயிரிடப்படும் மாகாணத்தின் அல்லது பட்டணத்தின் சுவாத்தியத்திற்கு ஏற்ப தரம் சுவை மாறுபடும். இதனால் மாகாணத்தின் அல்லது பட்டணத்தின் பெயருடன் சில வகைத் தேயிலை விற்கப்படுகிறது.



செடியிலிருந்து கிடைத்த குருத்து இலைகள் / துளிர்கள் உலர விடப்பட்டு சற்று ஈரப்பற்று குறைக்கப்பட்டு பின்னர் அரைத்து சிறு துண்டுகளாக்கப்பட்டு அவற்றுக்கு நொதித்தலின் போது ஒட்சியேற்றம் செய்யப்படும். அதன் பின்னர் பச்சை நிற இலைத் துகள்கள் ஆலையில் சூட்டால் மேலும் ஈரப்பற்று குறைக்கப்பட்டு கிடைப்பது கறுப்பு நிறத் துகள்கள். இவற்றைத்தான் கருந்தேயிலை (Black Tea) என அழைக்கிறோம், இலங்கையர், இந்தியர், பாகிஸ்தானியர், பங்களாதேசத்தவர் கூடுதலாக சுவைப்பது இதுவே. தேயிலைத் துகளின் அல்லது தூளின் அளவிற்கு ஏற்ப சுவை மாறுபடும்.

மிகவும் இளம் தேயிலை செடியின் இலைகள் மற்றும் மொட்டுகளிலிருந்து குறைவாகப் பதனிடுதல் செய்யப்பட்டு ஒட்சியேற்றம் செய்யாமல் கரும்பச்சை நிற சிறிய உருண்டைகளாக அல்லது சுருள் வடிவில் கிடைப்பதை வெள்ளைத் தேயிலை (White Tea) என அழைப்பார்கள். இவை சிறிது நேரம் அவிந்ததும் விரிந்து பெரிதாகும். சீனர் கூடுதலாக சுவைப்பது இதுவே.

ஊலாங் தேயிலை (Oolong tea) இவை பதனிடும் முறைகளின் அளவிற்கேற்ப தரம் மாறுபடுகிறது. அதன் தரத்திற்குரிய விலையில் கிடைக்க ஏதுவாக உள்ளது. வெள்ளை தேயிலைக்கும் கருந்தேயிலைக்கும் இடைப்பட்ட வகையாகும். குறைவாகப் பதனிடுதல் குறைவாக ஒட்சியேற்றம் செய்யப்பட்டு கிடைப்பது. ஜப்பானியர் கூடுதலாக சுவைப்பது இதுவே.

சில வகை தேயிலைகளை நொதிக்க வைக்கப்பட்டு, அதிலும் இருமுறை நொதிக்க வைக்கப்பட்டு 10 முதல் 15 ஆண்டுகளுக்கு முதிர வைக்கப்பட்டுக் கிடைப்பது புவார் தேயிலை (Puvar Tea). ஆனால் சில உயர்ந்த வகை பச்சைப் புவார் தேயிலைகள் 30 முதல் 50 ஆண்டுகள் முதிர வைக்கப்படுகிறது. சீனர் சுவைப்பதில் இதுவும் ஒன்று.

வெண் தேயிலைகளைப் போலவே மஞ்சள் தேயிலைகளும் (Yellow Tea) தளிர்களில் இருந்தும் மொட்டுக்களில் இருந்தும் தயாரிக்கப்படுகிறது. வெண்தேயிலை போலல்லாமல் தேயிலையைப் பறித்த பின் ஓரிரவு உலர வைக்கப்படுகிறது. இதனால் மஞ்சள் தேநீர் சிறிது பொன்னிறம் கலந்த மஞ்சள் நிறம் பெற்றிருக்கும்.

தேயிலைச் செடிகளில் உள்ள குச்சிகளையும் இலைகளையும் குளிர்காலத்தில் பறித்த பிறகு காய வைத்து, நீராவியில் அவித்து, முதிர வைத்துப் பின் நெருப்பில் உலர விடப்பட்டு விற்கப்படுகிறது. இத் தேநீரை குச்சித் தேநீர் (Kukkicca Tea) எனவும் அழைக்கின்றனர்.

இவை தவிர கமேலியா சினென்சிஸ் (Camellia sinensis) எனப்படும் ஒரு வகைத் தேயிலை இலைகளைக் கொண்டிருக்காத பிற மூலிகைச் செடிகளின் பகுதிகளிலிருந்து பெறப்படும் இலைத் தேயிலை மூலிகை தேயிலை (Herbal tea) ஆகும். சில வகைப்பூக்கள் அல்லது சில வகைப் பழ வற்றல்கள் அல்லது சில வகைத் தாவரங்கள், மூலிகைகள் அல்லது இயற்கை நறுமணப் பொருட்கள் கலந்தும் விற்பனையாகிறது. அமெரிகர், ஐரோப்பயர் இவற்றைப் பாவிப்பது அதிகம்.

போதி தருமன் அல்லது போதி தர்மா ஒரு தமிழன். கி.பி. 5ஆம் நூற்றாண்டில், தமிழ் நாட்டின் காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்த ஒரு பல்லவ அரசனின் 3வது மகன். சிறந்த வீரன். தற்காப்புக் கலைகளை விசேஷமாகப் பயின்றவர். அரசு, ஆட்சியை விரும்பாமல் மனம் சொல்லும் வழியில் சென்றார். பிரஜ்னதரா என்கிற மஹாயான பௌத்த துறவியை தன் குருவாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு ஆன்மிகத்தில் தெளிவு பெற்றார். அன்றைய பௌத்தத்தில் இருந்த உட்பிரிவு ஒன்றைச் சார்ந்திருந்ததாகவும், அந்த உட்பிரிவின் கோட்பாடுகளுக்கு இந்தியாவில் மதிப்பு இல்லாதிருந்ததால், நலாந்தாவிலிருந்து இமயமலையை கால்நடையாகவே தாண்டித் திபேத்துக்குச் சென்று, அங்கிருந்து மலைகளைக் கடந்து சீனாவுக்குச் சென்றுவிட்டதாகவும் சொல்லுகிறார்கள்.




சீனாவில் போதி தர்மா - தா மோ என்று அழைக்கப்பட்டிருக்கிறார். தா மோ வை தெற்கு சீனாவை ஆண்டு கொண்டிருந்த அப்போதைய சீன அரசன் வூ வரவேற்று உபசரித்திருக்கிறார். அந்த மன்னனின் தற்பெருமை, அகம்பாவம் ஆகியவற்றை தா மோ ஆல் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. விளைவு - மன்னனின் கோபம், விரோதம் அந்த ராஜ்ஜியத்தை விட்டு வெளியேற உத்தரவு. பின்னர் வட சீனாவிற்கு சென்ற தா மோ, யாங்ட்சி ஆற்றின் கரையில் இருந்த ஷாவோலின் கோயிலை அடைந்திருக்கிறார். கோயிலில் இருந்தவர்களின் அழைப்பை முதலில் ஏற்காமல் அருகில் இருந்த மலைக்குகை ஒன்றில் தவம் இருக்க ஆரம்பித்திருக்கிறார். மலைக்குகையில் ஒன்பது ஆண்டுகள் ஒரு சுவற்றின் முன்னால் உட்கார்ந்து கடுமையான தவத்தை மேற்கொண்டிருக்கிறார். தவத்தின் விளைவாக, புதிய உத்வேகத்தைப் பெற்று, ஷாவோலின் கோயிலில் தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறார். ஷாவோலின் பள்ளியில், பிள்ளைகளுக்கு பௌத்தம், தியானம் மற்றும் தற்காப்புக் கலைகளைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார். தா மோ சீனாவில் புத்த மதம் பரவ முக்கிய காரணமாக இருந்தவர். போதி தர்மா என்கிற தமிழனால் உருவகம் பெற்றது தான் ஜென் புத்த மதம். புத்தரின் 28வது நேரடி சீடராக தா மோவை சீனர்கள் ஏற்றுக் கொண்டார்கள். பின்னர் ஜப்பானிலும் வேறு வடிவங்களில் தா மோ புகழ் பெற்றார். ஜப்பானில், அவன் அதிருஷ்டத்தைத் தருபவனாகக் கொண்டாடப்பட்டார்.

தா மோ சீனாவில் இருந்த காலத்தில் புத்த பிக்குகள் பிச்சை எடுத்துக்கொண்டு பலவீனமானவர்களாகவும் சமுதாயத்திற்கே பாரமாகவும் இருந்தார்கள். மற்றவர்களால் துன்புறுத்தப்பட்டுக்கொண்டு பயந்தே வாழ்ந்திருந்தார்கள். ஆனால் தா மோ தம்முடைய சீடர்களுக்கு மூச்சுப்பயிற்சியின் சில நுணுக்கங்களைச் சொல்லிக் கொடுத்தார். அந்தப் பயிற்சிகளின் மூலம் மனதின் இயக்கத்தையும் உடலின் செயல்பாட்டையும் அடக்கமுடியும். இன்னொரு பயிற்சியின் மூலம் உடலை வலுவாக்கி அசுரபலத்தைப் பெற முடியும். மனதை தீட்சண்யமாகச் செயல்படுத்த முடியும். உடற்பயிற்சிகளையும் சொல்லிக்கொடுத்தார். குங்ஃபூ கலையின் பிதாமகர் என்றும் போற்றப்படுகிறார்.

ஜென் புத்த நெறியில் தமாஷ் செய்யத் தெரியவில்லை என்றால் ஞானம் அடைந்த குருவாக ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள். ஞானத்தின் அலாதியான சுவைகளில் நகைச்சுவை அவர்களுக்குப் பிரதானமானது.

# சேமிப்பு



Ranjson K.

பட்டுத்தெளிந்த பின் கற்றுக்கொள்ளும் பாடங்கள் பல பள்ளிக்கூடங்களில் சொல்லித்தருவதில்லை. அவற்றில் ஒன்று தான் இந்தச் சேமிப்பு. உலகில் இருந்த, இருக்கின்ற பல கோடீஸ்வர பெருமக்கள் இந்த நான்கு எழுத்து மந்திரத்தின் சக்தியை வலிமையை வைத்துத்தான் தங்களை வலிமை மிக்கவர்களாக மாற்றி இருக்கிறார்கள். வீடு விற்பனை முகவராக கடந்த பத்து வருடங்களில் நான் சந்தித்த பல இன மக்களின் நடைமுறை வாழ்க்கையின் வெளிப்பாடே இந்தக் கட்டுரை. இதற்கு நானும் விதிவிலக்கல்ல என்பதோடு இன்னும் நான் திருந்தவில்லை என்பதை நினைக்கும் போது மனம் கூனிக்குறுகி நிற்கின்றேன். ஏனெனில் நீ முதலில் திருந்திக்கொள் சமூகம் தானாக திருந்தும் என்பது தானே வாக்கியம். உழைப்பின் மீது இருக்கும் நம்பிக்கையால் கையில் இருக்கும்போது தெரியவில்லை. கைவிரலால் பலமுறை எண்ணும் போது தெரியவில்லை. கையைவிட்டுக் கரையும் போதும் தெரியவில்லை. தன் தேவைக்காக அடுத்தவரிடம் கைகட்டி கைநீட்டும் போது தான் தெரிகிறது இந்தக் கலர் காகிதங்கள் கைக-ளில் இல்லாத போது ஏற்படுத்தும் கனமான வலி.

சிறியோர் பெரியோர் ஏழை பணக்காரன் ஆண் பெண் எல்லோருக்கும் இது இன்று முதல் ஒரு தாரக மந்திரமாக ஓங்கி ஒலிக்கட்டும். இதில் யாராவது வெற்றியடைந்தால் அந்தப் பலன் விளம்பரம் பத்திரிகையை வாழவைக்கட்டும்.



சேமிப்பு! வாழ்வில் வெற்றி பெறுவதற்கு இது அவசியம் என்பதை விட தகுதி கூட. பழக்கத்தின் மூலம் தான் சேமிக்கும் குணத்தை உருவாக்க இயலும். எந்த ஒரு செயலையும் பல தடவை திரும்பத் திரும்பச் செய்தால் அது பழக்கமான ஒன்றாக மாறிவிடுகிறது. மனம் ஏன் என்று கேள்வி கேட்காமல் ஏற்றுக்கொண்டு அதை ஒருதி-னசரி செயலாக்கிக் கொண்டுவிடும். அதை மறுபடியும் செய்வதற்கான தூண்டுதல் தானே ஏற்படும். லட்சக்கணக்கான மக்கள் வறுமையிலும் பற்றாக்குறையிலும் வாழ்ந்து வருகிறார்கள். தங்களது பழக்க வழக்கங்களை அழிவுத் திசையில் திருப்பியதால் இந்தச் சிரமங்களை அவர்கள் எதிர்கொள்ள நேரிடுகிறது. சம்பாதிக்கும் திறன் குறையும் போது மட்டும் அல்ல பணப் புழக்கம் நன்றாக இருக்கும் போதே சேமிக்க வேண்டியதன் அவசியம் ஏற்படுகிறது. சேமிப்பு அதிகரிக்கும் பொழுது வறுமை வந்து சூழ்ந்து கொள்ளுமோ என்ற பயம் மனதிலிருந்து விடுபட்டு செல்வச்செழிப்பு பற்றிய நம்பிக்கை அங்கே குடியேற ஆரம்பித்துவிடும்.

செல்வச் செழிப்பிற்கு சேமிப்பு தான் மேடை போட்டுத்தரும் என்பதை மறவாதீர்கள்.

உங்கள் வருமானம் உயரும் பொழுது உங்கள் சேமிப்பும் அதற்கு ஏற்ப உயர வேண்டும். பொருளாதார சுதந்திரத்தை அடைவதற்கான பாதையில் நீங்கள் வெற்றி நடை போட சேமிப்பு அத்தியாவசியமானது. வறுமை பற்றிய பயம் மனதில் அதிகரிக்கும் பொழுது சம்பாதிக்கும் திறமை குறையத் தொடங்கிவிடும். தினசரித் தேவைகளை நிறைவு செய்யவே பணமில்லாத நிலமை ஏற்படும்.

ஆயிரக்கணக்கான வீடுகளில் பேசப்படும் பொதுவான தலைப்பு வறுமை பற்றாக்குறை பற்றியதாகவே இருக்கிறது. பேசுவதையே அவர்கள் பெறுகிறார்கள். அவர்கள் வறுமையை தங்களின் தலைவிதி என்று ஏற்றுக்கொள்கிறார்கள். வறுமை உணர்வு அதைப்பற்றி அடிக்கடி சிந்திப்பதாலும் பேசுவதாலும் ஏற்படுகிறது.

கடன் என்பது ஒரு இரக்கமில்லாத எஜமானன். சேமிப்பு என்ற குணத்திற்கு எதிரான மோசமான விரோதி. ஆசை தன்னம்பிக்கை திடசித்தம் போன்றவற்றை வறுமை அழித்து விடுகிறது. கடன்சுமையை முதுகில் ஏற்றி வைத்துத் தோல்வி என்ற தண்டனையை வழங்கிவிடுகிறது. தலையில் கடன் சுமை ஏறியுள்ள ஒருவனால் தனது வேலையைச் சரியாகச் செய்ய முடியாது. தலைமைப் பொறுப்பில் உள்ளவர் தனது திறமையை வெளிப்படுத்த இயலாது. தனது குறிக்கோளை வகுத்துக்கொள்ளவோ அதை செயல்படுத்தவோ கடன்காரனால் இயலாது. கடன்பட்டுக் கிடக்கும் ஒருவன் அடிமை போன்றவன்.

(தொடர்ச்சி 19ஆம் பக்கம்...)



## Math tutorial 348

Answers to tutorial 347

1) $x^4+5x^2+9 = x^4+6x^2+9-x^2$

$=(x+3)^2-x^2=(x^2+3+x)(x^2+3-x)$

$=(x^2+x+3)(x^2-x-3)$

2) Let $f(x)=x^5-y^5$, $f(y)=y^5-y^5=0$

Therefore (x-y) is a factor of $x^5-y^5$

2c) $x^5-32=x^5-2^5=(x-2)(x^4-2x^3+4x^2-8x+16)$

3) A line L passes through A (-1 ,-2 ) and is parallel to 3x-4y +5= 0, the line L will have equation 3x -4y +c =0

Since it passes thro. A(-1 ,-2 ),C = -5 .Hence the scaler equation is 3x -4y -5 =0

4) There will be 26 +26=10 =62 symbols available (a) with repetition each positioncan be any of the 62,Hence there will be $62^8$ possible passwords

b) With no repeted digits there will be 62 .61.60 .59.58.57.56.55 different passwords.

d) The number of passwords with no 9 is $61^8$,therefore with atleast one 9 is $62^8-61^8$ passwords

Tutorial348 Questions

1) A medicine is administered to a patient.The amount M of the medicine (in mg) in one millilitre of patient 's blood after t hours is given by $M(T)=5t-t^2$.

a) Determine the average rate of change from 1 to 2 ?

b) Determine the instantaneous rate of change at t= 2

2) How many possible seven –digit telephone numbers are there witin a given area code such that the first digit is 3 ,5 or 6?

3) At what point is the tangent to the curve $x+y^2=1$ parallel to the linex+2y =0

4) A sound is 1000 000times more intense than a sound you can just hear.What is the loudness of the sound?

ByMrS.F.Xavier(Teacher) tel6473409490/4167322228

# ஆரோக்கியத்தின் ஆதாரம் சூரிய ஒளி

**நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்**

ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
C - 416.617.5721/H - 416.289.2033 after 7:00pm



"சூரிய ஒளி புகாத வீட்டில் வைத்தியர் அடிக்கடி நுழைய நேரிடும்" என்ற பழ மொழி உண்டு. இது சூரியனுக்கும் மனித ஆரோக்கியத்துக்கும் உள்ள நெருக்கத்தை எடுத்துக் காட்டுகின்றது. நமது உடல் நலத்தைப் பாதுகாக்கவும், உடலில் உள்ள நச்சுப்பொருட்களை வெளியேற்றவும் சூரிய ஒளி பெரும் பங்கு வகிக்கின்றது.

### உடல் நலத்துக்கு சூரிய ஒளியின் பங்கு

### அ. ஆயுள் பெருகும்

ஆயுளை அதிகரிக்கச் செய்யும் சத்துக் களில் மிகவும் முதன்மையானது வைட்ட மின் D. உடலுக்குத் தேவையான வைட்ட மின் D சத்தில் 90% வீதம் சூரிய ஒளியிலி ருந்தே கிடைக்கின்றது. இதுதவிர பால், மீன் போன்ற உணவுப்பொருட்களிலும் இந்தச் சத்து அதிகம் உள்ளது. உடலில் வைட்டமின் D சத்து இரத்தத்தில் குறையும் பட்சத்தில் தசைகள் வலு இழந்து எலும்பு களும் பாதிக்கப்பட்டு நோய் எதிர்ப்பு சக்தியும், உடல்பலமும் குறைகிறது. சூரிய ஒளியில் உள்ள ஊதா கதிர்கள் உடல் மீது படும்போது தோலில் உள்ள கொழுப்பு உருகி இரசாயன மாற்றம் ஏற்பட்டு வைட்ட மின் D ஆக மாறி உடலுக்குள் செல்கிறது. இது உடலை வலுப்பெறச் செய்து ஆயுளை அதிகரிக்கச் செய்கிறது.



### ஆ. டெஸ்ரோஸ்டிரன் (Testosterone) அதிகரிக்கும்

ஆண் தன்மையைத் தூண்டும் டெஸ்ரோஸ் டிரன் ஹோர்மோன் (Hormone) அளவு அதிகரிக்கவும் வைட்டமின் D தேவைப் படுகிறது. காலை மாலை இரு வேளை- களும் குறைந்தது அரை மணி நேரம் சூரிய ஒளியில் நின்றாலே உடலுக்குத் தேவையான டெஸ்ரோஸ்டிரன் (Testos- terone) 60% இயற்கையாகவே கிடைத்து விடுகிறது.

### இ. புற்றுநோயை தடுக்கும்

சூரியனில் இருந்து வெளிவரும் ஊதாக் கதிர்கள் சருமத்தில் உள்ள மெலனின் (Melanin) என்ற நிறமியுடன் நடந்து இணைந்து புற்றுநோய்க்கு எதிராக செயல் படுகின்றன. எனவே தினமும் 10 நிமிடம் உடலில் சூரிய ஒளி படும்படி நின்றாலே சரும புற்று நோயை (Skin cancer) தவிர்த்துவிடமுடியும். மேலும் நுண்ணுயிர் கிருமிகள் மற்றும் ஒட்டுண்ணிகளையும் சூரியக் ஒளிக்கதிர்கள் அழித்துவிடுகின்றன.

### ஈ. எலும்புகள் உறுதியாகும்

குழந்தைகளின் எலும்பு வளர்ச்சிக்கும் பெரியவர்களின் எலும்பு வலுப்பெறுவதற் கும் கல்சியம் தேவை. நாம் உண்ணும் உணவில் உள்ள கல்சியத்தை கிரகித்து எலும்பு வலுப்பெற வைட்டமின் D அவசியம். இதனால்தான் சூரிய ஒளியில் தினமும் நடமாடுவது அவசியம் என்று அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். சாதாரணமாக 40 வயதை கடக்கும் போது எலும்புகள் தேய் மானமடைய தொடங்குகின்றன. அதன் மூட்டுக்களில் வலி ஏற்பட்டு பல உபாதை- களை முதுமையில் சந்திக்க நேரிடுகின்றது. இந்தச் சிக்கலுக்கு மருந்து மாத்திரைகள் தீர்வாக அமையாது. இதற்குரிய மாற்று மருத்துவம் சூரிய ஒளியும், தகுந்த உணவு முறையும் தான் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

### உ. சூரிய நமஸ்காரம்

பண்டைய காலம்தொட்டு நம் முன்னோர் கள் கடைப்பிடித்து வரும் யோகாப் பயிற்சி முறைகளில் ஒன்றுதான் சூரிய நமஸ்காரம். இதில் கல்லீரல், மண்ணீரல், வயிறு, குடல் என அனைத்து உள் உறுப்புக்களும் மசாஜ் செய்யப்படுகிறது. சூரிய நமஸ்காரம் செய்தால் மலச்சிக்கல் வராது. மேலும் வயிற்று உறுப்புக்களில் இரத்தம் தேங்குவ தும் தவிர்க்கப்படுகின்றது. உடல் அசைவும் மூச்சு விடுதலும் சிரமமின்றி இருக்கும். நுரையீரலுக்கு காற்றோட்டமும் தாராளமாக கிடைக்கிறது. மூட்டுக்கள் அனைத்தும் வலுவடைகின்றன. மூளை மற்றும் வயிற்றுப் பகுதியிலுள்ள அனைத்து சுரப்பிகளும் தூண்டப்படுகின்றன. கழுத்துப்பகுதி முன் னும் பின்னும் நன்கு வளைவதால் தைரொய்டு, பரா தைரொய்டு சுரப்பிகள் சீராக இயக்கப்படுவதால் உடலுக்கும் மனதிற்கும் புத்துணர்ச்சி கிடைக்கின்றது.

மேலும் சூரிய ஒளியில் நிற்பதால் ஏற்படும் வியர்வையால் உடலிலுள்ள ஊரியா எனும் தாதுப்பொருள் வெளியேற்றப்படுவதால் சிறு நீரக, பித்தப்பைகளில் கற்கள் உருவா- கமால் தடுக்கப்படுகின்றது.

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி
NON MEDICAL INSURANCE

நீங்கள்
இன்சுலின் பாவிப்பவரா?
85 வயதுக்கு குறைந்தவரா?
மாரடைப்பு நோயால் பாதிக்கப்பட்டவரா?
வேறு காப்புறுதி நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவரா?
குடி போதையில் வாகனம் செலுத்தி தண்டனை பெற்றவரா?
எவராயிருப்பினும் உங்களது காப்றுதியை என்னால் பெற்றுத்தரமுடியும்.

SUPPER VISA MEDICAL INSURANCE
கனடாவுக்கு வரஇருப்வவர்கள் தங்களது விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டிய முக்கியமான SUPPER VISA MEDICAL INSURANCE பெற்றுக்கொள்ள என்னை அழையுங்கள்
(Upto $100,000 Refundable)

✓ Whole life Insurance- 20 வருடங்கள் மட்டும் பணம் கட்டும் காப்புறுதி . அத்துடன் CASH BACK
✓ Mortgage Insurance - Upto 40 Years.
✓ Critical Illness Coverage- Upto 25 Illness ( no claims 100% cash back)

| 20 Years Coverage | $100,000 | | $200,000 | | $500,000 | |
|---|---|---|---|---|---|---|
| | Male | Female | Male | Female | Male | Female |
| Age 20 | $11.79 | $10.00 | $17.10 | $13.68 | $34.20 | $24.30 |
| Age 30 | $12.50 | $11.00 | $18.00 | $14.22 | $35.00 | $25.00 |
| Age 40 | $17.00 | $13.95 | $26.00 | $20.62 | $54.00 | $39.00 |
| Age 50 | $38.25 | $27.72 | $65.16 | $46.62 | $144.90 | $95.00 |



Vany Jeganmohan
Insurance Advisor
416.670.7463
MEGA Financial Group
PH 28 - 4168 Finch Ave East
Scarborough ON M1S 5H5
Desjardins　Assumption Life　Manulife　Sun Life Financial
Life Insurance - Critcal Illness Insurance - Non Medical Insurance - RESP - Super Visa / Travel Insurance

# யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

## (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை)



- கனி -
416.261.1348
ptons@hotmail.ca

5. பெருவீக்கக் காலம் (தொடர்ச்சி)

பேரண்டத்தின் சக்தி பற்றியும். எங்கள் ஆரம்பப் பிரபஞ்சத்தின் நிகர சக்தி பூச்சிய மாகத்தான் இருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கருத்தினையும் அறிந்து விட்டோம். மேலும் முரண் ஈர்ப்புப் பற்றிய தெளிவினைக் கூட சென்ற தடவையிற் பார்த்தோம். அவற்றில் இருந்து இனித் தொடருவோம்.

ஈர்ப்பின் செல்வாக்கு நிறைந்துவிட்ட (இதனைக் குவாண்ரம் ஈர்ப்பு என்கிறார் கள்) சின்னஞ் சிறிய புடவி வெற்றிடமா கவே உள்ளது இந்த வெற்றிடத்தைப் ‘போலி’ வெற்றிடம் (False Vacuum) என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். அது என்ன போலி வெற்றிடம் என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். போலி வெற்றிடம் என்றால் என்னவெனும் விளக்கத்தினை ஒப்பீட்டு வடிவில் விஞ்ஞானிகள் எவ்விதம் தருகிறார்கள் எனப் பாருங்கள்.

சாதாரணமாகப் பாவிக்கும் பென்சில் ஒன்றி னைக் கருதுங்கள். அப்பென்சிலை, அதன் கூரான முனையில் மேசையில் நிலைக் குத்தாக நிறுத்துங்கள். இது சற்றுக் கடினம்தான், ஆயினும் கூடுமான காரியம் தான். சரி, அப்படி நிறுத்தியாயிற்று என் போம். இப்பொழுது அப்பென்சில் ஒரு சமநிலையில் நிற்கும். அதனை உறுதி யில்லாச் சமநிலை என்போம். அதே பென்சிலை மேசையில் கிடத்திவிட்டாலும் வேறொரு சமநிலை எய்தி, மேசையில் உறுதியாக இருக்கும். ஒருவேளை சின்ன வகுப்புகளில் இச்சமநிலைகள் பற்றி நீங் கள் கற்றிருக்கக் கூடும். இந்த எடுத்துக் காட்டினைத்தான் போலி வெற்றிடத்திக்கு ஒப்பிடுகிறார்கள்.

பேரண்டத்தின் ஆரம்ப வெற்றிடத்தைக் கூரான முனையில் தங்கி நிற்கும் பென்சி லுக்கு ஒப்பிடுகிறார்கள். இந்தப் போலி யானது நிலையானதும் அல்ல, உறுதி யானதும் அல்ல. தனது போலியான நிலை யில் நின்றும் உறுதியான நிலைக்கு வருவ தற்கு எத்தனித்துக் கொண்டு இருக்கும். அவ்விதமே, எங்களது போலி வெற்றிடமும் உண்மையான வெற்றிடமாக மாறுவதற் கான முனைப்புடன் இருந்தது எனலாம். இந்தப் போலி வெற்றிடம், உண்மையான வெற்றிடமாக மாறியதே பேரண்டத்தின் மூன்றாவது நிலைமாற்றமாகும். இம்மாற்றத் திற்கான நேரம் மிகச்சிறியது. அதனைத் தான் பெருவீக்கக் காலம் என்கிறார்கள். இம்மாற்றக் காலத்தில், இம்மாற்றத்தின் விளைவாகப் பேரண்டம் விரைவாகத் தன்னை பெருப்பித்துக் கொள்ள, அதனை ஒரு வீக்கத்துடன் ஒப்பிட்டுப் பெருவீக்கம் என்ற பெயரைக் கொடுத்து விட்டார்கள். இப்பெருவீக்கம் எவ்விதம் ஏற்பட்டிருக் கலாம் என விஞ்ஞானிகள் கருதுவதும் மிக அழகான விளக்கமாகும். கொஞ்சம் விஞ்ஞானத்தனம் அதிலே தொனித்தாலும், அதனை யும் தெரிந்து கொள்வோம்.



போலி வெற்றிடத்துள் ஏற்பட்ட மாற்றமாக, பேரண்டத்தின் முக்கியமான மாற்றம் நிகழ் கின்றது. போலி வெற்றிடத்துள் இன்று பேரண்டம் முழுவதும் காணப்படுகிறது எனக் கருதப்படுகிற கிக்ஸ் பாயம் (Higgs Flux) மிகச் சிறிய கணத்துள் நிரம்பிக் கொள்கின்றது. அதாவது இப்போது வெற் றிடம் முழுவதும் கிக்ஸ்புலம் தோன்றி விட்டது. விஞ்ஞானத்தில் புலம் ஒன்றினுள் அதன் பாயம் ஒன்று இருப்பதனாலேயே அது புலத்தின் தன்மையைக் காட்டுகிறது என்கிறார்கள். அதுதான் அந்த மாற்றம்.

கிக்ஸ் புலம் வெற்றிடத்துள் வந்துவிட்ட தினால், இப்போது அதனுள் ஏதோ வந்து விட்டது, அது வெற்றிடம் இல்லை என நினைத்து விடாதீர்கள். இந்தப் புலம் என் பது அதனை உணரக் கூடிய பிரதேசம் மட்டுமே. அங்கே ஏதேனும் இருக்க வேண்டும் என்றில்லை. பொருள் ஒன்றி னைச் சுற்றி ஈர்ப்புப் புலம் இருப்பதைப் போன்றோ, அல்லது காந்தமுனை ஒன்றி னைச் சுற்றிக் காந்தப் புலம் ஒன்று இருப் பதைப் போலவோ இன்னமும் மின்னேற்றம் ஒன்றினைச் சுற்றி மின்புலம் இருப்பது போலவோ, அந்தந்த வினைகளைக் காட் டக் கூடிய பிரதேசமாகவே மட்டும் புலங் கள் இருக்கும். அப்படியான ஒரு புலமாகவே இந்தக் கிக்ஸ் புலமும் காணப்படுகிறது.

போலி வெற்றிடத்துள் கிக்ஸ் புலம் சேர்ந் ததில் என்ன மாற்றம் நிகழும் என்பதுதான் முக்கிய விடயம். நான் முன்னர் குறிப்பிட்ட உறுதியில்லாச் சமநிலையில் குழப்பம் ஏற் படுகிறது. இக்குழப்பமானது போலி வெற்றி டத்தை ஒரு உறுதியான நிலைக்கு ஒப் பானதாக மாற்றிவிடும். கூர்முனையில் நிற்கும் பென்சில் காற்றின் மெல்லிய சலப்பினாலோயே நிலைகுலைந்து சாய்ந்து விடுதல் போன்று போலி வெற்றிடத்திலும் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. கிக்ஸ் புலம் சேர்ந்ததும், போலி வெற்றிடத்தின் சக்தி யானது குறைந்துவிடுகின்றது. போலி வெற்றிடத்தின் மொத்த சக்தியும் அதன் கனவளவிற்கு விகித சமனாக இருக்கும். எனவே, போலி வெற்றிடம் குறைத்துக் கொண்ட சக்தியினை நிரப்புவதற்கு தனது பருமனை பெருப்பிக்க வேண்டிய நிலைக்கு வந்து விடுகின்றது. அதனால் அது அக் கணத்தில் பெருத்துவிட்டது என்றொரு விளக்கத்தினைக் கொடுக்கலாம்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான வி'யங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இங்கு இன்னொரு விடயத்தினையும் கருத வேண்டியுள்ளது. பேரண்டத்தில் சக்தியை ஆக்கவோ அழிக்கவோ முடியாது என சக்திக் காப்புத் தத்துவம் கூறுகின்றது. அப்படியாயின் போலி வெற்றிடத்துள் கிக்ஸ் புலம் தோன்றுகையில் மறைந்த சக்தியிற்கு என்ன நடந்தது என்ற கேள்வி எழுகின்றது. அம்மறைந்த சக்தியின் அல் லது குறைவடைந்த சக்தியின் தொழிற் பாட்டிற்கு போலி வெற்றிடத்துள் ஒன்றுமே இல்லை.

அதனால் அக்குறைவடைந்த சக்தி வேலையாக மாறுகின்றது. சரி, வேலை யாக மாறிப் போலி வெற்றிடத்துள் என்ன செய்ய முடியும் என்ற அடுத்த கேள்வி எழுகின்றது. ஏனெனில் அங்கு தான் ஒன்றுமே இல்லையே! ஒரே வேலை தான் செய்ய முடியும். வெற்றிடத்தை அதாவது புடவியைப் பெருப்பிப்பதுதான் அது. அதுதான் அங்கு நடக்கின்றது. இதன் விளைவாகப் பேரண்டம் அச்சிறிய கணத் தில் ஒப்பீட்டளவில் பென்னாம் பெரிசாக உப்பிவிடுகின்றது.

இவ்விதம் பேரண்ட வீக்கத்திற்கான பொருத்தமான பல காரணங்களைத் தங்கள் கருத்துக்களாக விஞ்ஞானிகள் கொடுக்கின்றார்கள். அவை எல்லாம் ஒன் றிணைய, பேரண்டம் கற்பனை பண்ணவே முடியாத விரைவாக தன்னைப் பெருப்பித் துக்கொண்டது. இதுதான் பெருவீக்க மாக இங்கே குறிப்பிடப்படுகின்றது. ஆக, பேரண்டத்தின் போலி வெற்றிடம், கிக்ஸ் புலத்தினால் நிரம்பி, உண்மை வெற்றிட மாக மாறிய நிகழ்வின் விளைவே பேரண் டப் பெருவீக்கமான விளைவைக் காட்டியது என்று விஞ்ஞானிகள் உய்த்தறிந்து கொண்டார்கள், கொள்கை முறையில். இப் பொழுது பெருத்துவிட்ட, உண்மை வெற்றி டத்தைக் கொண்டதாக பேரண்டம் காணப் படுகிறது. இவ்வெற்றிடம் முழுவதும் கிக்ஸ் சின் புலம் பரவியிருக் கின்றது. அதனால் இதனை கிக்ஸ்சின் வெற்றிடம் எனவும் கூறுவார்கள்.

பேரண்ட வெற்றிடத்துள் தோன்றிவிட்ட கிக்ஸின் புலமும் சும்மா இருக்கவில்லை. தன்பங்கிற்கான வேலைகளை அதுவும் காட்டத் தொடங்கியது. அது என்ன என்ப தற்கு முன்னராக, பிக்பாங்கின் பின்னராக இதுவரை நடந்தவற்றைக் கொஞ்சம் சுருக் கமாக நினைவிற்குக் கொண்டு வருவோம். கிக்ஸின் புலம் எவ்விதம் நடந்து கொண்டி ருக்கும் என விஞ்ஞானிகளின் கருத்து களை அடுத்துப் பார்ப்போம்.

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, • முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS • TENNIS ELBOW PROBLEM
• SKIN PROBLEM • TREAT WITH MASSAGE THERAP
• RESPIRATORY PROBLEMS • ALLERGIES
• DIGESTIVE PROBLEMS • SEXUAL PROBLEMS
• VARICOSE VEINS • SEXUAL PROBLEMS
• BACK PROBLEM /NECK PROBLEM • CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# கணையப் புற்று நோய்



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

## Pancreatic Cancer

நீரிழிவு (Diabetic) நோய் உள்ளவர்களுக் கெல்லாம் கணையம் (Pancreas) பற்றி நிறையவே தெரிந்திருக்கும். இது உடலில் உள்ள முக்கிய உறுப்புக்களில் ஒன்றாகும். 'மூர்த்தி சிறிதொன்றாலும் கீர்த்தி பெரிது' என்பது போல 15செ.மீ. (6அங்.) நீளமாக இது இருந்தாலும் செய்யும் தொழில் அதிகம். இது அடி வயிற்றின் மேல் இடது பக்கமாக உள்ளது. இரைப்பைக்கு பின்னால் அமைந்துள்ளது. இது தலைப் பகுதி (Head of pancreas) கழுத்துப்பகுதி (Neck of pancreas), உடல் பகுதி (Body of pancreas), வால்பகுதி (Tail of pancreas) எனப் பல பகுதிகளை உள்ளடக்கி உள்ளது. தலைப்பகுதி உதரவிதானத்தின் (Duodenum) குழிவுப்பகுதியில் உள்ளது. தலைப்பகுதியை சுற்றி 2 இரத்தக் குழாய்கள் (நாடி, நாளம்) உள. கழுத்து 2.5 செ.மீ நீளமாகும். உடல்பகுதி நீளமானது. வால்பகுதி மண்ணீரலுக்கு அருகில் முடிகிறது.

கணையமே எமது உடலில் உள்ள சீனிச் சத்தினை கட்டுப்படுத்தும் தன்மையது. செமிபாடு அடையும் பொருட்களை உறிஞ்சும் தன்மையது. இன்சுலினை உற்பத்தி செய்து சீனிச்சத்தின் மட்டத்தினை கட்டுப்படுத்த உதவுகிறது. உயிர்ச்சத்தினை மீட்கும் இயற்பொருளாக (Metabolism) விளங்குகிறது. மூன்று மில்லியன் கலங்களை கூட்டாகக் கொண்டுள்ளது. இதனை (Pancreatic Islets) என்பர். இதல் நாலு விதமான கலங்கள் வேறுபாடாக செயல்படுகின்றன. வேறான ஹோர்மோன் களை சுரக்கிறது. Alpha cells, Glucagon, Beta cells, Insulin என்பனவே அவையாகும். எமது செமிபாட்டிற்கு இவை மிக உதவுகின்றன. கணையத்தில் நோய் ஏற்பட்டு விட்டால், 'Pancreatitis' நோய் ஏற்படலாம். இதனால் அடி வயிறு வலிக்கும். கடுமையான மது பாவனையாலும் நோய் ஏற்படலாம். சின்னமுத்து, கூவக்கட்டு என்பவற்றாலும், பாம்புக் கடியாலும் பாதிப்புறலாம். மஞ்சட்காமாலையாலும் இவ் உறுப்பு பாதிப்புறலாம். மலம் வெளிறியும், சலம் கடுமையான நிறமாகவும் இருக்கும். மண்ணீரல், வயிறு, சிறுநீரகம், ஈரல் போன்றவற்றை ஒழுங்காக செயல்படுத்த கணையமே நடுநாயகமாக நின்று உதவுகிறது.

கணையத்தில் ஏற்படும் நோய்களில் முக்கியமானது புற்றுநோய் (Pancreatic Cancer) ஆகும். ஏனைய உடல் உறுப்புக் கள் போலவே கணையத்திலும் புற்றுநோய் ஏற்பட சந்தர்ப்பங்கள் உண்டு. இதல் பல்வேறு புற்றுநோய்கள் இருந்தாலும் 'Adenocarcinoma' என்ற வகையே முக்கியமானதாகும். கணையத்தில் புற்றுநோய் எழுவதற்கு சரியான காரணத்தை உடன் கூறமுடியாது விட்டாலும் எவ்வகையான காரணிகள் இதற்கு ஆபத்தானவை என்பதனை ஒழுங்குபடுத்தியுள்ளனர்.

முதலாவது ஆபத்தான காரணி புகை பிடித்தலாகும். புகை பிடிக்காதவர்களைவிட 2-3 மடங்கு பாதகமானநிலை புகை பிடிப்பவர்களுக்கு ஏற்படுகிறது. அடுத்த காரணி ஒருவரது இனக்குழுமம் ஆகும். ஆபிரிக்க - அமெரிக்கர்கள் ஏனைய இனங்களை விட கூடுதலாக இப்புற்று நோய்க்கு உட்படுகிறார்கள். அடுத்துள்ள காரணி ஒருவரது வயதாகும். 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்நோய்க்குரிய ஆபத்து அதிகம். அடுத்து நீரிழிவு ஒரு காரணமாகும். நீரிழிவு உள்ளவர்களிடம் புற்றுநோய் இருப்பதாக சோதிக்க நேரிடுகிறது. அடுத்து கணையத்தில் உள்ள கடுமையான அழற்சி (Chronic Inflammation) மூலமும் புற்றுநோய் தோன்ற வாய்ப்புண்டு. குடும்ப வரலாறு கூட இவ்வகையான புற்றுநோய்க்கு காரணமாகலாம். ஏறக்குறைய 10 வீதமான நோயாளர்கள் பரம்பரை ரீதியாக உள்ளவர் களாவர். இதனை Inherited Genetic Mutations' எனலாம்.

கணையப்புற்றுநோய் தாமதாகவே கண்டறியப்படுகிறது. காரணம் இந்நோயாளிகளின் அடையாளங்கள் ஏனைய நோய்களுடன் சம்பந்தப்பட்டுள்ளமையால் ஆகும். எனவே ஆரம்பநிலையில் கண்டறியப்படுவதில்லை. கணையப் புற்றுநோயாளிகளில் 50 சதவீதமானவர்களுக்கு மஞ்சள்காமாலை (Jaundice) இருக்கலாம். தோல் மஞ்சளாகும். கண்கள் வெளிறிக் காணப்படும்.

கணையப்புற்று நோயாளர்கள் நிறையில் குறைவார்கள். இவர்களுக்கு குளுக்கோஸ் சத்து மாறுபடாதிருக்கும். மிகவும் களைப்பு ஏற்படும். திடீரென நீரிழிவு நோய் ஏற்படும். சிறுநீர் மண்ணிறமாக அல்லது ஒறேஞ்ச் நிறமாக வெளியேறும். கணையம் அதிகமான இன்சுலினை சுரப்பதால் உடல் குளிரும், வயிற்றோட்டம் ஏற்படும். களைப்பு, தசைப்பிடிப்பு என்பன ஏற்படலாம். வயிற்றுப் பிரட்டு, சத்தி ஏற்படும். பசி குறையும். உடலில் கடி ஏற்படும். மனஅழுத்தம், இரத்தத்தடை என்பனவும் கூடவே நிகழும்.

பொதுவாக தீவிரமான முறையில் எடை குறைவு, வயிற்றுவலி, மஞ்சள்காமாலை போன்ற அடையாளங்கள் ஏற்படுமிடத்து வைத்தியரை நாடநேரிடும். வேறு நோய்களுக்கும் இவ்வாறு ஏற்படுமென்பதால் இது கணையப் புற்றுநோயா என்பதனை அறிய வேண்டும். கணையத்தில் உள்ள DNA எனப்படும் உயிர் இரட்டை சுழல் நிலையில் உள்ள கலங்கள் மாற ஆரம்பிக்கின்றன. கட்டுப்படுத்தமுடியாத அளவுக்கு பெருகும்போது சாதாரண கலங்கள் இறந்து விடுகின்றன. நோய்க் கலங்கள் ஒன்று திரண்டு கட்டியை (Tumor) உண்டாக்கும். பொதுவாக அனைவருக்கும் 'Pancreatic exocrine cancer' உண்டாகலாம். ஹோர்மோன்களை உற்பத்தி செய்யும் கலங்களின் புற்றுநோய் குறைவாகும்.

இப்படியான உடல் உபாதைகள் பற்றி கவலை ஏற்பட்டால் முதலில் குடும்ப வைத்தியரை அணுக வேண்டும். சாதாரண




வைத்தியர் உடலில் ஏற்படும் மாற்றங்களை கண்டவுடன் விசேட நிபுணரிடம் அனுப்புவார். அவர் ஒரு புற்றுநோய் நிபுணராக (Oncologist) இருப்பார். அவரே பார்வையிட்டுப் புற்றுநோய்தானா என்பதனை உறுதி செய்வார்.

புற்றுநோய் நிபுணரிடம் செல்லும்போது சில முக்கிய தகவல்களை தெரிந்து கொள்ள வேண்டும். பொதுவாக புற்றுநோயை மாற்றக் கூடிய கதிரூட்டல் (Radiation) சிகிச்சையை அவர் மேற்கொள்ளக் கூடும். செமிபாடு அடையும் குடல் பாதைகளில் சிகிச்சையினை நிபுணர் மேற்கொள்ளலாம். செமிபாட்டு நிலைகளை அறியக்கூடிய 'Gastroenterologist' கூட தொடர்புபடலாம். எனவே பல நிபுணர்கள் தொடர்புபடும் இந்நோய்க்கு மிக அவதானம் தேவை. ஆயத்தம் தேவை.

வைத்தியரிடம் செல்வதற்கு முதலில் சில விபரங்களை தெரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக உணவு பற்றிய விபரங்களை தயாரித்துக் கொள்ள வேண்டும். அடுத்து நோயாளிதான் அனுபவிக்கும் முக்கிய அனுபவங்களை எழுதிக்கொள்ள வேண்டும். அண்மையில் ஏற்பட்ட பிரதான வாழ்வியல் மாற்றங்கள், பாவிக்கும் உயிர்ச்சத்துகள் பற்றிய விபரங்களைத் தயாரிக்க வேண்டும். முடிந்தால் குடும்ப உறுப்பினர் அல்லது ஒரு நண்பனை ஒழுங்கு செய்து சேர்ந்து செல்வது உதவியாக இருக்கும். குறிப்பாக கேட்கவேண்டிய கேள்விகளை ஒரு ஒழுங்கு முறையில் தயாரித்தல் வேண்டும்.

எனக்குக் கணைய புற்றுநோய் உள்ளதா? எனது புற்றுநோய் எந்தநிலையில் உள்ளது? மேலதிகமான பரிசோதனைகள் செய்ய வேண்டுமா? எனது புற்றுநோயை சுகப் படுத்த முடியுமா? என்னென்ன சிகிச்சைகள்

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)



# கணைய.....

17 ஆம் பக்கத்தொடர்ச்சி

உள்ளன? இதனால் எனக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகள் என்ன? தற்போதைய எனது குணங்குறிகள் நீங்கிவிடுமா? விசேட நிபுணர்களை சந்திக்க நேருமா? இது பற்றிய அறிக்கைத் துண்டுகள் எடுக்க முடியுமா? இக்கேள்விகளில் ஒருவர் தனது முழுமை யான சந்தேகங்களையும் தீர்க்க முடிகிறது.

வைத்திய நிபுணரும் முக்கியமான சில கேள்விகளை கேட்க முயல்வார். அதற்கு தயாராகவே இருக்க வேண்டும். அவர் கேட்ககூடிய கேள்விகள் பின்வருமாறு அமையலாம்.

எப்போது நீர் வித்தியாசமான குணங்குறி களை கண்டு கொண்டீர்? தொடர்ந்து இக்குணங்குறிகள் உள்ளதா? அல்லது தற்காலிகமானதா? எவ்வளவுக்கு இவை மோசமாக உள்ளன. இப்படியான தன்மை களில் வினாக்கள் வினவப்பட்டு கணைய புற்றுநோய் இருக்கும்மென்று கண்டால் சில விசேட பரிசோதனைகள் செய்ய நேரிடும்.

உடலில் உள்ள முக்கிய உறுப்புக்களின் பிரதிமை படங்கள் (Imaging) எடுக்க நேரிடும். கணையம் உட்பட அருகில் உள்ள உறுப்புக்களை CT SCAN, MRI போன்ற கணினிப்பொறிமுறை படங்கள் பெற நேரிடலாம். கணையத்திற்கு உட்செல்லும் விசேட அலைகள் (endoscopic ultra sound) மூலம் முக்கியவிடயங்களை அறியலாம். தொண்டைப்பகுதி, குழாய், இரைப்பை எல்லாம் இதில் தெரிவு செய்யப்படும். சில மாதிரிகளை (Biopsy) எடுத்துக் கொண்டால் அதனை பரீட்சிக்க முடியும்.

கருவியை பாவித்து கணினி பகுதிக்கு மை (dye) யை செலுத்தி மிகவும் தெளிவாக இன்னும் அறியலாம். இக்கருவியும் தொண்டை வழியாக இரைப்பையையும், சிறுகுடலையும் அடைகிறது. சிறிய குழாய் ஊடாக மையை செலுத்தி சில நிழலுரு (Xrays) க்களை எடுக்கலாம்.




மேற்குறிக்கப்பட்ட பரிசோதனையில் சில மாதிரி (Biopsy) எடுத்தால் அதனை நுணுக்குக் காட்டி மூலம் பரிசோதனை செய்து புற்றுநோய் உள்ளதா என பார்க்கலாம். அதேபோன்று ஒரு விசேட ஊசியை கணையத்திற்குள் செலுத்தியும் மாதிரிகளை அறியலாம்.

புற்றுநோய் உள்ளதென்று கண்டால் அது என்னநிலையில் உள்ளதென அறிய வேண்டும். அதற்கு ஏற்கனவே சிகிச்சை செய்ய நேரிடும். இதனை அறிய ஒரு சிறிய உட்செலுத்தும் குழாய் மூலம் படப்பிடிப்பு கருவியை அனுப்பி புற்றுநோய் திசுக்களை அறியலாம். அக்கருவியில் பதிவு செய்யும் படங்கள் சத்திரசிகிச்சை அறைக்கு வந்து சேரும். இரத்தப் பரிசோதனையும் உடன்தேவை. குறிப்பிட்ட புற்றுநோய் கலங்கள் அறியப்படும்.

இப்புற்றுநோயின் நிலை தெரிய வேண்டும். நிலை 1. கணையத்தில் புற்றுநோய் உள்ள தென்பதனை அறிதல். நிலை 2. புற்று நோய்க்கலங்கள் கணையத்திற்கு அப்பால் பரவிவிட்டது. சில உறுப்புக்களுக்கும், நிணநீர் பகுதிகளுக்கும் சென்று விட்டது. நிலை 3. கணையத்திற்கு அப்பால் இரத்தக் குழாய்களுக்கும், ஏனைய நிணநீர் (Lymph nodes) கலங்களுக்கும் பரவிவிட்டது. நிலை 4. தூர இடங்களுக்கும் புற்று நோய்பரவி விட்டது. ஈரல், நுரையீரல், அடிவயிற்று பகுதிகளுக்கும் சென்று விட்டது.

கணையப்புற்று நோயின் நிலைக்கும், அது இருக்கும் இடத்திற்கும் ஏற்பவே சிகிச்சை செய்யப்படலாம். முதலில் மேலும் புற்று நோய் பெருகாமல் தடைசெய்ய நேரிடுகிறது. நோயாளியை அமைதிப்படுத்துவது முக்கியம். சிலவேளைகளில் கணையத்தின் தலைப்பகுதியில் உள்ள கட்டியில் சத்திர சிகிச்சை செய்ய நேரிடும். இதனை Whipple Procedure எனலாம். இதன்போது கணையத்தின் தலைப்பகுதியும், சிறுகுடலின் சிறுபகுதியும் பித்தப்பையின் சிறுபகுதியும் நீக்க நேரிடும். அத்துடன் இரைப்பையிலும், குடலிலும் சிறுபகுதியை நீக்க நேரிடும். கணையத்தின் இருப்பிடம் மிகவும் சிக்கலாக உள்ளதால் அருகில் உள்ள பகுதிகளிலும் சிலவற்றை அகற்ற நேரிடும். சிலவேளை இரத்தப் பெருக்கு, தொற்று நோய் ஏற்படலாம். பின்பு வயிற்றுக்கு மட்டல், சத்தி ஏற்படலாம். பல நாட்கள் வைத்தியசாலையில் தங்க நேரிடும்.

கணையத்தின் உட்பகுதியிலும் வால் பகுதியிலும் அறுவை சிகிச்சை செய்தால் வால்பகுதி அகற்ற நேரிடும். சிலருக்கு மண்ணீரல் (Spleen) எடுக்க நேரிடும். இதுவும் மிகவும் சிக்கலான சிகிச்சையே.

பின்னர் கதிரூட்டல் சிகிச்சை Radiation therapy செய்ய வேண்டும். இது சத்திரசிகிச்சைக்கு முன்பதாக அல்லது பின்பதாக செய்ய நேரிடும். அடிக்கடி மருந்து சிகிச்சை (Chemotherapy) யும் இடம்பெறும். மருந்து சிகிச்சையென்பது மருந்துகள் மூலம் புற்றுநோய் கலங்களை கொல்வதாகும். மருந்துகளை வாய்மூலமோ அல்லது ஊசி மூலமோ உட்செலுத்தலாம். குறிப்பிட்டுள்ள ஒரு மருந்தோ அல்லது இணைவான மருந்துகளோ பாவிக்கலாம்.

கணைய புற்றுநோய்க்கு மாற்றுசிகிச்சை என்பது கிடையாது. ஆனால் சத்திரசிகிச்சை முடிந்த பின்பு வேறு சில உதவிகளை பெறமுடியும். பொதுவா புற்றுநோய் உள்ள வர்கள் மன அழுத்தம், மன சோர்வுக்கு உட்படுவர். நித்திரை செய்வதும் கடினமாகும். கோபமும் கவலையும் ஏற்படும். இந்த நிலையில் சில சிகிச்சைகளை தெரிவு செய்யலாம்.

ஓவியம் வரைதல் (Art therapy), உடற் பயிற்சி, தியானம் (Meditation), சங்கீதம் கேட்டல், ஓய்வு, ஆன்மீக செயற்பாடுகள் என்பன. உண்மையில் புற்றுநோய் வரும் போது பயத்தைப் போக்க வேண்டும். இது பற்றிய தெளிவு வேண்டும். கனடாவில் பல புற்றுநோய் தொடர்பு நிலையங்களின் சேவையைப் பெறலாம். நண்பர்களை இணைத்து உரையாடலாம். ஆலோசகர், மருத்துவ ஆலோசகர், சமய போதகர்களின் உதவியை எடுக்கலாம். இவ்வகையான புற்றுநோயிலிருந்து தப்பியவர்களுடன் தொடர்புகொண்டு ஆலோசனைபெறலாம். எல்லாவற்றிற்கும் மேலாக புகைத்தலை நிறுத்துதல் ஆரோக்கியமான உடல் நிறையை கவனித்தல், ஆரோக்கியமான உணவு உண்ணுதல் முக்கியமாகும்.

# எந்த மொழியிலும் இல்லாத தசமக் கணக்கீடு!

**படித்ததில் பிடித்தது**

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.

அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca

யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

**- R. சுதர்சன் -**

## Decimal Calculation..!

தமிழகக் கோயிற் சிற்பங்களில் உள்ள நுணுக்கமான வேலைப்பாடுகளாகட்டும், தூண்களில் ஒரு நூல் இழை கூட கோணல் இல்லாமல் கட்டப்பட்ட 1000 கால் மண்டபங்களாகட்டும், இன்னும் ஆதித் தமிழர்கள் செய்த அற்புதமான விசயங் களை பற்றி வியப்புடன் பேசும் நாம், இதைப்பற்றிய தேடலை நாம் மேற்கொள்ள வேண்டாமா..?!

அப்படி நான் தேடும்போது எனக்கு கிடைத்த ஓர் அரிய விடயத்தை உங்களுடன் பகிர்கிறேன்.

1 - ஒன்று
3/4 - முக்கால்
1/2 - அரை கால்
1/4 - கால்
1/5 - நாலுமா
3/16 - மூன்று வீசம்
3/20 - மூன்றுமா
1/8 - அரைக்கால்
1/10 - இருமா
1/16 - மாகாணி(வீசம்)
1/20 - ஒருமா
3/64 - முக்கால் வீசம்
3/80 - முக்காணி
1/32 - அரைவீசம்
1/40 - அரைமா
1/64 - கால் வீசம்
1/80 - காணி
3/320 - அரைக்காணி முந்திரி
1/160 - அரைக்காணி
1/320 - முந்திரி
1/102400 - கீழ்முந்திரி
1/2150400 - இம்மி
1/23654400 - மும்மி
1/165580800 - அணு --> 6-0393476E-9 --> nano = 0.000000001
1/1490227200 - குணம்
1/7451136000 - பந்தம்
1/44706816000 - பாகம்
1/312947712000 - விந்தம்
1/5320111104000 - நாகவிந்தம்
1/74481555456000 - சிந்தை
1/489631109120000 - கதிர்முனை
1/9585244364800000 - குரல்வளைப்படி
1/575114661888000000 - வெள்ளம்
1/57511466188800000000 - நுண்மணல்
1/2323824530227200000000 - தேர்த்துகள்.

இவ்வளவு நுண்ணியமான கணிதம் அந்தக் காலத்தில் பயன்பாட்டில் இருந்துள்ளது.

இந்த எண்களை வைத்து எத்தனை துல்லியமான வேலைகள் நடந்திருக்கும் என்று எண்ணிப்பாருங்கள், கணினியையும், கணிதப்பொறியையும் (கல்குலேட்டரையும்) தொழில் நுட்ப வளர்ச்சி என்று இன்றைய தலை முறை கூறிக்கொண்டு இருக்கும் போது, அதை விட ஆயிரம் மடங்கு மேலாக அந்த காலத்திலேயே நாம் சாதித்து விட்டோம்..!

சித்தர்கள் உலகின் முதல் விஞ்ஞானிகள்.




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# நல்லூர் ஆண்டு மகோற்சவம்



நா. க. சிவராமலிங்கம்

புள்ளிமயில் ஏறும் வள்ளி மணாளன் உள்ளம் கவரும் கொள்ளையழகுக் குமரான்.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

உலகம் உய்ய உருப்பெற்றவன் உமை பாலன் என்பது கச்சியப்பர் கருத்து. ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய என்றே கூறியுள்ளார். உயிர்கள் எல்லாவற்றையும் காக்கும் பொருட்டு எழுந்தருளிய மூர்த்தமே முருக மூர்த்தம். அநுக்கிரகத்துக்கென்றே வந்த மூர்த்தம் அழகன் முருகனுடையது. துணைதேடும் அடியவரை அரவணைத்து வினையகற்றி பெருந்துணையாகும் பெம்மான் அவன். தொழுது வழிபடும் அடியவர் காவற்கார பெருமாள் என்று திருப்புகழ் செப்புகின்றது. இதற்கு மேலாக வையாரையும் வாழவைப்பவன் வடிவேலன், மால்மருகன், மன்றாடி மைந்தன், வானவர்க்கு மேலான தேவன், மெய்ஞான தெய்வம் என்ற சிறப்புக்களும் அவனுடையது.

முருகு என்ற சொல்லிற்கு அழகு, இளமை, இனிமை, மணம், மகிழ்ச்சி, கடவுள்தன்மை என்று பல பொருள் உள்ளது. முருகன்: அழகன், குழகன், குமரன் (இளைஞன்), கடம்பன், கார்த்திகேயன். அழியா அழகுரு அவனுடைய இளமை, நலம் மாறாத ஏந்தல், பார்க்கப் பார்க்க பரவசம் ஊட்டும் பாலன், குறிஞ்சி நிலக்கிழவன், அழகுக் கடவுளாக, அருட்கடவுளாக, குழந்தைக் கடவுளாக, குமரக்கடவுளாக, ஆண்டியாக, ஞான பண்டிதனாக, சாமி நாதனாக, சற்குருவாக விளங்குகின்றான்.

அருளார் முகமும் அடியார்கபயம்
தரு பொற்கரமும் தணலார் விழியும்
கருணை பொழியக் கனிவாய் நகையும்
திருமார் பழகும் திகழும் முருகா!
அவனது எழிலினை
அழகினை வசீகரத்தை அனுபவிக்க
நாலாயிரம் கண்கள் வேண்டும் என்று
கழிவிரக்கம் கொண்டது சாலப்பொருந்தும்.

முருகனது அழகுத்திருக்கோலம், அருள் வடிவம் எம்மை ஆட்கொள்ள வல்லது. வடிவேலுடன் வள்ளி தெய்வானை சகிதம் புள்ளி மயில் மீதமர்ந்து சேவற்கொடி அசைந்தாடக் காட்சிதரும் கோலம் மாட்சியுடையது. அதனை நம் மனதில் நிறுத்துகின்றார் இராமலிங்க அடிகளார்.

சீர்கொண்ட தெய்வ வதனங்கள்
ஆறும் திகழ் கடப்பந்
தார் கொண்ட பன்னிரு தோள்களும்
தாமரைத் தாள்களும் ஓர்
கூர் கொண்ட வேலும் மயிலும் நற்
கோழிக் கொடியும் அருள்
கார்கொண்ட வண்மைத் தணிகர
சலமும் என் கண்ணுற்றதே.

அழகன் முருகனது அடியிணைகளை அடையும் மார்க்கம் நான்கினை அருணைப் பெருமான் பின்வருமாறு அருளியுள்ளார். மனதைத் தடுத்தல் அதாவது மனம் புலன் வழிச் செல்லாமல் தடுத்தல், வெகுளியை விடுதல் அதாவது கோபத்தை அறவே விட்டுவிடுதல், தானம் இடுதல் அதாவது ஏழைகளுக்கு தானம் செய்தல், இருந்தபடி இருத்தல் அதாவது இருந்த வண்ணமே அசைவற்று இருத்தல் ஆகியவற்றை மேற்கொண்டால் முருகனது திருவடிப்பேறு தப்பாமல் கிடைக்கும். குரங்காய் அலையும் மனத்தால் பல துன்பங்கள் ஏற்படுகின்றன.



அது ஓய்வின்றி சலித்துக் கொண்டேயிருக்கும். இறைவனின் திருவடி தியானத்தினால் அதனை ஒருமுகப்படுத்த வேண்டும். மனம் அலைந்தால் ஒரு பயனும் இல்லை. இது தாயுமானவர் கூற்று

நல்லூர் முருகன் ஒரு பணக்காரக் கடவுள் அவனது திருவுருவும், ஆபரணங்களும், வாகனங்களும் திருத்தேரும் மிக மிகப் பெறுமதியுடையவை. திருவிழாக் காலத்தில் நல்லூர் இந்திரலோகம் போலவே காட்சியளிக்கும். வேலவனின் கோல எழில் சாலச்சிறந்ததாய் ஞாலம் வியக்கும் பக்தர்களின் பக்தி பரவசமும் தூய்மையும் அன்பு எத்திக்கும் துலங்கிடக்காணலாம். நல்லூர் ஒரு தெய்வீக பூமி. அது உண்மையில் நல்ல ஊரேயாம். அந்த மண்ணில் கால் பட்டவுடன் ஒரு தெய்வீக உணர்வு ஏற்படும். அது அடியார்களின் மெய்ப்பாடுகளுக்குக் காரணமாகும்.

ஆடுவர் பாடுவர் அந்தியும் சந்தியும்
கூடுவர் குணம்பல பேசிக் கும்பிடுவர்
தேடுவர் செய்ய தொன்றறிகிலர் திடமுடன்
நாடுவர் வாடுவர் நம்பர் தம் அடியரே

நல்ல மருந்தொன்றை நமக்குச் சிபார்சு செய்கின்றார் யோகசுவாமிகள். அது உள நோய்க்கும், உடல் நோய்க்கும் பரிகாரமாக அமைவது. வாருங்கள் சென்று பெறுவோம்.
எல்லையில்லாப் பிணி தீர்க்கும் மருந்து
இம்மை மறுமைக்கும் ஏற்ற மருந்து
இல்லை என்னாது கொடுக்கும் மருந்து
ஏழையடியார்க்கு இரங்கும் மருந்து
நல்ல மருந்தொரு குருமருந்து
நல்லூர் இருக்கின்றதை நாடிடுவீரே

தேர்த் திருவிழாவன்று சனத்திரள் வீதி எல்லாம் நிறைந்திருக்கும். ஊர்மக்கள் நல்லூரை நாடிவந்து கூடி நின்று ஆடிப்பாடி தேர்வடம் பிடிக்க முந்துவர். அவர்களது வேண்டுதல் இதுவாகவே இருக்கும்.

தேரேறி வருகின்றான் திருமுருகன்
ஊரெல்லாம் கூடி நாம் வடம் இழுப்போம்
சீரெல்லாம் நிறைந்திடுமத் தேவதேவனை
பாரெல்லாம் வியர்ந்து புகழ்ந்து பாடிடுமே
வேரில்லா மரம் போல வீழ்ந்துவிட்டோம்
யாரெம்மைக் காத்திடுவார் கந்த வேலே
நிகரில்லாவுந்தனது வல்லமையால்
சீருடனே வாழ்வதற்கு வழிசமைப்பாய்.

---

# சேமிப்பு....

14 ஆம் பக்கத்தொடர்ச்சி

அறியாமை என்ற விலங்கு தான் அவர்களை பிணைத்து வைத்திருக்கிறது. பழக்கத்தின் காரணமாகத்தான் கடன் சுமை அதிகரிக்கிறது. சிறிய அளவில் ஆரம்பிக்கும் இந்தக் கடன் வாங்கும் பழக்கம் மெதுவாக வளர்ந்து பெரிதாக மாறிவிடுகிறது. கடைசியாக அது அவர்களுடைய ஆன்மாவையும் தன்வசப்படுத்திக் கொண்டு விடுகிறது.

ஆயிரக்கணக்கான இளம் தம்பதிகள் தங்களது குடும்ப வாழ்க்கையை தேவையற்ற கடன் சுமையோடு துவங்குகிறார்கள். அதிலிருந்து மீண்டுவருவதற்கு முடியாமல் திணறுகிறார்கள். கடனுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் மனிதனுக்கு புதிய எண்ணங்கள் தோன்றாது. அதற்கு அவனுக்கு நேரமும் இருக்காது. தனது எல்லை இவ்வளவுதான் என்று முடிவு செய்து கஸ்டத்தில் மூழ்கிக் கிடக்கவே நினைப்பான்.



உங்களுக்கு இருக்கும் கடமைகள் என்ன உங்களைச் சார்ந்து இருப்போருக்கு நீங்கள் செய்யவேண்டியது என்னென்ன என்பதைப் பற்றி யோசியுங்கள். அடுத்தவனிடம் கடன்காரனாகி அல்லல் பட நினைக்காதீர்கள். இது எனது யோசனை மட்டுமல்ல கடன்பட்டுப் போனதால் ஆரம்ப காலத்து வாய்ப்புக்களை இழந்தவர்களது ஆதங்கமும் இது தான். தனக்குத் தேவையில்லாத பொருட்களை வாங்கி கடன்படுகின்ற குணத்தை ஒதுக்கினாலே வெற்றியாளராக மாறமுடியும்.

வாரன் புவேட் மிக அழகாக சொன்னார். உனக்குத் தேவையில்லாத அத்தியாவசியம் இல்லாத பொருட்களை வாங்கினால் ஒருகட்டத்தில் அத்தியாவசியமான பொருட்களை விற்கவேண்டி வரும் என்பதாகும். வறுமை பற்றிய அச்சம் மனிதனின் மனோ திடத்தைத் சிதறடித்து விடுகிறது. பயத்திற்குப் பலியாகிப் போகும் அவனால் தனது இழந்த செல்வத்தை மீட்க முடியாமல் போய்விடுகிறது. இதையெல்லாம் விடவும் சோகமான விடயம் என்ன தெரியுமா? கடன் என்ற அடிமையிடம் தங்கள் கனவுகளைப் பறிகொடுத்து விடுவதுதான்.

கடனிலிருந்து விடுபடும் மனிதன் வறுமையை அகற்றி ஒதுக்கிவிட்டு பொருளாதார வெற்றியை அடையமுடியும். அவன் கடனிலிருந்து விடுபடாமல் இருந்தால் எந்த வெற்றியும் தற்காலிகமானதாகவே இருக்கும். நிலைத்து நிற்காது. வறுமையைக் கண்டு அஞ்சுவது ஒரு எதிர்மறையான அழிவு தரும் மனநிலையாகும்.

இதிலிருந்து மீழ்வது எப்படி? பூட்டுக்கள் செய்யப்படும் பொழுதே சாவிகளும் தயாராகின்றன. அவை எப்படி என்பதை அடுத்த இதழில் பார்கலாம்.

குறிப்பு: தினசரி இதை நீங்கள் பலமுறை இல்லாவிட்டாலும் ஒரு தடவையாவது வாசிப்பதன் மூலம் கடன் பட துணிய மாட்டீர்கள்.



# இன்னல் நீக்கும் இயற்கை - 7

- அகணி -
authorakani@gmail.com



அன்பான விளம்பரம் வாசகர்களே!

கடந்த சில இதழ்களில் நீர் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததெனவும், நீரை எவ்வாறு உட்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் பல தகவல்களைப் பற்றி உரை யாடிக் கொண்டேன். இன்றும் விட்ட இடத் தில் இருந்து தொடர்ந்து இவ்விடயம் பற்றி உரையாடுவோம். நாங்கள் வாழும் கனடா வில் குழாய்களில் இருந்து நேரடியாகக் குடிக்கக் கூடியதாக இருப்பது மகிழ்ச்சிக் குரிய விடயம். உலகில் உள்ள பல நாடுக-ளில் இந்த நிலைமை இருப்பதில்லை. வீட்டில் உள்ள குழாய்களில் வருகின்ற நீரினை மேலும் சுத்திகரித்த பின்பு அல்லது குழாய் நீரை கொதிக்க வைத்து ஆற விட்டுக் குடிக்க வேண்டிய நிலைமை இருக் கும். கனடாவில் குழாய் நீரைக் குடிக்கலாம் அல்லது கொதிக்க வைத்து ஆறிய நீரைக் குடிக்கலாம். நாளாந்தம் ரொறன்ரோவில் 1 பில்லியன் லீற்றர்ஸ் நீர் சுத்திகரிக்கப்படு கின்றது. இதற்காக ரொறன்ரோவில் 4 நீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் உள்ளன. ரொறன்ரோவில் மிகவும் கவனமாக நீர் சுத்திகரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின் றது. நாங்கள் வேறு நாடுகளுக்குப் பிர யாணம் செய்கின்றபொழுது குடிக்கும் நீரில் அதிக கவனம் எடுத்துக் கொள்ள வேண் டும். கனடாவிலும் நீரை மேலும் சுத்திகரிப் பதற்கும், நீரின் தன்மையை மாற்று வதற்கும் பல்வேறு விதமான நீர் சுத்திகரி ப்புத் தொகுதிகள் சந்தையில் உள்ளன. இவை அவசியமா என்ற விதத்தில் சரியான ஆய்வுகளையும், தகவல்களையும் பெற்ற பின்பே நீங்கள் முடிவு எடுக்க வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

அன்பான வாசகர்களே! பஞ்சபூதங்களில் ஒன்றாகிய நீர் போதிய அளவில் உடலுக்கு வேண்டும் என்று முன்பு குறிப்பிட்டிருந் தேன். நாங்கள் போதிய அளவு நீர் குடிக் காவிட்டால் தலைவலி போன்ற அறிகுறிகள் ஏற்படும். தலைவலி வந்ததும் முதலில் மென்சூடான நீரைக் குடித்ததும் தலைவலி குறைந்து விடும். நாங்கள் தேநீர் அல்லது கோப்பியைக் குடித்ததும் தலைவலி குறை வதைக் கண்டு தலைவலி வரும் பொழுது தேநீரையோ கோப்பியையோ குடித்தால் சர-ியாகும் என்று அதற்குப் பழக்கப்படுத்திக் கொள்வோம். உண்மையில் தேநீரிலும், கோப்பியிலும் உள்ள நீரினால் தலைவலி குறைந்திருக்கும் என்று சித்த வைத்தியர் கள் கருத்துக் கூறுகின்றார்கள். அடுத்த தாக முன்பு நான் கூறியவாறு நீரைக் குடிப்பதற்கும், நீரை எடுத்து வைப்பதற்கும் சரியான பாத்திரங்களைப் பயன்படுத்து வதில் அதிக கவனம் எடுத்துக் கொள்ளு மாறு சித்த வைத்தியர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். மண் பாத்திரம், செம்புப் பாத்திரம், எவர்சில்வர், கண்ணாடி, செரமிக் போன்ற பாத்திரங்களைப் பயன் படுத்தலாம். ஆனால் பிளாஸ்ரிக், அலு மினியம் ஆகியவற்றால் உருவான பாத்தி ரங்களைப் பயன்படுத்தக் கூடாது. இந்தக் கட்டுரையில் நீர் பற்றிக் குறிப்பிட்ட கருத் துக்களைக் கவனத்தில் எடுத்துப் பயனடை-வோம். இயற்கையோடு ஒன்றி வாழ் வதாலும், இயற்கையான வழிமுறைகளைக் கைக்கொள்வதாலும் உடல்நலக் குறைவால் ஏற்படும் இன்னல்களைக் குறைத்தும், நீக்கியும் கொள்ளலாம்.

• வாடகை கிடைக்காமல் போகலாம் அல்லது பிந்திப் பிந்திக் கிடைக்கலாம் அல்லது ஒரு பகுதி மாத்திரம் கிடைக்கலாம்.

• Utilities அவர்கள் கட்டாமல் விடலாம். முக்கியமாக Water Bill (இது வாடகையாளரின் பெயருக்கு மாற்றமுடியாது) நிலுவையில் போகலாம்.

• ஒத்துக்கொண்டதற்கும் மேலதிகமாக ஆட்கள் வசிக்கலாம்.

• சத்தம் அல்லது வளர்ப்பு மிருகங்களால் தொல்லை உண்டாகலாம்.

• வாடகைக்கு இருப்பவர்கள் வீட்டினுள்ளே புகைபிடிப்பது, வீட்டை சேதப்படுத்துவது, அல்லது சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவது.

• வீட்டை சுத்தமாக வைத்திருக்க தவறுவதன் மூலம் எலி, மூட்டைப்பூச்சி, கரப்பான் என்பன வீட்டினுள் நுழைய வசதியாக்குவது.

• அங்கே இருக்கும் வேறு வாடகையார்களுக்கு அல்லது வீட்டுச் சொந்தக்காரனுக்கு இடையூறு விளைவிப்பது.

இதில் எந்த வடிவத்தில் பிரச்சனை உருவெடுக்கும் என்பது முன் கூட்டியே சொல்ல முடியாது. இவற்றை உரிய முறையில், உரிய நேரத்தில் தீர்க்கத் தவறும் பட்சத்தில் பல மாத வாடகையை இழக்கநேரிடலாம். நிறைய மன உளைச்சலுக்கு ஆளாகலாம். சில சமயம் உங்கள் மேலேயே அவர்களால் வழக்குகள் திணிக்கப்படலாம். அல்லது நகரசபை (City) உங்களுக்கு தண்டம் விதிக்கலாம்.

கடந்த வருடங்களில் பலரும் தங்களுக்கேற்பட்ட அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்திருக்கிறார்கள். அவற்றை தெரிந்து வைத்திருந்தால் நீங்கள் பிரச்சனைகளை தவிர்த்துக் கொள்ளலாம் என்பதே எங்கள் நோக்கம்.

## வருமுன் காப்பது

வாடகையாளர்களைத் தெரிவு செய்யும் போது கவனமாக இருந்தால் வரக்கூடிய பல பிரச்சனைகளை தவிர்த்துக் கொள்ளலாம்.

• அவர்களைப்பற்றிய போதிய தகவல்களைப் பெறுங்கள். ஆதற்கான Rental Application Form அவர்கள் கைப்பட நிரப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

• அவர்களின் வேலைக்கடிதம் பெறுங்கள். அங்குதான் வேலை செய்கிறார்கள் என்பதை விசாரித்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

• முன்பு குடியிருந்த வீட்டுச் சொந்தக்காரரிடம் அவர்களைப் பற்றி விசாரியுங்கள் முடிந்தால் அந்த வீட்டிலேயே அவர்களைச் சந்திக்க முயலுங்கள்.

• ஏன்ன காரணத்துக்காக வீடு மாறுகிறார்கள் என்பதை அறிந்து நம்பும்படி உள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

• அவரின் குடும்ப அங்கத்தவர்களை சரியாக தெரிந்து கொள்ளுங்கள்

• அவர்களின் நடை, உடை, பாவனை, பாவிக்கும் வாகன வகையிலிருந்து நம்பகத்தன்மையை அனுமானித்தல்

• சொந்தமாக வாங்காமல் தொடர்ந்து வாடகைக்கு வீடு தேடுவதன் காரணத்தை அறிந்து கொள்ளுங்கள்

• அவர்கள் பெயரை Google செய்து ஏதும் பிழையான தகவல்கள் கிடைக்கிறதா எனப்பாருங்கள்

• அண்மையில் பெற்ற அவர்களது credit report ஐ கட்டாயம் பெற்று பரிசீலனை செய்யுங்கள்.

தொடரும்......

கரு கந்தையா
Director –
Watson Property Management

## வாகன போக்குவரத்து சேவை

விமான நிலையம், நயாகரா நீர்வீழ்ச்சி, மற்றும் குறுகிய, அனைத்து தூரங்களுக்கும் 24 மணி நேர நட்பான சேவை அழையுங்கள்

**416.476.4898**

## புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிகத் தரமான புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு.

- பெரியது $5 *வரி கட்டப்பட்டது*

தொடர்புகளுக்கு: ***647.629.9095***

மேலும் பக்கங்கள் 28, 29, 30, 31, 32

Tamil VANAKKAM

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்

## METAL THINGS WANTED

பழைய இரும்பு பொருட்கள், Door, Computer, fridge, stove, தொலைக்காட்சி பெட்டி, மற்றும் வேறு பல பொருட்கள் நீங்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

***Junk Removal***

தொடர்புகளுக்கு: பிறேம் - ***647.835.5244***

## CARS, VANS & TRUCKS WANTED

Any make, Any condition.

Pay top dollars.

Contact: 416.835.3475

## தையல் வேலைக்கு ஆட்கள் தேவை

GTA Mall இல் உள்ள தையல் நிலையத்திற்கு நன்கு அனுபவமுள்ள பெண்கள் உடனடியாகத் தேவை.

***647.965.0193 / 416.418.6934***

## BUSINESS FOR SALE

Bakery or Restaurant for sale in scarborough

* over 10 years in the Business

* Owner is Retiring *Asking $119,000

Contact: ***416.315.9397***

## A+ DRIVING SCHOOL

For all your driving educational needs

***Thava Nagaratnam***

*(Govt. Licensed In - Car Instructor)*

***416.473.6155***

***www.aplusdriving.ca***



## பேட் சில்வர் காடின் முதியோர் இல்லம்

**24 மணி நேர முதியோர் பராமரிப்பு சேவை**



பயிற்றப்பட்ட பராமரிப்பாளர்களால் 24 மணி நேரமும் ஆதரவாகவும் சௌகரியமாகவும், மகிழ்ச்சியாகவும் கழித்திட நாடவேண்டிய ஒரே இடம்

416.613.1840 / 647.272.6993

birdsilvergardens@gmail.com

16 Birdsilvergardens, Scarborough ( Port Union & Island Road)

## OFFICE CLEANING CONTRACTS

- Available through GTA Area
- Also looking for experienced
  - Night cleaners
  - Day Porters

We are looking for Inspectors with cleaning experience. Fluency with English and Tamil. Starting $16 per hour. After probation period will provide company vehicle and phone

We are looking for cleaners for a restaurant in Down Town, Toronto effective immediately.

7 Days Nightly cleaning.

Contact
Phone: 416-283-2561
Email: jobs@focuscleaning.ca

FBM Focus Building Maintenance

## விரும்பியது கற்கலாம் எந்த வயதிலும்

கற்ற ரசாயனம் கைவிட இளைப்பாறி
பெற்றேன் இன்பம் கவிதை கற்றே
உற்றவென் பாக்கியம் உலகில் இதுவே
கற்கிறேன் விரும்பிக் காலன் வருமுனே.

வழமையாய்க் கவிதை எழுதி வரவே
வளர்ந்திடும் கவிதையின் மகிமை உயர்ந்தே
நிலைத்திடும் செம்மொழி செழித்து நின்றே
உலகில் எம்மொழி ஓங்கிடும் நன்றே.

வரண்ட மண்ணில் மழையும் பெய்திடத்
திரண்டு நிமிரும் தேய்ந்த பயிர்போல்
மரபுக் கவிதை மழையும் பொழிந்தே
சிறந்து விளங்குதே செந்தமிழ்ப் பூங்கா.

பொன்னும் தேடிப் புகழும் நாடி
மண்ணில் வாழ்கிறோம் மாய இருளில்
புண்ணியம் ஒன்றே உடன்வரும் என்றே
உண்மை உணர்வது மிகவும் நன்றே.

ஓடும் வாழ்வும் ஒழியும் ஒருநாள்
வீடும் வாசலும் விட்டுச் செல்வோம்
கூட வருவதெம் புண்ணியம் ஒன்றே
தேட வேண்டும் தெரிந்தெம் வாழ்விலே.

உள்ளமே இறைவன் உறையும் கோயில்
நல்லமே அவனை நாளும் தொழுவது
கள்ளம் கபடம் வேண்டாம் கருணை
வெள்ளம் வேண்டும் எங்கள் வாழ்விலே.



Dr. தில்லைநாதன் சிவகுமாரன்

# மாமனிதர் அப்துல் கலாம்



2ஆம் சிரார்த்த
தினத்தை முன்னிட்டு

எழிமையாம் வாழ்வு இனிமையாம் பேச்சு
களிமுகம் கொண்ட கலாம்.

ஏவுகணை நாயகன் எங்கள் கலாமோ
நாவு அசைத்தால் நன்மொழிகள் - தாவுதலாம்
செந்தமிழும் ஆங்கிலமும் சேர்ந்துகொளப் பாரெங்கும்
உந்தன் அறிவின் உயர்வு.

பட்டம் பதவிகள் பற்பல பெற்றவரே
திட்டமிட்டு மாணவரைச் சீர்செய்தாய் -இட்டமிக
கல்வி அறிவுக் களைகளைந்த காவலனே
சொல்லாமல் சென்றனையே தேர்.

வேதனைகள் தந்துசென்ற வேட்கின்ற பேரறிஞு
சாதனைகள் பற்பலவே சாதித்தாய் - போதனைகள்
மூலமே மாணவர்கள் முன்னேற்றம் கண்டஉனை
காலன் கவர்ந்தானே காண்.

நல்லா சிரியராய் நாடுபோற்ற வாழ்ந்தவனே
பல்தொழில் வல்லவனே பற்றற் - செல்வந்தன்
கொள்கைப் பெருமைகொள் கோமகனார் போதனையை
அள்ளிப் பருகிடுவோம் ஆம்.

செந்தமிழ் நாட்டின் சிகர மெங்கள்
செழுமை காத்த செம்மல்
உந்தன் பணியை உலகம் போற்ற
உயர்ந்து நின்ற உத்தமன்
பந்தமுடன் பாசமுறப் பற்றியதால் மாணவரைப்
பாரதத்தின் புதல்வ னானாய்
இந்திய நாட்டின் இளவலாய் வந்த
இராமநாத புரத்து ஏந்தலே.

செந்தமிழும் ஆங்கிலமும் சேர்ந்து ஒளிர
சிறப்பான மாணவராய்த் தேர்ச்சி பெற்றாய்
உந்தன் வழிகாட்டல் ஊக்கம் தரவே
ஊரெங்கும் இளைஞர் உன்பின் வந்தார்
இந்தியா முன்னேற இளைஞர் மன்றம்
ஏங்குமே ஏற்பட ஏற்ற முற்றாய்
வந்ததே நெஞ்சில் வலிதான் வலிமையாய்
வாழ்விழந்து சென்றுவிட்டாய் வம்சம மின்றி.

பட்டம் பதவியைப் பார்க்க வில்லை
பதவிகள் தேடியே வந்தனவே
திட்டமிட்டே பணிசெய்தாய் தீர்வும் கண்டாய்
தித்திக்கப் பேசிச் சிரிக்க வைத்தாய்
இட்டமாய் இணைந்துகொண்டே இளைஞ ரோடு
இந்து முஸ்லிம் கிறிஸ்தவம் இணையச் செய்தே
இட்டமாய் வாழ்ந்தே இனிமை கண்ட
இந்தியன் இணைந்தான் இறை யுடனே.

- ஆக்கம் முருகேசு மயில்வாகனன் -

# மனிதருக்குக் குருவிகள் சொல்லும் தமது வாழ்க்கை இரகசியம்



நித்தம் நித்தம் வான் பரப்பில்
நெஞ்சில் மகிழ்ச்சி பொங்க
நிரை நிரையாய் கூடிப் பறக்கும்
குருவிக் கூட்டமே நில்லுங்கள்

மரக் கிளைகளில் கூடுகட்டி வாழும் நீங்கள்
மாடமாளிகைகளில் வாழும் எம்மக்களுக்கு
மகிழ்ச்சியுடன் வாழும் உங்கள் வாழ்க்கை
ரகசியங்கள் சில கூறுங்களேன்

கூடிவாழும் எங்கள் குலத்தவர்களின்
உள்ளத்தில் என்றும் போட்டியோ
பொறாண்மையோ வஞ்சகம் சூதோ
ஏறத்தாழ்வோ ஏதும் இல்லை

இனவாதம் மதவாதம் பிடிவாதம்
இதுபோன்ற வாதங்கள் எம்மிடமில்லை
ஒரு மணம் என்பதே எமது லட்சியம்
மறுமணம் என்பது எமக்கு இல்லை

விதிப் பயன் என்று நாம் வீணே
வீதியில் பதிந்த கல்போல் இருக்கமாட்டோம்
ஊக்கமாய் உழைப்போம் பிறர்
உழைப்பைச் சுறண்ட மாட்டோம்

பிறந்திட்ட உயிர்கள் யாவும் ஒருநாள்
இறக்கும் என்பதை நாம் அறிவோம்
சொந்த பந்தம் எல்லாம் மறையும்
சொத்துப் பத்துக்கள் யாவும் அழியும்

ஆறு அறிவுடைய மக்கள் நீவீர்
பகுத்தறிவு கொண்டு பலதும் அறிவீர்
அறவழி சென்று நீவீர் செய்யும்
அரிய நற் புகழே என்றும் வாழும்

புவிதனில் வாழும் மானிட இனமே
நலமுடன் எம்மைப்போல் நட்புடன்
என்றும் கூடிவாழ்ந்தால் விலகிடும்
துன்பம் விளைந்திடும் கோடி நன்மை



கவிநாதம் பரந்தாமன்

# மகிழ்ச்சியாக இருப்பதற்கானதொரு அழைப்பிதழ்

## An Invitation to Happiness

மகிழ்ச்சியானது ஏற்கனவே தம்முள்ளே உள்ளதைக் கண்டுகொள்ளாத மக்கள் சில சந்தர்ப்பங்களில் மகிழ்ச்சியாக இருப்பதற்கான வழியைத் தேடி அலைவதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றார்கள் என மஹாராஜி என அழைக்கப்படும் பிரேம் ராவத் கூறுகின்றார். வாழ்வு தரும் சாத்தியத்தை நோக்கி கவனம் செலுத்துமாறு உலகெங்கும் பிரயாணம் செய்து மஹாராஜி அவர்கள் மக்களைத் தூண்டி வருகின்றார்.

தனது வாழ்வில் தனக்குத் தேவையான விடயங்களைப் பற்றி பகற் கனவு கண்டுவந்த மனிதன் ஒருவன் பற்றிய கதை ஒன்று உள்ளதென மஹாராஜி கூறுகின்றார். அந்த அழகிய பெண்மணியை திருமணம் செய்யவேண்டும் என அவன் கனவுகண்டான். அரசாங்கத்தில் நல்லதொரு பதவி கிடைத் தால் எவ்வளவு நல்லது எனக் கனவு கண்டான். நல்ல வருமானத்தைத் தரும் தொழில் ஒன்று இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும், கொஞ்சம் நில புலம் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என அவன் கற்பனை செய்துவந்தான்.

அவன் கனவு காண்பதில் கெட்டிக்காரனாக இருந்தானேயல்லாமல் அவனுக்கு உண்மை நிலை பற்றிய எந்த உணர்வும் இருக்கவில்லை. நாள் முழுவதும் அவனைச் சுற்றி நடைபெற்று வந்தனவற்றை அவன் புறக்கணித்து வந்தான். மக்கள் அவனுக்கு கடிதங்களை அனுப்புவதுண்டு. ஆனால் அவன் அவற்றைப் புறக்கணித்து வந்தான்.

அவன் வயோதிபன் ஆனதன் பின்னர் ஒருநாள் அவன் தனக்கு இந்தக் கனவுகள் எல்லாம் இருந்ததையும் அவற்றில் எதுவுமே நிறைவேறவில்லை என்பதையும் தற்போது அதற்குக் காலம் பிந்திவிட்டது என்பது பற்றியும் அங்கலாய்த்தான். அவன் தனது ஓய்வு அறையில் இருந்து கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தான். அப்போது அங்கே ஒரு தொகை கடிதங்கள் குவித்து வைக்கப் பட்டிருப்பதைக் கண்டு, அவற்றைத் திறந்து வாசிக்க ஆரம்பித்தான்.

ஆச்சரியமான விடயம் என்னவெனில் அனேக காலத்திற்கு முன்னர் அவனது நண்பி ஒருத்தி எழுதிய கடிதம் அங்கே இருந்தது. அவள் அவனைத் திருமணம் செய்ய விரும்பு வதாக எழுதியிருந்தாள். ஆனால் அவன் அந்தக் கடிதத்தை ஒரு போதும் வாசித்த தில்லை. ஆகவே அவன் அவளை அழைத்துத் தொடர்புகொண்டான். அப்போது அவள் நான் உனக்காக் காத்துக்கொண்டே இருந்தேன். ஆனால் உன்னிடம் இருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. ஆகவே நான் சென்று வேறு ஒருவரை மணந்து கொண்டேன் எனக் கூறினாள்.

அவன் மேலும் ஒரு கடிதத்தைத் திறந்து பார்த்தான். அக்கடிதம் அரசனிடம் இருந்து வந்திருந்தது. அதில் பெரிய தொழில் ஒன்றை வழங்குவதற்காகத் தன்னை வந்து சந்திக்கும்படி கேட்கப்பட்டிருந்தது. அவன் அரண்மனைக்குப் போன் செய்த போது அரசன் உனக்காகப் பல காலம் காத்திருந்து விட்டு உன்னிடம் இருந்து எவ்வித பதிலும் கிடைக்காத படியால் அந்த வேலையை இன்னொருவருக்கு வழங்கியிருப்பதாகக் கூறப்பட்டது.

அவன் ஒவ்வொரு கடிதமாகத் திறந்த பொழுது அவன் தனது கனவுகள் எல்லாம் நனவாக்கப்பட்டிருந்ததை உணர்ந்தான். ஆனால் எவ்விதத்திலோ அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு அவன் அவ்விடத்தில் இருக்கவில்லை. அவன் உண்மை நிலையை ஏற்றுக் கொண்டிருந்தால் அவன் தனது வயோதிப காலத்தில் புலம்பிக் கொண்டிருக் காமல் தனது வாழ்வைக் கொண்டாடிக் கொண்டிருந்திருப்பான்.

அம்மனிதனின் கதையானது மனிதர்கள் தொடர்பான ஒரு நீதிக் கதையைப் போன்றதாகும். ஒவ்வொருவருக்கும் கனவுகளும் நம்பிக்கைகளும் உள்ளன. இந்த வித்தியாசமான ஆர்வங்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படையில் ஆனந்தமாக இருப்பதற்கானதும் நிறைவடைவதற்கானதுமான அந்த ஒரே ஆவலே அங்குள்ளது.

"விடயங்கள் எப்படி இருக்கவேண்டும் என்ற எங்கள் எண்ணக் கருத்துக்களுள் நாம் அகப்பட்டுக் கொள்கின்றோம்." என மஹாராஜி கூறுகின்றார். எப்படி நிறைவடையலாம் என்னும் எண்ணக் கருத்துக்களில் நாம் மும்முரமாக முயற்சி செய்து கொண்டிருப்ப தால் நாம் மிகவும் இயல்பானதும் மிகவும் எளிமையானதும் மிகவும் அழகானதுமான இந்த உயிர் வாழ்வின் உண்மை நிலையை ஏற்றுக் கொள்வதில்லை. உங்கள் ஆனந்தம் உங்கள் உள்ளேதான் உள்ளது. உங்கள் நிறைவு உங்கள் உள்ளேதான் உள்ளது. அது அந்தளவிற்கு எளிமையானது.

மஹாராஜி அவர்கள் மிகச் சிறிய வயதினராக இருந்த காலத்தில் இருந்தே உள்ளத்தின் உள்ளே உள்ள ஆனந்தத்தைப் பற்றி இந்தியாவில் உரையாற்ற ஆரம்பித்து விட்டார். அவர் தனது கட்டிளம் பருவத்தை அடைந்தபோது மேற்கு நாடுகளில் உரையாற்றுவதற்காகக் கிடைத்த அழைப்பிதழ்களை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தார். அந்தப் பிரயாணங்கள் வாழ்நாள் முழுவதற்குமான பிரயாணமாக மாறியதுடன் ஒவ்வொரு கணமும் இருந்துவருவதாக மஹாராஜி கூறும் அந்த ஆனந்தத்தின் ஆற்றலுக்கான சாத்தியம் பற்றி மக்களுக்கு இயலுமானவரை அறிமுகம் செய்து வைக்கவும் அது அவரை இட்டுச் சென்றுள்ளது. யார் எவர் அதைத் தேடிக் கண்டுகொள்ள ஆர்வம் காட்டுகிறார்களோ அவர்களுக்கு அவர் உதவி செய்கின்றார்.

### Words of Peace

மேலும் கற்றுக்கொள்ள:
416.431.5000
1.877.707.3221 www.wopg.org / www.tprf.org

நேற்றைய தினத்தில் எவ்வித உண்மை நிலையும் இல்லை. நாளைய தினத்திலும் எவ்வித உண்மை நிலையும் இல்லை என மஹாராஜி கூறுகின்றார். உங்களிடம் இருப்பதெல்லாம் இந்தக் கணம் மட்டும்தான். இப்பொழுது எனப்படும் இத்தருணத்தில்தான் எவ்வளவோ விடயங்கள் உள்ளன. இப்பொழுது எனப்படும் இந்த ஒரு விடயத்தில் தான் உங்கள் உயிர் வாழ்விற்கான அந்த ஆனந்தம், அந்த நிறைவு, அந்தச் சந்தோசம் என்பன உள்ளன.

"கதவு ஒன்று திறக்கப்பட்டுள்ளது. அழைப்பிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. வந்து அந்த மகிழ்ச்சியை கொண்டாடுங்கள். வந்து நிறைவடையுங்கள். வந்து உங்கள் வாழ்வைச் சரியாக்கிக் கொள்ளுங்கள்.

அண்மையில் நடைபெற்ற உரையின் போது மஹாராஜி அவர்கள் குறிப்பிடும் ஆனந்தத்தின் அனுபவம் பற்றிக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலிறுத்தார்.

கேள்வி : எல்லோராலும் உள்ளே உள்ள ஆனந்தத்தை அனுபவிக்க முடியுமாயின் எதற்காக அநேக மக்கள் மகிழ்ச்சியாக வில்லை?

பதில்: யாராவது ஒருவர் உங்களுக்கு மகிழ்ச்சியைக் காட்டித் தருவதாகக் கூறினால் நீங்கள் என்ன கூறுவீர்கள்? ஆம் நான் அதை எடுத்துக் கொள்கின்றேன் என நீங்கள் கூறுவீர்கள். எனினும் ஒவ்வொரு அழைப்பிதழினதும் கடைசிக் கட்டத்தில் தான் நீங்கள் நிற்கின்றீர்கள். ஒவ்வொரு உண்மை நிலயினதும் இறுதிக் கட்டத்தில் தான் நீங்கள் நிற்கின்றீர்கள்.

உண்மை நிலை பற்றி எமக்குத் தெரியும் என நாம் எண்ணுகின்றோம். இந்த உலகில் உள்ள ஒவ்வொருவரும் உலகில் உள்ள விடயங்கள் எல்லாவற்றையும் நல்லது கெட்டது எனப் பிரிக்கின்றார்கள். நாம் இந்த உலகில் எமது ஒரு புறத்தில் நல்லது என்ற பெயர் பொறிக்கப்பட்ட ஒரு பையும் மறுபக்கத்தில் கெட்டது என்ற பெயர் பொறிக்கப்பட்ட ஒரு பையுமாக இரு பைகளைக் காவிக்கொண்டு செல்கிறோம். இந்த உலகில் உள்ள எல்லா விடயங்களும் இந்த ஏதாவது ஒரு பையினுள் சென்றடைகின்றன.

இந்த எல்லா விடயங்களிலும் உண்மையானது எது? நல்லது கெட்டது என்னும் எல்லைகளுக்கு அப்பால் சென்று நீங்கள் விடயங்களைப் பார்த்தால் விடயங்கள் எதுவோ அவற்றை அவையாகவே உங்களால் பார்க்க முடியும். அவை எப்படி உள்ளன என்பதை நீங்கள் காணும் போது அவை மிக அழகானவையாக இருக்கும்.

ஆனால் இந்த உலகின் எண்ணக் கருத்துக்களை விட்டுவிடுவது அவ்வளவு எளிதானதல்ல. நீங்கள் காவிக் கொண்டிருக்கும் அந்தப் பைகளை கீழே வைப்பது அவ்வளவு எளிதானதல்ல.

கேள்வி : ஒரு மனிதன் எவ்விதம் அந்த விடயங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட முடியும்.

பதில்: நீங்கள் சிறுவனாக இருந்தபோது, நீங்கள் ஒரு குழந்தையாக இருந்தபோது ஒரு பொருளைப் பார்த்து நல்லது கெட்டது, சரி பிழை என்னும் எல்லைகளுக்கப்பால் சென்று அது எதுவோ அதை அதுவாகவே பார்க்கும் சாத்தியம் உங்களிடம் இருந்தது. எமது வாழ்வில் எமக்கு ஆனந்தம் தேவையா யின் அப்போது நாம் அந்தக் குழந்தையின் உள்ளத்தை மீளக் கொண்டு வரப் போகின்றோம். எப்பொழுது எங்களால் மீண்டும் ஒரு முறை தூய்மையான கண்களால் பார்க்க ஆரம்பிக்க முடியுமோ அப்போது எம்மால் எமக்குத் தரப்பட்டுள்ள கொடையை, உயிர் வாழ்வு என்னும் கொடையைக் காணக் கூடியதாக இருக்கும். இதுதான் அந்தத் தேவை. குழந்தையின் உள்ளத்துடன் இருத்தல்.

குழந்தையில் உள்ள புத்தம் புதிய தன்மை என்ன? ஒரு குழந்தையின் முகத்தைப் பாருங்கள் அதில் நேற்றைய தினம் பற்றிய எந்தச் சுவடும் இல்லை. இப்பொழுது ஒரு வயது வந்தவரின் முகத்தைப் பாருங்கள். நீங்கள் எதைக் காண்கிறீர்கள்? அது நேற்றைய தினத்தின் சுவடுகளால் நிறைந்திருக்கும்.

நான் கூறுவதெல்லாம் நேற்றைய தினத்தின் சுவடுகளை எடுத்து விடுங்கள். நீங்கள் ஒரு காலத்தில் இருந்ததுபோல் மீண்டும் நீங்கள் அந்தக் குழந்தையாக மாறுங்கள். அந்தக் குழந்தை எங்கும் போய்விடவில்லை. மீள அந்தக் குழந்தையாக மாறுங்கள்.

(தொடர்ச்சி 36 ஆம் பக்கம்...)



# மகிழ்ச்சியாக......

35 ஆம் பக்கத்தொடர்ச்சி

மீண்டும் எப்பொழுது உங்களால் உங்கள் உள்ளத்தின் தூய்மையான கண்களினால் பார்க்க ஆரம்பிக்க முடியுமோ அப்பொழுது உங்களால் உங்களுக்குத் தரப்பட்டிருக்கும் அந்தப் பரிசை, உயிர் வாழ்வு என்னும் பரிசைக் காணக்கூடியதாக இருக்கும்.

கேள்வி: கடந்த காலத்தை கைவிட்டுவிடுவது என்பது கருத்தைத் தருவதாக இருந்தாலும் நான் எதிர்காலத்தைப் பற்றிக் கவனத்தில் கொள்ளத் தேவையில்லையா?

பதில்: அநேக மக்கள் ஒவ்வொருநாளும் தாம் அதிகளவிலான விடயங்களைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் எழுந்திருப்பது எனக்குத் தெரியும். பின் பொருநாள் அவர்களிடம் அவருடைய டாக்டர் அவர் உயிர் வாழ்வதற்கு இன்னும் இரண்டு மாதங்களே இருப்பதாகக் கூறினால் திடீர் என ஒவ்வொரு நாளும் முக்கியத்துவம் பெறு கின்றது. அவர்கள் செய்து வந்த சகல விடயங்களையும் திடீர் என நிறுத்திவிட்டு தமது முழு வாழ் நாளையும் மாற்றி விடுவார்கள். நான் அதைக் கண்டிருக்கிறேன். ஏன் அப்படி நடைபெறுகிறது?

நான் கூற விரும்புவது மிகவும் எளிமை யானதும் அதேநேரம் மிகவும் ஆழமானது மாகும். இது எம் ஒவ்வொருவருடனும் தனிப்பட்ட ரீதியில் தொடர்புடையது. மனிதர்கள் என்ற ரீதியில் இது எண்ணக் கருத்துக்களுடனோ அல்லது தத்துவங் களுடனோ தொடர்புபட்டதல்ல. இது ஒரு எளிமையான விடயத்துடன் தொடர்பு படுகின்றது. இந்த வாழ்வுடன், இந்த உயிர் வாழ்வுடன் தொடர்புபடுகின்றது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் இப்பொழுது நமது பொறுப்புக்களாக இருக்கும் விடயங்களுக்கு மேலால் மேலும் ஒரு பொறுப்பை எடுத்துக் கொள்வதாகும். அந்தவொரு மேலதிகப் பொறுப்பானது இந்தப் பரிசை, இந்த ஆனந்தத்தை, இந்த அழகை, இனங் காணுவது. அந்த ஒரு விடயம் தான் உண்மையிலேயே எம்மை நிறைவு செய்யும்.

அந்தக்கதை உங்களைப் பற்றியது. நீங்கள் இந்த உலகில் வந்திருக்கின்றீர்கள். உங்களுக்கு மூச்சுத் தரப்பட்டுள்ளது. உங்களுக்கு அந்தப் பரிசு தரப்பட்டுள்ளது. உங்கள் வாழ்வில் அதை நீங்கள் ஏற்றுக்கொண்டுள்ளீர்களா? நீங்கள் அந்த உணர்வை ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்கள் வாழ்வில் அதை ஏற்றுக் கொள்ளுங்கள் ஏனெனில் அதுதான் நடை- பெறுகின்றது. எமக்கு அந்தப் பரிசு அபரித மாகக் கிடைத்துள்ளது. எனினும் நாம் அதன் முக்கியத்துவத்தை, அல்லது அது எதைக் கருதுகின்றதோ அதைக் கண்டு கொள்வதில்லை.

ஆகவே யார் அந்தப் புத்திசாலி? அந்தப் புத்திசாலி யார் எனில் யார் நாளை என்று ஒன்றில்லை என எண்ணுகின்றானோ அவனே அந்தப் புத்திசாலி. அது ஏனென்று உங்களுக்குத் தெரியும் ஏனெனில் நாளை என்று ஒன்று அங்கே இல்லை. உங்களுக்கு மனிதர்கள் என்ற ரீதியில் நாளை என்று ஒன்று இல்லை. அங்கு இன்று மட்டுமே உள்ளது.

# வாகனக்....

09 ஆம் பக்கத்தொடர்ச்சி

- வாகன விபத்தினைத் தொடர்ந்து, வாகனம் திருத்த வேலைகளில் நிற்கும் காலங்களில் அல்லது திருட்டுப் போயிருந்தால் தற்காலிக- மாக உபயோகிப்பதற்கு வாடகைக் கம்பனியில் வாகனம் பெறும் பிரிவு. இந்நட்ட ஈட்டுப் பிரிவிலிருந்து ரக்சியினைப் பயன் படுத்தினால் அதற்குரிய செலவினையும் மீளப் பெறலாம்.
(OPCF 20 Coverage For Transportation Replacement / Rental Vehicle Coverage)

விபத்தில் தங்களில் பூரணமாகத் தவறு இல்லையென்றாலும், மேற்குறிப்பிட்ட நட்டஈட்டுப் பிரிவு இல்லையென்றாலும் வாடகை வாகனத்தினைக் காப்புறுதி கம்பனி யின் செலவில் சில காலங்களுக்குப் பெற்று வைத்திருக்கலாம்.

- முதல்முறை மட்டும் எதிர்கொள்ளும் ஒரு தபவறுக்குரிய விபத்தினை (At Fault Accident) மன்னித்து அதன் காரணமாக வாகனக் காப்புறுதியின் விலையினைத் தொடர்ந்து அதிகரிக்காமல் இருப்பதற்காக சேர்த்துக் கொள்ளும் மேலதிகப் பிரிவு. (Accident Forgiveness Or Claim Protection Coverage)

- பெறுமானத் தேய்வு என்பதினை கருத்தில் கொள்ளாது முற்றாக வாகனம் விபத்தில் அழிவிற்கு உட்பட்டால் அல்லது திருட்டு போனால் ஆரம்பத்தில் வாங்கிய விலையி- னையே இழப்பீட்டு நிவாரணமாக வழங்கும் பிரிவு.

புதிதாக கம்பனியில் வாங்கிய வாகன ங்களுக்கு முதல் 24-30 மாதங்களுக்கு மட்டும் இந்தப் பிரிவு செல்லுபடியான- தாகவிருக்கும். (waiver of depreciation coverage)

**வாகனக் காப்புறுதியில் "ஸ்ரார் மதிப்பீடு" (STAR RATINGS) எனப்படுவது யாது?**

தொடர்ச்சியாக வாகனக் காப்புறுதி ஒப்பந்தத்தில் பதிந்து வாகனம் செலுத்திக் கொண்டிருக்கும் வருடங்களில் எதுவித தவறுக்குரியவர் என்ற நிலைமைக்குள்ளான விபத்துக்களில் (At Fault Accident) சிக்காது, மேலும் எதுவிதமான தண்டனை ரிக்கற்றுக்களும் பெற்றுக்கொள்ளாது வாகனம் செலுத்தும் ஒவ்வொரு வருடமும் ஒரு ஸ்ரார் என்ற மதிப்பீட்டுக்குள் உ ள்ளடக்கப்படும்.

ஆறு வருடங்கள் இதேமாதிரி எதுவிதமான பாதிப்புக்களின் பதிவுமில்லாது வாகனம் செலுத்தினால் அங்கு ஆறு ஸ்ரார் என உ ச்ச மதிப்பீட்டுக்குள் உள்ளடக்கப்படும். இந்தக் காலத்தினுள் ஒரு விபத்தில் அகப்பட்டால் ஸ்ரார் மதிப்பீடு பூச்சியமாக இறங்கிவிடும். பின்னர் அதனைக் கவனமாக கட்டி எழுப்ப வேண்டும்.

ஆறு வருடங்களுக்குக் குறையாத "ஸ்ரார் மதிப்பீடு" வைத்திருப்பவர்களுக்கு மலிவான விலையில் வாகனக் காப்புறுதி பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் உண்டு.

**துரதிஷ்டவசமாக எதிர்கொள்ளும் ஒரு தவறுக்குரிய விபத்து "ஸ்ரார் மதிப்பீடி னைப்" பூச்சியமாக இறக்கி, வாகனக் காப்புறுதி விலையினையும் உயர்த்தி விடும். இதற்கு ஏதாவது மாற்றுத் தீர்வு உண்டா?**

அந்த நிலையிலும் ஒரு மாற்றுத் தீர்வு உ ண்டு. சில வாகன சாரதிகள் சுமார் கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக எதுவிதமான விபத்துக்கள், தண்டனை ரிக்கற்றுக்கள் என்பவற்றில் சிக்காது நல்ல பதிவுகளை வைத்திருப்பார்கள். துரதிஷ்டவசமாக ஒரு தவறுக்குரிய விபத்தில் அகப்பட்டால் அங்கு ஸ்ரார் மதிப்பீடு பூச்சியமாக இறங்கி அதீத விலை செலுத்த வேண்டிய நிலைமை உ ருவாகிவிடும்.

"விபத்தினை மன்னிக்கும் சரத்து" (Accident Forgiveness Endorsement) என்ற ஒரு பிரிவினை சற்று மேலதிகமாகப் பணம் செலுத்தி தங்கள் வாகனக் காப்புறுதியில் சேர்த்து வைத்திருந்தால் ஒரு முறை விபத்தில் மட்டும் தப்பிக்கொள்ளலாம். அதாவது முதல்முறை நடக்கும் விபத்தில் மட்டும் ஒரு மன்னிப்பு இங்கு வழங்கப்படும். அது விலையினைப் பாதிக்காது.

**எனது வாகனத்தினை எனது குடும் பத்தினர் அல்லது நண்பர்களில் எவரா வது ஒருவர் எடுத்து ஓட்டிச் செல்லும் போது விபத்து நடந்தால் அது எனது வாகனக் காப்புறுதியில் பாதிப்பினை ஏற்படுத்துமா?**

வாகனம் ஒன்றினை இரவலாக இன்னொ ருவருக்கு வழங்கும்போது, தங்கள் வாகனக் காப்புறுதியினையும் சேர்த்து இரவல் வழங்குகின்றீர்கள் என்பதே இங்கு குறிப்பிடப்படும் வாகனக் காப்புறுதியின் கோட்பாடாகும்.

எவர் ஒருவர் தங்களின் வாகனத்தினை எடுத்து ஓட்டி செல்லும்போது, விபத்தினை எதிர்கொண்டு, அந்த விபத்து சட்ட ஒழுங்கு விதிகளின்படி, இவரில் தவறுக்குரிய விபத்தாக இருந்தால் (At - Fault For the Accident) அது வாகன உரிமையாளராகிய தங்களின் வாகனக் காப்புறுதிப் பதிவுகளில் Auto Plus Insurance Report பதியப்பட்டு, தொடர்ந்து வாகனக் காப்புறுதி புதுப்பிக்கும் போது விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

சில நேரங்களில் வாகனம் செலுத்தியவர் விபத்து நடந்த நேரம், அனுமதிப் பத்திரம் இல்லாதவராக அல்லது தடைசெய்யப்பட்ட ஒருவராக இருந்தால் அங்கு காப்புறுதி நிறுவனம் கை கொடுக்காது. அது வாகன உரிமையாளரின் தலையில் வந்து விழுந்து விடும். ஆனால் தங்களின் வாகனத்தினை ஓட்டியவர் ஏதாவது தண்டனை ரிக்கற்றினை பொலிசாரிடம் வாங்கினால் அது வாகன உ ரிமையாளராகிய தங்களைப் பாதிக்காது. அது அவரையே பாதிக்கும்.


## கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

## வெளிக்கள விருந்தும் - பரிசளிப்பும்

கடந்த June 17ஆம் திகதி நடைபெற்ற வருடாந்த வெளிக்களவிருந்தும் விளையாட்டுப் போட்டிகளும் நிறைவுபெற்ற வேளை காலநிலை காரணமாக பரிசளிப்பு நிறுத்தப்பட்டமையினால் August 27ஆம் திகதி மீண்டும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எமது சங்கத்தின் வருடாந்த கல்விசார் போட்டிகளிலும், விளையாட்டுப் போட்டிக- ளிலும் வெற்றிபெற்றவர்கள் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்வதோடு, எமது பாடசாலையின் பழையமாணவர்கள், அவர்களின் வாரிசுகளையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

காலம்: ஞாயிற்றுக்கிழமை, August 27th, 2017
நேரம் : பிற்பகல் 2 மணியிலிருந்து 6 மணிவரை
இடம் : Morningside Park – Picnic Area 1A (shelter)
390 Morningside Avenue, Scarborough, ON M1C 1B9
தொடர்புகளுக்கு : **416.291.9956/ 416.301.1733 / 905.294.9670**



## யோகா சோதிடம்



- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# ஒரு புதிய மனிதனின் கதை

## படித்ததில் பிடித்தது

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

பாவண்ணன்
(ஆசிரியர் முகமுடி அகற்றி.. ச. மாடசாமி )

விட்டல்ராவ் எழுதிய போக்கிடம் நாவலில் ஓராசிரியர் பள்ளி யொன்றைப்பற்றிய சித்தரிப்பு இடம்பெறுகிறது. ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரைக்குமாக மொத்தத்தில் எழுபது எண்பது பிள்ளைகள் அந்தப் பள்ளியில் படிக்கிறார்கள். பயிற்சியில்லாத ஆசிரியர்கள் ஒன்றிரண்டு மாதங்கள் வருவதும் பிறகு நின்று விடுவதுமாக இருந்ததால் அந்தப் பள்ளி செயல்படாத பள்ளியாகவே இருக்கிறது. அந்தச் சூழலில் சுகவனம் என்னும் இளைஞன் பயிற்சி பெற்ற ஆசிரியராக அந்தப் பள்ளிக்கு வருகிறார். மாணவ மாணவிகளுக்கு பேச்சில் இருக்கிற ஆர்வம் படிப்பதிலோ எழுதுவதிலோ இல்லை. வகுப்பறை எப்போதும் சத்தமாகவே இருக்கிறது. அவர்களுக்கு எப்படி கற்பிப்பது என்பது தெரியாமல் தொடக்கத்தில் திணறும் சுகவனம், இக்கட்டான ஒரு தருணத்தில் தானாகவே ஒரு வழியைக் கண்டுபிடிக்கிறார். அமைதி! அமைதி! அமைதியாக இருந்தால் ஒரு கதை சொல்வேன் என்றதும் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டதுபோல வகுப்பே அமைதியாகி விடுகிறது. பிள்ளைகளை அமைதிப்படுத்தும் சூட்சுமத்தை அறிந்து கொண்டதும் ஒவ்வொரு பாடத்தையும் அதன் மையக் கருவைக் கொண்டு ஒரு கதையாக மாற்றி விடுகிறார் சுகவனம். ராஜாராணி கதையையோ, காக்கைகுருவி கதையையோ சொல்வதுபோலத் தொடங்கி, பாடத்தின் கதையை அத்துடன் இணைத்துச் சொல்கிறார். பிள்ளைகள் ஆர்வத்துடன் கேட்கிறார்கள். அதையொட்டியே கேள்வி பதில்களை வடிவமைத்துக்கொள்கிறார். அவர் நினைத்த கற்பித்தல்முறை வெற்றியடைகிறது. பள்ளியின் சுற்றுச்சுவரோரம் செல்கிற ஊர்க்காரர்கள்கூட ஜன்னலோரமும் வாசலிலும் வந்து நின்று ஆசிரியரின் கதையைக் கேட்க நிற்கிற அளவுக்கு அந்த முறை பிரபலமாகிறது. நாவலில் இப் பகுதியைப் படித்ததும் நான் அடைந்த உற்சாகம் அளவற்றது. ஒரு புதிய வழி-முறை எப்போதும் இப்படித்தான் கண்டடையப்படுகிறது. ஆசிரியர்களாகப் பணியாற்றும் பலரிடம் நான் இந்த முறையைப் பகிர்ந்து கொண்டதோடு, 'நீங்கள் இப்படியெல்லாம் செய்வதுண்டா?' என்று கேட்டிருக்கிறேன். ஒன்றிரண்டு பேரைத் தவிர, மற்றவர்களுக்கு இதில் அக்கறையில்லை என்பது ஒரு வேதனையான புதிர். 'எங்க சார், இருக்கிற வேலையை பாக்கிறதா, இதுங்களுக்கு கத சொல்லிட்டு உக்கார்ந்திருக்கிறதா? இங்க எக்கச்சக்கமா ஹோம்வொர்க் குடுக்கிற டீச்சர்தான் நல்ல டீச்சர். பெத்தவங்களும் அதத்தான் விரும்பறாங்க, ஆபிசர்ங்களும் அதத்தான் விரும்பறாங்க' என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

சுகவனம் போலவே கதைகளாலேயே பாடங்களை மனத்தில் பதிய வைத்த ஆசிரியர் எங்கள் பள்ளியைச் சேர்ந்த ராமசாமி மற்றும் ராதாகிரு'ணன். அவர்களை ஒரு போதும் மறக்கமுடியாது. அவர்களை போன்ற ஆசிரியர்கள் ஒருசிலராவது எங்கேனும் இருக்கக்கூடும். அவர்களெல்லாம் தம் அனுபவங்களை எழுதி வைத்திருந்தால் மிகச்சிறந்த அனுபவ ஆவணங்களாக மாறியிருக்கும். நான் படித்தவரையில் வார்த்தை என்னும் இதழில் தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக இருந்து ஓய்வுபெற்ற பி.ச.குப்புசாமி அவர்கள் எழுதிய கட்டுரைகள் மிகச்சிறந்த ஆவணமாகும்.

இப்படி பழைய நினைவுகள் பொங்கி வருவதற்குக் காரணம், நேற்று இரவு மாடசாமி எழுதிய 'ஆசிரிய மனிதர்' ஒரு வாசிப்பு அனுபவம் என்னும் நூலாகும். அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த பிராங்க் மக்கோர்ட் என்னும் ஆசிரியர் அமெரிக்கப் பள்ளியில் பணிபுரிந்த தன் அனுபவங்களைத் தொகுத்து நூலாக எழுதினார். 'டீச்சர் மேன்' என்னும் அந்த நூல் உலக அளவில் மிகமுக்கியமான ஒரு புத்தகம். ஆசிரியர்களுக்கான ஒரு கையேடு என்றே சொல்லலாம். அந்தப் புத்தகத்தை வாசிக்க நேர்ந்த மாடசாமி, தன் வாசிப்பு அனுபவங்களை ஒரு சிறிய நூலாகவே எழுதி விட்டார். மக்கோர்ட் நூல்வழியாக அவர் பெற்ற உத்வேகத்தைப் புரிந்து கொள்வதோடு, மூலநூலைத் தேடிப் படிக்கத் தூண்டும் வகையிலும் அவருடைய வாசிப்பனுபவம் உள்ளது. அவர் எடுத்துக் காட்டாக பகிர்ந்திருக்கும் மக்கோர்டின் அனுபவங்கள் ஒவ்வொன்றும் அவரை மிகமிக நெருக்கமாக உணரவைக்கின்றன.

மக்கோர்ட் முதன்முதலாக வேறொரு நூலைத்தான் எழுதினார். அதன் பெயர் ஆஞ்சலாவின் சாம்பல். அந்த நூலை எழுதும்போது அவருடைய வயது 66. ஆஞ்சலா அவருடைய தாயாரின் பெயர். கசப்பான வாழ்வை சுமக்க முடியாமல் சுமந்தவர். ஆஞ்சலாவின் விரலிடுக்கில் புகைந்த சிகரெட் சாம்பல்தான் தலைப்பு. தன் குடும்ப வரலாற்றையே சிறுசிறு அத்தியாயங்களாக எதையும் மறைக்காமல் அவர் எழுதினார். குடிகாரத் தந்தைபற்றி, அவர் குடும்பத்தை கைவிட்டு ஓடியதுபற்றி, இரு தம்பிகளும் ஒரு தங்கையும் பசியாலும் நோயாலும் மடிந்துபோனதைப்பற்றி, இரு

தொடர்ச்சி 38ஆம் பக்கம்...)




Century 21
People's Choice Realty Inc. Brokerage
G21
Uthayan Markandu
Sales Representative
Cell: 416-818-5493
Off: 416-742-8000
Fax: 416-742-8001
uthayan.markandu@gmail.com



FOR YOUR ALL OTHER REALESTATE NEEDS
Uthayan Markandu
(416) 818-5493

House for Sale
Priced at $ 839,900.00
74 Bramsey Street, Sutton
45 min north of Markham
All Brick Detached Home
over $ 100,000 in upgrades,
Five Bedrooms with seemless shower Ensuite,
and Semi Ensuites for Other Bedrooms
Hardwood through out,
Quartz counter top thro out,
Oak stairs with iron pickets.
Modern light fixtures,California Sutters,
Upgrated Kitchen Cabinet,
New Benjamin more paint and
much more to list
Front of the House Conservation Area
with walk trail.

Open House
Augest 26 and 27 from 1 t0 4 pm.
DON'T MISS IT

# ஒரு புதிய...

37 ஆம் பக்கத்தொடர்ச்சி

பிள்ளைகளை வைத்துக்கொண்டு தன் தாய் பட்ட பாடுகள்பற்றி, சிறுவயதில் திருடிச் சாப்பிட்ட அவமதிப்பான வாழ்க்கையைப் பற்றி என எல்லாவற்றையும் எழுதினார். சிலநூறு பிரதிகளே விற்கும் என அவர் நினைத்த அந்தப் புத்தகம் சில மாதங்களி-லேயே லட்சக்கணக்கான பிரதிகள் விற்றுத் தீர்ந்தன. வெளிப்படையான பேச்சும் எழுத்தும் அவருக்கு பரவலான அங்கீகாரத் தையும் வாசக உலகத்தையும் அளித்தன. அந்த நூலுக்குப் புலிட்சர் பரிசும் கிடைத்தது. அதற்குப் பிறகுதான் தம் 75 வயதில் தம் வகுப்பறை அனுபவங்களைத் தொகுத்து 'டீச்சர் மேன்' நூலை எழுதி-முடித்தார். நியுயோர்க் நகரில் உள்ள பள்ளியொன்றில் 1958ஆம் ஆண்டில் அவர் தம் ஆசிரியர் பணியைத் தொடங்கினார். அது ஒரு தொழிற்பள்ளி. பதினாறு வயதுக்கு மேற்பட்டவர்கள்தாம் அங்கே மாணவர்களாக இருந்தார்கள்.

1950களில் நியுயோர்க்கில் மாணவர்கள் கும்பல்கும்பலாகப் பிரிந்து தெருவீதிகளில் சண்டையிட்டு ரத்தம் சிந்துவது வழக்கமாக இருந்தது. தொழிற்பள்ளிகளில் சொல்லிக் கொடுக்க வரும் ஆசிரியர்கள் அவமதிக்கப் படுவதற்குக் கணக்கே இல்லை. அதைப் பற்றி திரைப்படங்கள் கூட வந்துள்ளன. வகுப்பறைகளில் ஆசிரியர்கள் அடிபடுவது, தினமும் நடைபெறக்கூடிய சங்கதியாக இருந்தது. திருப்பி அடிக்கமுடியாது. வேலையை இழக்கநேரிடும். கூச்சலிடக் கூடிய, சண்டையிடக்கூடிய, அடிபணிய மறுக்கிற விடலைகளின் வகுப்பில்தான் மக்கோர்ட் முதன்முதலாக ஆசிரியராக நுழைந்தார். முதல்நாளில் அவருக்குக் கிடைத்த அனுபவம் விசித்திரமானது. வகுப்பறைக்குள் அவர் நுழையும்போது யாருமே அவரைக் கண்டுகொள்ளவில்லை. பேட்டி என்கிற மாணவன் மதிய உணவுக்கு தன் வீட்டிலிருந்து கொண்டுவந்த சாண்ட் விச்சை அதைச் சுற்றிய தாளோடு முதல் வரிசையில் உட்கார்ந்திருக்கும் ஆண்டி என்கிற மாணவன்மீது வீசுகிறான். அது கரும்பலகைக்குமுன்னால் விழுகிறது. இந்தச் சண்டையைப் பார்த்து சகமாணவர் களிடம் உற்சாகம் பீறிடுகிறது. எல்லோரும் கூச்சலிட்டு, இரு தரப்புகளையும் ஊக்கப் படுத்துகிறார்கள். வகுப்பில் நுழைந்த மக்கோர்ட் திகைத்து, அமைதி அமைதி என்று பலமுறை அறிவிக்கிறார். ஆனால் அது யார் காதிலும் விழவில்லை. உலகெங்கும் கோடிக்கணக்கான குழந்தை கள் சாப்பிட எதுவுமின்றி பட்டினி கிடக்கும் போது, இந்த வகுப்பறைக்குள் சாண்ட் விச்சை தூக்கி வீசும் விளையாட்டு நடக்கிறதே என்ற வேதனை படர்கிறது. மெதுவாக குனிந்து கீழே விழுந்து கிடந்த சாண்ட்விச்சை எடுத்து நாற்காலியில் உட்கார்ந்து சாப்பிட்டுவிடுகிறார். பிறகு எழுந்து கரும்பலகையில் 'நான் சாண்ட் விச்சைச் சாப்பிட்டுவிட்டேன்' என்று எழுது கிறார். வகுப்பறையில் உட்கார்ந்திருந்த 34 மாணவ மாணவிகளின் கண்களில் நம்பமு-டியாத வியப்பு படர்கிறது. சாண்ட்விச் சுற்றிய தாளை பந்துபோல சுருட்டி வகுப்பின் ஓரத்தில் இருந்த குப்பைக் கூடை யில் விழுமாறு போடுகிறார். அந்தத் தருணத்தில் எதிர்பாராதவிதமாக அவ் வகுப்பைக் கடந்துபோகும் பள்ளி முதல்வர் அவரை அழைத்து வகுப்பறைக்குள் சாண்ட்விச் சாப்பிடுவது நல்ல பழக்கமல்ல என்று கண்டிக்கிறார். மக்கோர்ட் நடந்ததைச் சொல்ல நினைத்தும் சொல்லாமல் அமைதி யாக திரும்பிவிடுகிறார். வகுப்பிலிருந்த பிள்ளைகள் எல்லோரும் முதல்வர் என்ன சொன்னார் என்று கேட்கிறார்கள். முதல்வர் கேட்டதையும் தான் சொன்ன பதிலையும் மறைக்காமல் பகிர்ந்து கொள்கிறார் மக்கோர்ட். அக்கணத்தில் மாணவர்களுக் கும் அவருக்கும் இடையே சட்டென ஓர் ஒட்டுதல் பிறந்துவிடுகிறது. இப்படி தொடங்கிய ஒட்டுதலை ஆரம்பமாகக் கொண்டு, அவர்களை படிப்பில் ஆர்வ முள்ள நல்ல மாணவர்களாக படிப்படியாக மாற்றிய வித்தையே நூலாக விரிவாக எழுதினார். 'பரிசோதனைகள் மூலமாகவும் தோல்விகள் மூலமாகவும்தான் நான் மனி தனாக இருப்பதற்கும் ஆசிரியராக இருப்பதற்கும் கற்றுக்கொண்டேன்' என்று குறிப்பிடும் மக்கோர்ட். ஒவ்வொரு ஆசிரி யரும் மாணவர்களிடம் இடைவிடாமல் பேசிக் கொண்டே இருக்கவேண்டும் என்கிறார். இந்த உலகத்தில் உள்ள எதைப்பற்றி வேண்டுமானாலும் மாணவர் களிடம் உரையாடலாம் என்பது அவர் நிலைப்பாடு. ஒரு வகுப்பில் ஆர்வமுள்ள மாணவர்களும் ஆர்வமற்ற மாணவர்களும் குறிப்பிட்ட விகிதத்தில் கலந்தே இருப்பார் கள். ஆர்வமற்ற மாணவர்களே ஆசிரியர் களின் சவால். அவர்களை தம் பேச்சால் வசப்படுத்தி ஆர்வம் நிறைந்தவர்களாக மாற்றும் வழிகளைப்பற்றி ஆசிரியர் தொடர்ந்து சிந்தித்து கண்டறியவேண்டும் என்கிறார்.

ஒருமுறை பெற்றோர் ஆசிரியர் சந்திப்பில் ஒரு தாய் மக்கோர்ட்டைப் பார்த்து 'நீங்கள் ஒரு மோசடிப் பேர்வழி' என்று குற்றம் சுமத்துகிறார். 'வகுப்பில் பாடங்களைவிட அதிகமாக கதைகளையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அதுவும் அயர்லாந் துக் கதைகள். ஆசிரியரின் சொந்தக் கதை யெல்லாம் வகுப்பில் எதற்கு? கதை களெல்லாம் வேண்டாம். நீங்கள் பாடம் சொல்லிக்கொடுங்கள். போதும். கதை-களைச் சொல்ல வீட்டிலே தொலைக்காட்சி இருக்கிறது. புத்தகம் இருக்கிறது. உங்கள் வேலை ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பதுதான். அதை ஒழுங்காகச் செய்யுங்கள்' என்று இழிவாகப் பேசிவிட்டுப் போகிறார். மனத்துக்குள் குழம்புகிறார் மக்கோர்ட். பிள்ளைகள் தன்னைத் தந்திரமாக ஏமாற்றி, தன்னை ஒரு கதை சொல்லியாக மாற்றி விட்டார்களோ என எண்ணுகிறார். எப்படியாயினும் இனி வகுப்பை ஒழுங்காக நடத்த வேண்டும் என்று திட்டமிட்டுக்கொள்கிறார். அன்று இலக்கண வகுப்பு. ஜான் கடைக்குப் போனான் என்று கரும்பலகையில் எழு-திவிட்டு, இந்த வாக்கியத்தில் உள்ள எழுவாயைக் கண்டுபிடிக்கச் சொல்கிறார். அக்கணமே மாணவர்கள் சலிப்படைவதை அவர் உணர்ந்துகொள்கிறார். எழுவாய் கண்டுபிடிக்கும் வாக்கியத்தில் 'ஜான் ஏன் கடைக்குப் போனான்?' என்றொரு கேள்வியை எழுதி இணைக்கிறார். இலக்கண வகுப்பில் இப்படியெல்லாம் நடப்பதில்லையே என்று மாணவர்கள் திகைக்கிறார்கள். ஒரு மாணவன் கையை உயர்த்துகிறான். சொல் என்று சொல்கிறார் மக்கோர்ட். அவன் 'ஜான் ஆங்கில இலக்கணப்புத்தகம் வாங்க கடைக்குப் போனான்'என்று சொல்கிறான். உடனே மக்கோர்ட் 'ஜான் ஏன் ஆங்கில இலக்கணப் புத்தகம் வாங்க கடைக்குப் போனான்?' என்று மற்றொரு கேள்வியை இணைக்கி றார். 'ஏனென்றால் ஜான் இலக்கணப் புத்தகம் வாங்கி நன்கு படித்து வகுப்பில் ஆசிரியர் மக்கோர்ட்டின் நன்மதிப்பைப் பெற விரும்பினான்' என்று பதில் வருகிறது. இலக்கணம் மெல்லமெல்ல உரையாடலாக மாறிவிடுகிறது. 'ஜான் ஏன் மக்கோர்ட்டின் நன்மதிப்பைப் பெறவேண்டும்?' என்று இன்னொரு கேள்வியை இணைக்கிறார் மக்கோர்ட். ஒரு மாணவன் எழுந்து 'ஏனென்றால் ஜானுக்கு ரோஸ் என்றொரு காதலி இருக்கிறாள். அவளுக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியும். அவளைப்போலவே ஆங்கிலம் கற்க ஜான் விரும்பி புத்தகம் வாங்கினான். அவன் நன்றாகப் படித்து தேர்ச்சி பெற்று ரோஸியை திருமணம் செய்துகொள்வான். தனக்குப் பிறக்கும் குழந்தைக்கு மக்கோர்ட் என்று பெயர் சூட்டுவான்' என்று பதில் சொல்கிறான். இப்படியே அந்த வகுப்பு நேரம் முழுதும் உரையாடல் நீண்டுகொண்டே செல்கிறது. புதிய புதிய சொற்கள். புதிய புதிய பிரயோகங்கள். எல்லாம் வெள்ளமெனப் பாய்கிறது. மொழியின் பெரும்பரப்பில் இருந்து புதுப்புதுச் செய்திகளைக் கொண்டுவந்து தருவதுதான் மொழி ஆசிர-ியரின் முக்கியமான வேலை என்று கருதுக-ிறார் மக்கோர்ட். கைதட்டலோடு வகுப்பு முடிகிறது. இலக்கணம் என்பதை மறந்து மாணவர்கள் இலக்கணம் கற்கிறார்கள்.

இன்னொரு எடுத்துக்காட்டு. தாமதமாக வரும் அல்லது விடுப்பெடுக்கும் மாணவ மாணவிகள் தம் பெற்றோர்களிடமிருந்து வருத்தக்கடிதம் கொண்டுவர வேண்டும் என்பது அப்பள்ளியின் விதி. அவற்றில் ஒன்று கூட உண்மையான பெற்றோரால் எழுதப்பட்டதில்லை என்பதை மக்கோர்ட் புரிந்துகொள்கிறார். ஆனால் அதை எப்படி கட்டுப்படுத்துவது என்று அவருக்குப் புரிய வில்லை. ஒருநாள் அவருக்கு எதிர்பாராத விதமாக ஒரு யோசனை உதிக்கிறது. மாணவர்கள் எழுதிய வருத்தக்கடிதங்களின் நகல்களை எடுத்துவந்து மாணவர்களிடம் மாற்றிமாற்றிக் கொடுத்து படிக்கச் சொல்கிறார். ஒருவித ரகசியப் புன்னகை-யோடு அவர்கள் அவற்றைப் படிக்கிறார்கள். அதைத் தொடர்ந்து அவர் மாணவர்களை நோக்கி, 'ஒரு கற்பனை. இப்போது நீங்கள் மாணவர்கள் அல்லர். பெற்றோர்கள். உங்கள் பிள்ளைகள் ஏதோ ஒரு பள்ளியில் படிக்கிறார்கள். அவர்களுக்கு விடுப்பு வேண்டும். அவர்களை மனத்தில் நினைத்து ஆளுக்கொரு வருத்தக்கடிதம் எழுதுங்கள்' என்று சொல்கிறார். அவர்கள் மறைமு-கமாகச் செய்ததையே ஓர் எழுத்துப் பயிற்சியாகக் கொடுக்கிறார். மாணவர்கள் உற்சாகத்தோடு எழுதிக் குவிக்கிறார்கள். மெல்லமெல்ல மக்கோர்ட் அந்தப் பயிற்சியை விரிவாக்குகிறார். ஆதாம் அல்லது ஏவாள் கடவுளிடம் மன்னிப்புக் கேட்டு வருத்தக்கடிதம் எழுதுவதுபோல எழுதுங்கள் என்று தூண்டுகிறார். ஒருகணம் கூட யோசிக்காமல் மாணவர்கள் எழுதத் தொடங்கி முடிக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் இப்படி பயிற்சிகள் தொடர்கின்றன. ஏசு கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் எழுதும் வருத்தக்கடிதம், யூத இனப்படுகொலை புரிந்த கிட்லர் எழுதும் வருத்தக்கடிதம், கொள்ளையடித்து கொடைவள்ளலாகத் திகழ்ந்த அமெரிக்கக் கிரிமினல் அல்கபோன் எழுதும் வருத்தக் கடிதம் என நாள்தோறும் அப்பயிற்சி வளர்ந்து கொண்டே போகிறது. ஒருநாள் மாணவர்கள் மும்முரமாக எழுதிக் கொண்டிருக்கும் போது வாசலில் நிழலாடு கிறது பள்ளிமுதல்வரும் கல்வித்துறை அதிகாரியும் வகுப்பறைக்குள் நுழைகிறார் கள். உள்ளே நிற்கும் மக்கோர்ட்டை அவர்கள் கண்டுகொள்ளவே இல்லை. வகுப்பில் மாணவர்கள் எழுதிக் கொண்டிருக்கும் தாளை வாங்கிப் படித்துப் பார்க்கிறார்கள். அவர்கள் இமைகளும் முகங்களும் சுருங்குகின்றன. போகும்போது மக்கோர்ட்டை அலுவலகத்தில் வந்து பார்க்கும்படி சொல்லிவிட்டுச் செல்கிறார் அதிகாரி. அச்சத்தோடு நடுங்கிக்கொண்டே செல்லும் மக்கோர்ட்டை அதிகாரி இருக்கை யிலிருந்து எழுந்துவந்து பாராட்டுகிறார். 'நீங்கள் கொடுக்கும் பயிற்சி புதுமையாக இருக்கிறது. மாணவர்களின் மொழித்திறமை கல்லூரிமாணவர்களின் திறமையளவுக்கு

(தொடர்ச்சி 40 ஆம் பக்கம்...)


MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher

For all grades from Grade 4 to 1st year of university

Special classes

- Advanced function
- Calculus & vectors
- Data management

All Classes available in Scarborough & Stouffville



Mr.S.F.Xavier (Teacher)

Contact: 647.340.9490 / 416.732.2228



எழுதுமட்டுவாள் மக்கள் ஒன்றியம் - கனடா

கோடை கால ஒன்கூடலும் பொதுக்கூட்டமும்

காலம்: ஆவணி 20 (August 20, 2017) ஞாயிறு காலை 10:00 மணிக்கு

இடம்: Colonel Danforth Park - Picnic Area 3, 73 Colonel Danforth Trail, Toronto, ON M1C 1P8 (Kingston Road & Lawson Road)

எழுதுமட்டுவாள் மக்கள் அனைவரையும் அதனைச் சூழவுள்ள ஓட்டுவெளி, விளுவளை, முகமாலை, கிளாலி, கரம்பகம் ஆகிய ஊர்மக்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

வீ. நடராஜா : 647.783.2193 / 416.335.0050 கு. சிவராஜா 416 893 2377

# Glory of Mathagal நூல் வெளியீடு

"தனித்தனியே ஊரெல்லாம் தம்பதிவை
மேற்கொண்டால்
தமிழீழ வரலாற்றின் தடைக்கற்கள்
நீங்கிவிடும்"



'மாதகல் மான்மியம்' என்ற நூலின் ஆங்கில மொழியாக்கமான Glory of Mathagal என்ற நூலின் வெளியீடு கடந்த 05-08-2017 சனியன்று தமிழ்ப்பூங்காவின் ஆதரவில் கனடாவில் ஸ்காபரோ நகரில் உள்ள 150 "பரோ றைவில்" அமைந்துள்ள நகரமண்டபத்திற் சிறப்பாக நடைபெற்றது.

விழாவின் தலைவராக திரு. அருண் அருள்சுப்பிரமணியம் அவர்களும், அறிவிப்பாளராக செல்வி நிதுஷா பரராசசிங்கம் அவர்களும் கடமையாற்றினர். விழாத் தொடக்கப் பாடல்களையும், மாதகல் எங்களூர் என்ற பாடலையும், "தேர் நகர வேண்டுமெனில் சேர்ந்தொன்றாய் வடம் பிடிப்போம்" என்ற பாடலையும் தமிழ்ப் பூங்கா மாணவர்கள் வழங்கினார்கள்.

நிகழ்ச்சிகள் இளையோர் பயன்பெறும் வகையில் ஆங்கிலத்தில் நடந்தேறின. பேராசிரியர் யோசெப் சந்திரகாந்தன் அடிகளார் அவர்களும், கவிஞர் கந்தவனம் அவர்களும் ஆசியுரை வழங்கினார்கள். வரவேற்புரையை தமிழ்ப்பூங்கா அதிபர் திருமதி. யோகா அருள்சுப்பிரமணியம் நிகழ்த்தினார். மாநகரசபை உறுப்பினர் திரு. நீதன் சண் அவர்களும், கல்விச் சபை உறுப்பினர் திரு. பார்த்தி கந்தவேள் அவர்களும், கனடா மாதகல் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் திரு. சே. சந்திரன் அவர்களும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் அவர்களும் சிறப்புரை வழங்கினர்.



நூல் பிறந்த கதைபற்றி நூலாசிரியர் சபா. அருள்சுப்பிரமணியம் கூறினார். மொழி பெயர்ப்பாளர் திரு. றேமன்ட் ராஜபாலன் அவர்கள் நூலாசிரி யரால் கௌரவிக்கப் பட்டார். பின்பு மொழிபெயர்ப்பாளர் தனது கருத்துகளை வழங்கினார்.

நிகழ்வின் சிறப்பு நிகழ்ச்சியாக மாதகலைச் சேர்ந்த இளையோர் நூல் பற்றிய கருத்துகளை வழங்கினார்கள். அவ்வாறு கருத்துரை வழங்கியோர்:

1) செல்வி நிதுஷா பரராசசிங்கம்
2) செல்வி. கனிஷா தேவபாலன்
3) செல்வன். நிரூஷ் பாலசுப்பிரமணியம்
4)செல்வி. மனீஷா சுரேஸ்குமார்
5) செல்வி. கீர்த்தனா கடம்பமூர்த்தி

நூல் பற்றிய அறிமுகவுரை திரு. இராஜ்குமார் குணரட்ணம் அவர்களால் வழங்கப்பட்டது. நூல் குறித்த ஆய்வுரை அறிஞர் சாமி அப்பாத்துரை அவர்களால் வழங்கப்பட்டது. நூலின் கௌரவப்படியை திருமதி (மாதகல்) கண்ணன் அவர்கள் பெற்றுக்கொண்டார். கனடா மக்கள் விளையாட்டுக் கழகம் முன்மாதிரியாக 500 டொலரை வழங்கி 25 பிரதிகளைப் பெற்றுக் கொண்டது. நூல் வெளியீட்டிற் கிடைத்த பணம் மாதகல் கல்வி அபிவிருத்திச் சபைத் தலைவருக்கு மாதகல் அபிவிருத்திக்குப் பயன்படுத்த அனுப்பப்பட்டுள்ளது.

தொடர்புக்குரிய மின்னஞ்சல் முகவரி:
arul.saba25@gmail.com
சபா. அருள்சுப்பிரமணியம் - 905.479.5375



நகைச்சுவைத் தொடர் 357

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



ராமன் இல்லாத அயோத்தியா? சிவனில்லாத சிதம்பரமா?
றொனால்ட் ட்றம் இல்லாத வைற் ஹவுசா?
ஓவியா இல்லாத பிக் பொஸ்சா..?



போர்க் காலத்தில் பங்கரில் இருந்தது. உணவின்றி இருந்தது.
மாற்றுடையின்றி மரங்களின் கீழ் மாதக்கணக்கில் இருந்தது.
பாதுகாப்புவலயம் எனக்கூறி நாள் வாரம் மாதம் வருடம் என திக்குதிசை
தெரியாத இடங்களில் இன்றுவரை தமிழ் அகதிகள் எங்கென்று
தெரியாமல் இருக்கும் அதிர்சியை விட ஓவியா
வெளியேறியது பெரிய அதிர்ச்சியாக இருக்கிறது.



ஊரெல்லாம் உன்பாட்டுத்தான். எபிக் பொஸ் என்பது போல
எங்கும் ஓவியா அலைதான்.
வடகொரியா அமெரிக்காவை மிசெலால் தாக்கினால் என்ன?
மிதிவெடியால் தாக்கினால் என்ன ?
வட்ஸ்அப் வரதர் இத்தனை அமளிக்குள்ளும் தனது கடமையில்
கண்ணாக இருந்தார். பல படங்களை வட்ஸஅப் இல் லோட் பண்ணுவதில்
ரொம்ப பிஸி. இருந்தாலும் கதையை குறைக்கவில்லை.





உலகண்ணை என்னை 15 வருசத்துக்கு முதல் ஏஜென்ட் கட்டுநாயக்காவிலை
அமரசேனா என்ட பெயரிலை அனுப்பேக்குள்ளை சொன்னவன் வரதா!
நீ கண்விழிச்சா கனடா...... கால்சறுக்கினா கொறியா எண்டு....
நல்லகாலம் அப்பிடியொண்டும் நடக்கேல்லை. கொறியாவிலை பிடிபட்ட கனபேருக்கு
என்ன நடந்ததெண்டு தெரியாது. இப்ப அமெரிக்காவிட்டை நல்லா வாங்கித்
தெளியப்போயினம் என தனது அரசியல் அறிவை வெளிப்படுத்தினார்.



கனேடியப் பிரதமர் நீரிலே விளையாடுகிறார்.
தீயணைப்பு படையினர் காட்டுத்தீயுடன் போராடுகிறார்கள்.
ரஸ்யப் பிரதமர் விடுமுறையில் மீன் பிடிக்கிறார்.



இந்தியப் பிரதமர் மோடி ஒருபுறம் பேச்சுவார்த்தை நடத்தினாலும்
போடரில் ரென்சன் கூடிக்கொண்டேயிருக்கிறது.
இலங்கை கடற்படை இந்திய மீனவர்களைப் பிடிக்கிறது.
அமெரிக்க ஜனாதிபதி விடுமுறைக்கு கோல்வ் விளையாடுகிறார்.
அமெரிக்காவிலிருந்து வரும் அகதிகள் மொன்றியலில் ஒலிம்பிக் விளையாட்டரங்கத்தில்
தங்கவைக்கப்பட்டுள்ளனர்.
உலகில் அகதிகள் வாழ்வு விளையாட்டாகப் போய்விட்டது .



அளவோடு உண்டு வளமாக வாழுங்கள் என இன்று பல உடல் நல
கருத்தரங்குகளில் கூறிவருகின்றனர்.
மருந்தும் விருந்தும் மூன்று நேரமென்றனர். அதன் கருத்து 3 நேரமும்
மூக்குபிடிக்க உண்பதல்ல.
அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு..என எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே
சொல்லிவைக்கப்பட்டுள்ளது. அமிர்தமே விசமாகுமானால்?



இன்று சட்டப்படியும் சட்டவிரோதமாகவும் எழிதில் கிடைக்கும் போதை
வஸ்துக்கள் எவ்வளவு கொடியவை?
உலகில் தினமும் எத்தனை இறப்புக்கள். அதுவும் அளவுக்கதிகமாகப்
போதை மருந்துப் பாவனை ஓவர்டோஸ்.

இதனை எப்படி நிறுத்துவது என அவசர கூட்டங்கள் போட்டு ஆலோசனை
செய்கின்றன.
தொட்டிலை ஆட்டுவதும் நீங்கள் பிள்ளையை கிள்ளுவதும் நீங்கள்.

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
செய்வம் என்பது இழுக்கு -திருக்குறள்




செப்ரெம்பர் பாடசாலைகள் ஆரம்பம்

ஆகஸ்ற் 1 - 15



16. ராமகிருஸ்ண பரமஹம்சர் நினைவு தினம். (பெப்ரவரி 18.1836 –
ஓகஸ்ட் 16.1886) சுவாமி விவேகானந்தர் இவரிடம்தான் சீடராக இருந்தார்.
அனைத்து மதங்களும் ஒரே இறைவனை அடையும் வெவ்வேறு வழிகளே
என்பதை தன் அனுபவங்கள் மூலம் உணர்ந்து அதையே வலியுறுத்தியவர்.



19. உலக புகைப்படநாள்.

20. ஆவணி ஞாயிறு.



22. ஜாக் லெக்ரன் (Jack Jayton NDP) நினைவு தினம் 2011

22. டி.எஸ். பாலையா பிறந்த தினம் (ஆகஸ்ற் 22.1941 _ டிசம்பர் 21. 1972)
ஆரம்பகாலத்தில் வில்லனாக நடித்தவர். பின்னர் நகைச்சுவைப்பாத்திரத்தில் முத்திரை
பதித்தவர். (காதலிக்க நேரமில்லை, தில்லானா மோகனாம்பாள், திருவ-
ிளையாடல் பாலையாவை மறக்க முடியுமா?)



25. "அருள்மொழி அரசு" "திருப்புகழ் ஜோதி" திருமுருக கிருபானந்த வாரியார்
சுவாமிகள் பிறந்த தினம். (ஆகஸ்ற் 25, 1906 - நவம்பர் 07, 1993)



31. இளவரசி டயானா நினைவு தினம். (1997)

## கனேடிய வதிரி மக்கள் ஒன்றுகூடல்

உணவு, உல்லாசம், கேளிக்கை நிகழ்வுகள்

காலம்: 26.08.2017 சனிக்கிழமை காலை 10:00 மணி முதல்
இடம்: மிலிக்கன் பார்க் ஏரியா சீ (மக்கோவன், ஸ்ரீல்ஸ்)

வதிரி மக்கள் அனைவரையும் தவறாது
பங்குபற்றுமாறு அழைக்கின்றோம்.

## ஒரு புதிய...

38 ஆம் பக்கத்தொடர்ச்சி

உள்ளது. இப்படித்தான் இறங்கிவந்து சொல்லித்தரவேண்டும். உங்கள் கோப்பில் ஒரு பாராட்டுக்கடிதம் வைக்கிறேன்' என்று சொல்லிவிட்டு முதுகில் தட்டிக் கொடுக்கிறார்.

இப்படி ஏராளமான அனுபவங்கள். ஒவ்வொன்றும் சுவையான பதிவுகள். ஓர் ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து சத்தம் போடுவதால் அல்லது திட்டுவதால் அவர்களை நிரந்தரமாக இழக்க நேரிடும். சலனமற்று மௌனமாக அவர்கள் வகுப்பறையில் உட்கார்ந்திருப்பது ஆசிரி யரைத் திருப்பியடிபதற்குச் சமமாகும். வகுப்பறையே அத்துடன் முடிந்துபோகும் என்பது மக்கோர்டின் வாக்கு. தனித்து விலகி மௌனமாக இருப்பதைவிட சேர்ந்து கூடி முரண்பட்டு விவாதிப்பது நல்லது என்பது அவருடைய நிலைபாடு. ஒவ்வொரு வருடமும் முடியும்போது அந்த வகுப்பறையில் நிச்சயம் ஒருவனாவது ஏதோ சிலவற்றைக் கற்றுக்கொள்கிறான். அந்த ஒருவன் நான்தான் என்று நினைக்கும் மனப்பாங்கு மக்கோர்டிடம் இருந்தது. 'இன்றைக்கு பாடம் மிகவும் நன்றாக இருந்தது என எந்த மாணவனும் வெளிப் படையாகச் சொல்லமாட்டான். கூச்சம் அவர்களைத் தடுக்கும். ஆனால் வகுப்பு முடிந்து வெளியேறும்போது அங்கீகரிக்கும் பார்வையோடு அவர்கள் ஆசிரியரைப் பார்த்தபடி செல்வார்கள். அந்தப் பார்வை மிகவும் இதமானது. ஒரு நல்ல ஆசிரி யருக்கு ஊக்கம் தரக்கூடிய ஊற்றுக்கண் அது' என்று மக்கோர்ட் எழுதியிருக்கும் குறிப்பு மிகவும் முக்கியமானது.

மக்கோர்ட் எனக்கு எங்கள் பள்ளியாசிரியர் களை நினைவூட்டுவதுபோல, இந்த நூலைப் படிப்பவர்களுக்கு அவரவர் களுடைய ஆசிரியர்களைப்பற்றிய நினைவுகளை எழுப்பக்கூடும். அப்படி பழைய நினைவுகளில் தோய்வதுகூட ஒருவகை இன்பம். எழுபது பக்க நூலில் மக்கோர்டின் புத்தகத்தை வாசித்துத் தான் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொண்ட மாடசாமியின் சொற்கள், நம்மை மக்கோர்டை நோக்கிச் செலுத்தும் சக்திகொண்டவையாக உள்ளன.





Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
$5 Free Lycachat credit when you download
Lycachat
ஒருவருட இணைப்புச் சந்தா
$99 மட்டுமே
SET TOP BOX INCLUDED
புதுப்பித்தல்
15 மாதங்கள்
$99 மட்டுமே
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
பன்னாட்டு நேரங்களில் உங்கள் மனங்கவர்ந்த தொலைக்காட்சி அலைவரிசைகள்
INDIA CANADA USA
INCLUDED
TENTKOTTA
EROSNOW
சிவலிங்கா
கடம்பன்
காஷ்மோரா
மாநகரம்
BAJIRAO MASTANI
SANAM TERI KASAM
DISHOOM
7000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்
iPhone & iPad
Tablet & Mobile
Download on the App Store
GET IT ON Google Play
உங்கள் MOBILE DEVICE இல்
TENTKOTTA மற்றும் EROSNOW Apps ஐ
download செய்து திரைப்படங்களை
பார்த்து மகிழுங்கள்
Google play
Download on the App Store
ROKU
AirPlay
chromecast
Samsung SMART TV
LG Smart TV
androidtv
amazon fireTV
kindle fire
XBOX
SALES
647 968 1087
CUSTOMER SERVICE
647 931 1745
www.lycatv.tv
FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCA MEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCA MEDIA LTD. THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.

Ajax

CREMATORIUM & VISITATION CENTRE INC.

Crematorium Operated by Park Lawn Corp.

# Now Open in Ajax

## New Crematorium / Visitation Centre



**Serving our Community at:**

**384 Finley Avenue Ajax, ON L1S 2E3**

**Tel: 289-372-3300 / *info@acvc.info***

## பார்வைக்கு வைக்கும் இடமும் தகனம் செய்யும் இடமும் ஒரே இடத்தில் அமைந்துள்ளது

- 500 பேர்வரை அமரக்கூடிய விசாலமான சகல வசதிகளுடன் கூடிய மண்டபம்.
- ஒரே இடத்தில் குறைந்த செலவுடன் நிறைந்த மன திருப்தியுடன் உங்களது அன்புக்குரியவரின் இறுதிக்கிரிகைகளை உங்களது சமய முறைப்படி நிறைவேற்றலாம்.
- தகனக்கிரிகை ஞாயிற்றுக் கிழமைகளிலும் நிறைவேற்றலாம்.
- 250 ற்கு மேற்பட்ட வாகனத்தரிப்பிட வசதி.
- வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.




FOR ALL YOUR MORTGAGE NEEDS
Access over 30 lenders with one application
Best Rates & Advice You Can Trust!
Purchase
Refinance
Renewal
PRE-QUALIFIED
PRE-APPROVED
Dedicated and knowledgable team...
Provide you with the best solutions for 1st and 2nd Mortgage...
Our commitment to you is to provide with the very best...
Pradeepraj Mani
Mortgage Agent
LIC# M14001956
416.997.3862
np_57@hotmail.com
Gaya Kathir
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
416.806.2274
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca
MORTGAGE ALLIANCE































விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

